# சந்தித்த வேளையில்...

சிரிப்பு அலை அலையாய் புரள்கிறது சஞ்சனாவிற்கு.

''அப்படி என்ன நான் சொல்லிட்டேன்னு உனக்கு இப்படி சிரிப்பு வருது? எதெற்கெடுத்தாலும் சிரிப்பு தான்'' தலையில் அடித்துக் கொண்டார் வசுந்தரா.

''இல்லம்மா, நீங்க சொன்னதுக்கு இல்லை. நான் வீட்டிற்கு வரும் போது, ஒரு காலேஜ் ஹீரோ, பைக்லே என்னை இடிக்கறாப்ல வந்து... பயம், பயம் காட்டுகிறானாம்! ம்ம... ஹா... சரிந்து வளைந்து எனக்கு சாகஸம் காட்டும் போது, அப்படியே பைக் ஸ்கிப் ஆகி.... டேய் பரத் நீயும் பார்த்தியே, சொல்லேண்டா'' என்று தம்பியையும் அழைத்து மறுபடியும் வயிற்றை பிடித்துக் கொண்டு சிரித்தாள் சஞ்சனா.

''ம்ம்... அக்கா எங்கே போனாலும் எஸ்கார்ட் இரண்டு பேரு போட்டுறது பெட்டர். ஒருத்தன் கண்ணும் ஒழுங்கா இல்லை'' என்று முணுமுணுத்தான் பதினொன்றாம் வகுப்பு படிக்கும் பரத்.

''பாவம்டி அந்த பையன். அடிகிடி பட்டுச்சோ என்னவோ?''

''ச்சு... அதெல்லாம் இல்லைம்மா, அவனுக்கு ஒரே அவமானம். நான் சும்மாவா நிற்பேன். எனக்கு அங்க வைச்சே சிரிப்பு பொத்துக்கிட்டு வந்திருச்சு. நான் சிரிச்ச சிரிப்பில் அவன் முகத்தைப் பார்க்கணுமே''- மறுபடியும் சிரிப்பு பீறிட்டது அவளுக்கு.

''பாஞ்சாலி சிரிச்சா... அதனால் அந்த குடும்பம் பட்ட கஷ்டம் இந்த நாட்டுக்கே தெரியும். என்ன இருந்தாலும் பெண் என்பவள் கொஞ்சம் அடக்கித் தான் வாசிக்கணும்டா''

''அந்த குடும்பத்துக்கு கஷ்டம் வந்தது பாண்டவர்கள் சூதாடுனதாலேதான்மா, பண்ணறதையெல்லாம் பண்ணிட்டு, எல்லாம் பெண்ணாலதான்'னு தலையிலே கட்டிடுவீங்களே'' என்று கன்னம் குழிய சிரிக்கும் அழகு மகளை கவலையோடு பார்த்தார்.

இந்த கலகலப்பு, சிரிப்பு எல்லாம் கல்யாணத்தைப் பற்றிய பேச்சை எடுத்தால் துணி கொண்டு துடைத்தாற் போல மறைந்து விடும்.

கடந்த சில வருடங்களாக, அடிக்கடி இல்லையென்றாலும், சில நேரங்களில் ஆசை மகளின் கண்களில் தெரியும் வெறுமையின் காரணம் மட்டும் புரியவேயில்லை. என்ன ஏது என்று கேட்கும் படி விடவும் மாட்டாள். அடுத்த நொடியே வெள்ளைச்சிரிப்புடன் ஏதாவது சொல்லி மயக்குவாள்.

சஞ்சனா அவர்களுக்கு ஒரே செல்லப் பெண். அவளுக்கு அடுத்த ஐந்து வயது வித்தியாசத்தில் பரத். கல்யாணமாகி நான்கு வருடம் குழந்தையில்லாமல், எல்லா கோவில் படியும் ஏறி, விரதம் இருந்து பெற்ற

சித்ரா பாலா



பெண்ணான சஞ்சனா மீது பெற்றோர் இருவருக்கும் தனி பிரியம் இருந்தது. யாராலும் மறுக்க முடியாத உண்மை.

பெண்ணும் அப்படி வடித்து வைத்த சிலைபோல துருதுரு கண்களும், மின்னலடிப்பது மாதிரியான சிரிப்பும், கண்ணன் பெண்ணாக பிறந்து விட்டானோ என்று வியக்கத் தோன்றும் படியான குறும்புகளும் நினைக்க நினைக்க தெவிட்டாது அவருக்கு.

படிக்க வேண்டிய வயதில் படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். படிக்க வைத்தார்கள். பி.ஈ. படித்து விட்டு மேலும் படிக்க வேண்டும் என்றாள். சரி என்று அதையும் ஆமோதித்தார்கள். எம்.பி.ஏ. பைனான்ஸ் எடுத்து, மிகவும் ஆர்வமாக படித்தாள். நல்ல மதிப்பெண்களுடன் பெற்றவர்களுக்கு பெருமை தேடித்தந்தாள். அவள் விஷயத்தில் எப்பொழுது பெற்றவர்களான அவர்களுக்கு நிறைவு தான்.

இனி வாழ்க்கையின் அடுத்த கட்டம் திருமணம். திருமண பேச்சை எடுத்தால் மட்டும் அவளுக்கு பிடிக்காமல் போனது. இல்லை என்றாள், வேண்டாம் என்றாள், மாட்டேன் என்றாள். விட்டு விடுங்கள் என்றாள். ஒவ்வொரு முறையும் அவளின் ஒவ்வொரு விதமான மறுப்பில் தாயின் நெஞ்சு பிசைந்தது.

யோசித்து விட்டு அவளின் தோழியரை விசாரித்தால், ''அவளுக்கு காதல் கல்யாணம் என்று இதில் எல்லாம் அவ்வளவு நாட்டமே காட்ட மாட்டாள் ஆண்ட்டி. என்னை விட்டா கல்யாணமாகி செட்டில் ஆகி விடுவேன். கொஞ்சம் வீட்டில் வந்து எங்க அம்மாவிற்கு அட்வைஸ் பண்ணுங்களேன். இன்னும் இரண்டு, மூன்று வருஷம் கழிச்சு தான் எனக்கு கல்யாணம் பேச போறாங்களாம். இப்ப வாழ்க்கையை என்ஜாய் பண்ணட்டும்னு அவுங்களே டிசைட் பண்றாங்க'' என்று அலுப்பும் கிண்டலும் சேர்ந்து சொன்ன ஹரிணியின் தோரணையில் அந்த நேரம் வசுந்தராவிற்கு சிரிப்பு தான் வந்தது.

சஞ்சனா பற்றி கணவர் பிரபாகரனுடன் கலந்தாலோசித்து பின் மிகத் தீவிரமாக சஞ்சனாவிடம் இருவரும் பேசினார்கள். 'சஞ்சு ரொம்ப நல்ல இடத்திலிருந்து மாப்பிள்ளை அலையன்ஸ் வருகிறது. உன் அம்மாவின் சொந்தத்திலிருந்து ஒரு பையன், எனக்கும் ரொம்ப பிடிச்சிருக்கு. உனக்கும் நல்லா பொருந்தி வருவான்னு தோணுது. ஜாதகம் கூட நல்லா மேட்ச் ஆகியிருக்கு. அமெரிக்காவில் பெரிய பிரைவேட் கம்பெனியில் கன்சல்ட்டண்ட் ஆக இருக்கான். என்ன சொல்லறே'' முடித்தார் அவர்.

தந்தையை நிமிர்ந்து பார்த்து விட்டு, கைகளில் அணிந்து இருந்த வளையல்களுடன் விளையாடினாள் சஞ்சனா. இது என்ன அவஸ்தை என்று அவள் மனம் நினைத்ததை முகம் காட்டிக் கொடுத்தது. பலவிதமான ஞாபகங்கள். அவள் மனம் அச்சமயம் பல மடங்கு வேகமாக உற்பத்தி செய்ய, ஆனால் பெற்றோரின் தீவிரம் உணர்ந்து தன்னை சமாளித்துக் கொண்டாள். ஆழ்ந்த நீண்ட மூச்சை விட்டு,

''இல்லப்பா, நான் வேலைக்கு போகலாம்ன்னு இருக்கேன். எனக்கு, இந்த கல்யாணத்திலெல்லாம் ஆசை கிடையாது''.

''எங்களுக்கு நெஞ்சு முட்ட ஆசையிருக்கே. இதில் உனக்கென்ன பிரச்சனை''



''பிரச்சனையொன்றுமில்லை. ஆனால் கொஞ்சம் பொறுத்து கல்யாணம் செய்து கொள்கிறேனே. இப்ப என்ன அவசரம்? ரோஸ்கார்ட் மோட்டார்ஸ்'க்கு வேலைக்கு அப்ளை பண்ணி...''

சஞ்சனாவை பேசி முடிக்க விடவில்லை வசுந்தரா.

''அதனால் என்ன? கல்யாணம் பண்ணிட்டு வேலைக்கு போகலாமே''

''இல்லம்மா. இப்ப எனக்கு கல்யாணம் வேண்டாம்'' உறுதியாக பதில் வந்தது.

''கல்யாண பேச்சு கூடி வரும் போது நிராகரிப்பது முட்டாள் தனம் சஞ்சு'' என்று கெஞ்சலாக வசுந்தரா சொன்ன பின்பும், சஞ்சனா தன் முடிவில் திடமாக இருக்க, கோபம் வந்தது வசுந்தராவிற்கு.

''என்னோட முடிவும் கேட்டுக்கோ சஞ்சு, இந்த ஒரு கண்ட்ஊவுக்கு மட்டும் தான் நீ போறே. அங்கே வேலை கிடைக்கவில்லை என்றால் உடனே கல்யாணம். நாங்கள் பார்க்கிற மாப்பிள்ளைக்கு நீ கழுத்தை நீட்டணும் ஓ கே வா?

சின்ன இதழ் சிரிப்புடன் தாயை நோக்கினாள் சஞ்சனா.

''அவள் தகுதிக்கு கண்டிப்பாக வேலை கிடைக்கும். அந்த நினைப்புடன் ''உங்கள் இஷ்டம்'' என்று பெருந்தன்மையாக சொல்வதை போன்ற பாவனையுடன் சஞ்சனா சொல்ல, வசுந்தரா முறைத்தார்.

## 2

''சஞ்சு'' என்ற தாயின் அழைப்பில் படித்துக் கொண்டிருந்த புத்தகத்திலிருந்த கண்களை மலர்த்தினாள் சஞ்சனா.

''ரோஸ்கார்ட் மோட்டார்ஸ்'' நிறுவன முதல் கட்ட ரிட்டர்ன் எக்ஸாமில் வந்திருந்த ஐநூறு பேரில், தேர்ந்தெடுக்கப்பட்ட பதினைந்து பேரில் சஞ்சனாவும் ஒருத்தி. இரண்டாம் கட்ட குரூப் டிஸ்கஷனில் அதிக மதிப்பெண் பெற்று இறுதிப்போட்டிக்கு செலக்ட் ஆனவர்கள் சஞ்சனாவும், ஜோதி என்ற மற்றொரு பெண்ணும் மட்டுமே. எப்படியும் வேலையில் நுழைந்து விட வேண்டும் என்று முழு முயற்சியுடன் தன்னை அவள் தயார்ப்படுத்திக் கொண்டிருக்க, இந்த அம்மா... நிமிடத்திற்கு ஒரு முறை எதையாவது சொல்லிக் கொண்டு வந்து விடுகிறார்கள் என்று அலுத்தாள் மகள்.

''ஞாபகமிருக்கட்டும் இந்த வேலை கிடைக்கவில்லை என்றால், நாங்கள் பார்க்கிற மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்டணும்'' நேரம் கிடைக்கும் போதெல்லாம் சொல்லிக்காட்டி விடுவார் வசுந்தரா.

''நீங்க பேசறதைப் பார்த்தால் அங்கே போய், எனக்கு வேலை கிடைக்காமல் இருக்க ஏதேனும் சதி செய்து வீடுங்க போலிருக்கே?''

''இந்த ஐடியா தோணவேயில்லை... முயற்சி பண்ணிப் பார்க்கட்டுமாடா?'' என்று செல்லமாக சொல்லி கண்களை சிமிட்டினார் வசுந்தரா.

தாயிடம் இருக்கும் தீவிரத்தில் செய்தாலும் செய்வார் என்று உள்ளுணர்வு எச்சரிக்க, சுட்டு விரலால் 'பத்திரம்' என்று செய்கை காட்டினாள்.

சிரித்து விட்டார் வசுந்தரா. மகளின் தலையை ஆசையாக வருடிய படி, ''சரி சரி படி, நல்லா படி''!



''லேடீஸ் கிளப்லே மீட்டிங் இருக்காம். நான் கிளம்பறேன். அப்பா 'லஞ்ச்' சாப்பிட வரேன்னு சொல்லியிருந்தாங்க! டேபிள்லே எல்லாம் எடுத்து வெச்சிருக்கேன். பரிமாறி கொடும்மா. தம்பி வந்தால், படிக்கறானா என்று கொஞ்சம் பார். பரீட்சை வருகிறது எப்போதும் கிரிக்கெட் பேட்டும் பாலுமாகத் தான் அலைகிறான்.

தாய் கிளம்பயதும் வாசற்கதவை மூடிவிட்டு மீண்டும் படிக்க அமர்ந்தாள். அதற்குள் டெலிபோன் மணி அடிக்க எடுத்தாள். மறுமுனையில் அவள் தோழி ஹரிணி.

''ஹாய் சஞ்சு, எப்படியிருக்கே? ஒரு ஹாப்பி நியூஸ்! எனக்கு கல்யாணம் ஃபிக்ஸ் ஆயிடுச்சு.''

''ஓ... கங் ராட்ஸ். யார் அந்த அதிர்ஷ்டசாலி?''

''எல்லாம் மாமா பையன் தான். இரண்டு மாசத்திலே கல்யாணம். கல்யாணம் முடிந்தவுடன் அமெரிக்கா. அவரும் மேனேஜ்மெண்ட் ஸ்டுடண்ட் தான். அதனால அவர் அலுவலகத்திலே எனக்கும் மோஸ்ட்லி வேலை கிடைத்து விடும் என்று நினைக்கறேன்''

''தாட்ஸ் குட்''

''நீ சொல்லு. 'உன்னைப் பற்றி உங்க மம்மி நிறைய கம்ப்ளைண்ட் சொல்லியிருக்காங்க. என்ன ஆச்சு சொல்லு''

வசுந்தராவின் லேட்டஸ் புலம்பல் என்னவென்று சஞ்சனாவிற்கு தெரியும் என்பதால் விளக்கமாக என்ன என்று கேட்க தேவையிருக்கவில்லை.

''அதை விடு. நான், ஜாப் டிரை பண்ணிட்டுயிருக்கேன்''

''நம்ம செட்டிலே, ராகவ், ஷ்யாம், தாரிகா எல்லோரும் ஒரே கம்பெனியில் சொல்லி வைத்து வேலையில ஏறிட்டாங்க தெரியுமா? சஞ்சு''

''ம்ம் நேற்று மூன்று பேரும் போன் செய்தார்கள். பட் அது என்னோட லைன்யில்லை ஹரிணி''

''உன்னோட புத்திசாலித் தனத்திற்கும், மார்க்கிற்கும் இதை விட பல மடங்கு பெரிய கம்பெனியில் சேருவாய், உயர்வாய்...''

''அட, பெரிய பாட்டி மாதிரி பேச்செல்லாம் பிரமாதமாக இருக்கிறது. கல்யாணம் நிச்சயம் ஆகி விட்டதால் பெரிய மனிஷி ஆகி விட்ட



''என் மக ஷூட்டிங்லேயிருந்து வந்ததுமே டெலிவரி ஆயிடுச்சுங்க!''

''பெண் குழந்தையாமே? 'தொப்புள்' யார் ஜாடையா இருக்கும்மா?''

- கிரிஜா மணாளன்.

தாக நினைப்பா?''
புன்னகை தவழ கேட்டாள் சஞ்சனா. கொஞ்ச நேரம் அரட்டையில் நேரம் சுகமாக பறந்தது.

போனை வைத்தவுடன் படிப்பில் சிறிது நேரம் கழிந்தது. படித்து முடித்ததும் கிடைத்த அந்த சில மணி நேரத்தனிமை அவளை அலைக் கழித்தது. யாருடனும் பகிர்ந்துக் கொள்ள முடியாத கடந்த காலம், நெருஞ்சி முள்ளாய் சுருக் சுருக் என்று குத்தியதில் நெஞ்சு வேதனையால் தகித்தது. இதற்குத்தான்... இதனால் தான், கூடுமான வரையில் தனிமை யில் இருப்பதைத் தவிர்த்து விடுவாள். என்னேரமும் தன்னை ஏதாவது வேலையில் மூழ்கடித்துக் கொள்வாள்.

எத்தனையோ செயல்திறத்துடன் தன்னை ஈடுபடுத்தி கவலையற்ற அந்த வயசுக்குரிய மகிழ்ச்சியோடு தோன்றும் பெண்ணாக காட்டிக் கொண்டாலும், அவளின் அடி மனதில் அழியாமல் இருந்த நாடகங்கள், ஆறாத ரணமாக, அவமானமாக இருந்தது.

அவள் இருக்கும் இடத்தில், அரட்டைக்கும் கலகலப்பிற்கும் குறை விருக்காது. இத்தனையும், அவள் நெஞ்சில் வாங்கியிருந்த அடியை மறக்க முயன்றாள். இந்த ஐந்து வருடத்தில் அது மட்டும் முடியவில்லை. ரணம் அவமானம். நிராகரிக்கப்பட்ட அவமானம்!

சட்டென்று எழுந்தாள் சஞ்சனா.

இந்த நினைவுகளின் போக்கில் இன்னும் கொஞ்ச நேரம் அமர்ந்தி ருந்தால் டிப்ரஷனில் தான் கொண்டு விடும் என்று புரிந்து தோட்ட வேலை செய்யலாமா? என்றபடி வெளியே வந்தாள்.

மத்தியான வெயில் சுள்ளென்று அடிக்க, மனதை மாற்றினாள். அதற் குள் பிரபாகரும், பரத்தும் வந்து விட சிறிது நேரம் அவர்களுடன் நிம்மதி யாக கழிந்தது.

இன்று மனம் ஏனோ நிம்மதியற்று தவிப்பது புரிந்து வசுந்தரா வந்த வுடன், ''அம்மா சித்தி வீட்டுக்கு போயிட்டு வரேன். வீட்டிலே ஒரே போர்''- என்றபடி கிளம்பி விட்டாள்.

அருணாவிற்கு ஆறு மாதம் முன்பு ஒரே பிரசவத்தில் மூன்று பிள்ளை கள் பிறந்ததிலிருந்து சஞ்சனாவின் பெரும் பொழுது அங்கே தான் கழிந் தது.

அங்கே குழந்தைகளை கண்டு விட்டால், உலகமே மறந்து விடும் அவ ளுக்கு. அவள் நெஞ்சின் வேதனை உட்பட.

## 3

காலையில் இருந்தே வீடு பரபரப்பாக இருந்தது.

சஞ்சனாவின் வேலைக்கான கடைசி கட்ட இண்டர்வ்யூ நாள். பரத்தின் அரையாண்டு தேர்வு தொடக்கம் என்று வீட் டில் சின்ன சலனம் இருந்தது.

நேர்முக தேர்வுக்கு என்று எடுத்து வைத்திருந்த, லைட் 'பிங்க்' கலர் சிக்கன் ஃவொர்க் செய்த கார்ட்டன் சுரிதாரில் ரெடியானாள் சஞ்சனா.



''இப்பொழுதெல்லாம், வெப் கேமிராவில், வீட்டில் இருந்தபடியே இண்ட்டர்வ்யூ பண்ணறாங்களாமே அக்கா? உனக்கு அப்படியில் லையா?'' பரத் கேள்வி கேட்க,

''நிறைய ஐ.டி. நிறுவனங்களில் நடப்பது தான். நான் இண்டர்வ்யூ போவது இந்தியா பேஸ்ட் கம்பெனி! அதுவும் நம்ம சென்னை தான் நிறு வன மையம். அதனால் நேரடி இண்டர்வ்யூ வசதி தானே.''- என்று தம்பி யிடம் சொல்ல, வசுந்தராவும் வந்து வாழ்த்து சொன்னார்.

பிரபாகர், ஆபீஸ் போகும் வழியில் அவளை இண்டர்வ்யூ நடக்கும் இடத்தில் இறக்கி விடுவதாக சொல்ல,

அவருடன் காரில் ஏறினாள் சஞ்சனா.

''இன்ப்ளுயன்ஸ் இல்லாமல் இந்த மாதிரி பெரிய இடங்களில் வேலை கிடைக்குமா சஞ்சு'- பிரபாகருக்கு தெரியும், 'ரோஸ்கார்ட் மோட் டார்ஸ்' கடந்த ஐந்து வருடத்தில் மிகப்பெரிய சிகரத்தை தொட்டு, வளர்ந்து வரும் நிறுவனம், முதலில் சின்ன அளவில், பெயர் வெளியே தெரியாத அளவு செயல்பட்ட நிறுவனம், ஆனால் இப்பொழுது நிறைய யூத் ப்ரஷ்னசுடன் முழு வீச்சில் பிரம்மாண்டமாக உயர்ந்துள்ளது.

கார் 'ஸ்பேர் பார்ட்ஸ்' தயாரித்து, அதை மிட்சுபிச், ஹோண்டா, டொயோட்டா என்று பெரிய பெரிய கார் கம்பெனிகளுக்கு சப்ளை செய் கிறார்கள். பெருமளவு ஏற்றுமதியும் ஆனது.

''இன்ப்ளுயன்ஸ் ஓர் அளவுக்கு உதவும் தான் அப்பா. ஆனால் உண் மையான தகுதிக்கென்று எங்கேயும் தனியிடம் உண்டு என்று நீங்களே சொல்லியிருக்கீங்களே''

''ம்ம்... சரி தான். ஆல் த பெஸ்ட்''- என்று அந்த நிறுவன அலுவல கம் முன்பு மகளை இறக்கி விட்டார் அவர்.

கண்ணாடிகளால் ஆன ஏழு மாடி ஹை-டெக் கட்டிடம். செக்யூரிட் டிகள் அடித்த சல்யூட்டை ஏற்று உள்ளே நுழைந்தாள் சஞ்சனா. கட்டிடம் முழுவதும் ஏ.சி. செய்யப்பட்டிருந்தது.

வரவேற்பு பெண்களில் ஒருத்தி சஞ்சனா வரவேற்பு ஹாலில் நுழைந் ததுமே புன்சிரிப்புடன் விசாரித்து விட்டு, அழைத்துக்கொண்டு இரண் டாம் மாடிக்குச் சென்றாள்.

சஞ்சனா கொடுத்திருந்த நேரத்திற்கு அரைமணி முன்னதாகவே சென் றிருந்ததால், அங்கிருந்த ஒரு ஏ.சி. ஹாலில் சஞ்சனாவை அமர வைத்து விட்டு அந்த பெண் சென்று விட்டாள்.

உள்ளுக்குள் படபடப்பாக இருந்தாலும், சஞ்சனாவின் முகம் தெளி வாக இருந்தது. படிப்பை பொறுத்தவரையில் சஞ்சனா புலி தான். மிக வும் நன்றாகவே தன்னை தயார் படுத்தி வந்திருந்தாள். அதுவும் அவள் பிரசன்டேஷன் முறை மிகவும் கவர்ந்திழுக்கும். காலேஜ் செமினார் போதெல்லாம், முதல் மதிப்பெண்ணுடன் பாராட்டும் அவளுக்கு குவி யத்தான் செய்யும்.

குடிக்க காஃபி கொண்டு வந்து வைத்து விட்டு போனான் ஒருவன்.

சரியாக குறிப்பிட்ட நேரத்தில் அவளை இண்டர்வ்யூ நடக்கும் அறைக் குள் செல்ல கதவை திறந்து விட்டான் மற்றொருவன்.



அந்த விஸ்தாரமான பெரிய அறையின் நடுவில் இருந்த மேஜையின் பின்புறம் வரிசையாக சுழல் நாற்காலியில் அமர்ந்திருந்த ஐவருக்கும் பொதுவான காலை வணக்கத்தை, அழகான இதழ் வளைவுடன், நிமிர்ந்த தலை; நேர்கொண்ட பார்வையுடன் சொன்ன சஞ்சனாவின் நெஞ்சு, நடு நாயகமாக அமர்ந்திருந்தவனைக் கண்டதும் பல குட்டிக்கரணங்களை போட்டது.

இதை போல் ஓர் அறிமுகம் மீண்டும் அவள் வாழ்க்கையில் நிகழும் என்று கனவிலும் அவள் எதிர்பார்க்கவில்லை. அவள் முகம் இரத்தப் பசையற்று வெளிறிப் போயிற்று. அவனே தானா என்று நெஞ்சு அடித் துக் கொண்டது.

ஒரு நொடி கூட மறக்க கூடிய முகமா? யாரை இனி வாழ்நாளில் பார்க் கவே கூடாது என்று நினைத்திருந்தாளோ, பார்த்தால் நெஞ்சு வெடித்துச் சிதறும் என்று நினைத்திருந்தானோ அவன்...

பிரேம்.

உள்ளே போகும் போது அவளிடம் இருந்த கம்பீரம், தெளிவு, நிதா னம் எல்லாம் பிரேமை பார்த்த கணம் சொல்லிக் கொள்ளாமல் ஓடின. நெஞ்சு கண வேகமாக அடித்துக் கொண்டது.

சாவி கொடுத்த பொம்மை போன்று அவர்கள் சொன்ன இருக்கை யில் நன்றி என்றபடி அமர்ந்தாள்.

அவனுக்கும் அதே அதிர்ச்சி தானா? ஆனால் விரைவில் நிதானத் திற்கு வந்து விட்டான். ஆனாலும் இடுங்கி, நெரிந்த புருவங்கள், கூரிய கண்களும் சஞ்சனாவின் இதயத்தை துளைத்தது. மனதின் குரங்காட் டத்தை கட்டுப்படுத்தி உள்ளத்தை ஒரு முகப்படுத்துவது மிகக் கடினமாக இருந்தது.

என்ன கேள்விகள் கேட்கப்பட்டது, எப்படி பதில் சொன்னாள் என்று கேட்டால் சஞ்சனாவிற்கு தெரியாது.

நிறுவன டைரக்டர் பிரேம் என்ற எழுத்து பலகையும், அதன் பின் அமர்ந்த பிரேமும், ஒரு கேள்வியும் கூட கேட்காமல், கண்களின் ரேசர் பார்வையுடன், அவளை விட்டு விலகாத பார்வையுடன் அமர்ந்திருந்தது தான் முழு மனதையும் ஆக்ரமித்தது.

ரோஸ்கார்ட் மோட்டார்ஸின் சாதனைகளை- வளர்ச்சிகளை எல்லாம் தெரிந்து வைத்திருந்த சஞ்சனா, அதை மேம்படுத்தினவன் 'பிரேம்' என் பதை அறியவில்லை.

## 4

வீட்டிற்கு வந்தவள், வாசலிலேயே வசந்தரா நின்று கொண் டிருந்ததைக் கூட கருத்தில் கொள்ளவில்லை.

கண்கள் ஒளிமங்கி, சிவந்த முகத்துடன் 'உர்' என்று சென்ற சஞ்சனாவைக் கண்டு வசுந்தரா சற்று திகைத்துப் போனாள்.

''என்னடா இன்ட்ர்வியூ ஒழுங்காக பண்ணவில்லையா? ரொம்ப கஷ் டமான கேள்வியாக கேட்டாங்களா?'' என்று கனிந்து போய் அவள் கேட்க, மறுப்பாக மகள் தந்த தலையசைப்பில் கொஞ்சம் நிம்மதியுற்று...'



''பின்னே என்னாச்சு இன்ப்ளுயன்ஸ் யூஸ் பண்ணி, சினிமாவில் காட்ற மாதிரி கடைசி நிமிஷத்தில் உனக்கு கிடைக்க வேண்டிய வேலையை மத்தவங்களுக்கு கொடுத்து விட்டாங்களா? அப்படியாராவது பண்ணியிருந்தால் ரொம்ப புண்ணியமாகப் போகும்' மகளின் முறைப் பில் வசுந்தராவிற்கு சிரிப்பு வந்தது.

''உன் முகத்தை பார்த்தாலே வேலை முயற்சி தோல்வி போலத்தான் தெரியுது. அப்பாகிட்டே கல்யாணத்திற்கு நாள் பார்க்க சொல்லட்டுமா? மாப்பிள்ளை வீட்டில் ரொம்ப சந்தோஷப்படப்போகிறார்கள். ஓ.கே. வா?''

வேலை கிடைக்குமா? கிடைக்காதா? என்ற கேள்வி ஒருபுறம் இருந் தாலும், கிடைத்தால் அவளால் வேலையை ஏற்றுக்கொள்ள முடியுமா? என்பதே சஞ்சனாவிற்கு பெரும் கேள்வியாக இருந்தது.

மகளின் உண்மையான கலக்கம் புரியாமல், தாய் கலங்கின குட்டை யில் மீன் பிடிப்பது போல், அவசர அவசரமாக அவளிடம் சம்மதிப்பை எதிர்பார்ப்பது சஞ்சனாவிற்கு நன்றாக புரிந்தது.

ஆனால் தாயின் கேள்விகளில் சஞ்சனாவின் மனம், வேலையை நிரா கரித்தால், அவளுக்கு முடிவில்லா வனவாசம் காத்துக் கொண்டிருப்பதை உணர்த்தியது. காலம் முழுவதும் திருமணச் சிறையில் அல்லவா விட்டு விடுவாள். அவளால் யாரையும் திருமணம் செய்ய முடியாதே, அப்படிக் கட்டாயத் திருமணம் செய்து கொண்டு, கட்டினவன் நிம்மதியையும் குழி வெட்டி புதைக்க முடியாது.

அதுவரை வேலையா? அதுவும் அவன் நிறுவனத்திலா? அவனை தினம் தினம் பார்க்கும் நிலையா? மீண்டுமா? அவளால் தாங்கிக் கொள்ள முடியுமா? என்று வேலைக்குச் செல்வதை முழுமனதாக எதிர்த்த மனம், இப்பொழுது முரண்டு பிடிக்கத் தொடங்கியது. அது என்னவோ, திரும ணம் என்பதை அவள் மனம் முழுமையாக எதிர்த்தது.

காரணம்?!

பிரேம்!

அவளுடைய இதயத்தில் கள்ளம் கபடமில்லாத வயதில் உதித்த காதல், தொடர்ந்து நிராகரிக்கப்பட்டதில் திருமணம் சம்பந்தப்பட்ட உணர் வுகள் அத்தனையும் செத்து மடிந்து விட்டதைப் போல தான் உணர்ந்தாள்.



''முதல் இரவில் கணவருக்கு பால் கொண்டு வரும்படி சொன் னதுக்கு அந்தநடிகை மறுத்திட் டாங்களாம்!''

''ஏன்?''

''ஆடையுடன் பால் கொண்டு வரச்சொன்னார்களாம்''.

-எம்.செல்லையா, சாத்தூர்.

இனியும் யாராலும் தட்டி எழுப்ப முடியாத உணர்வுகள் போதும். பட்ட கசப்பான மறக்கவே முடியாத அனுபவங்கள். ஈரேழு ஜென்மத்திற்கும் நல்ல பாடம். இனிமையான திருமணம். என்ற பாக்கியத்தைத் தான் அவ ளிடமிருந்து தட்டிப்பறித்து விட்டான் என்று நினைத்தால், இனி அவளுக் குப் பிடித்தமான வேளையில் அவளை மூழ்கடித்துக் கொள்ளலாம் என்ற நினைப்பையும் அல்லவா பறித்து விட்டான்.

''செல்லம்... நாங்க தானே ஜெயித்தோம். ரொம்ப திரிலிங்கா இருக்கு. ச்ஸ்பென்ஸை ரொம்ப நேரம் வளர விடாதே. எனக்கு தாங்க முடியவில்லை''... என்று தாய் மீண்டும் பரபரக்க,

தாயின் கண்களை நிமிர்ந்து பார்த்தாள் சஞ்சனா. மகளின் கண்களில் தெரிந்த தோல்வியுற்ற- நைந்த பார்வையில் வசுந்தரா வேறு அர்த்தம் கற்பித்தார்.

''கல்யாணம் ஒன்றும் நீ நினைப்பது போல, பயங்கரமான விஷயம் கிடையாது சஞ்சு. வாழ்க்கையில் சந்தோஷமான விஷயம். இதில் வருத் தப்பட வேண்டிய அவசியமேயில்லை. அம்மா, அப்பா எப்பவும் உன் னோட நலனில் தான் கவனமாக இருக்கிறோம். நம்பிக்கை வை. எல் லாம் நல்லபடியாக நடக்கும்'' என்றார்.

''வேலை கிடைக்காவிட்டால் தானே கல்யாணம், நான் எங்கே வேலை கிடைக்கவில்லை என்றேன். நீங்களாகவே ஏதேனும் நினைத்துக் கொள்ளாதீர்கள்'' சஞ்சனா 'உர்' என்று சொல்ல,

''அது தான் உன் முகத்தை பார்த்தவுடன் எனக்கு ரிசல்ட் தெரிந்து விட்டதே. என்ன... இன்னும் ஒரு வாரத்தில் எழுத்து மூலமாக 'மறுப்பு கடிதம்' வரத்தான் போகிறது''- என்று சிரித்தபடி சென்ற தாயை கண்டு கண்ணீர் வந்தது சஞ்சனாவிற்கு.

இது என்ன இக்கட்டு?

சஞ்சனா பெருமளவு இந்த வேலையைத் தான் நம்பியிருந்தாள். தாய் தந்தை திருமணப் பேச்சை எடுத்தவுடன், எனக்கு வேலை பார்க்கவேண் டும், எனக்குன்னு ஒரு இன்டிஜுவாலிட்டி வேண்டும். கல்யாணம் பிறகு பார்க்கலாம். இப்போதைக்கு அதைப்பற்றி பேசவேண்டாம் என்று கறா ராகத்தான் சொன்னாள்.

'பிரேம் அவளுக்கு வேலைக்கான அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் அனுப்பினாலும் சரி, அவளை ஒதுக்கி அனுப்பாமல் விட்டாலும் சரி, வேறு வகையில் தந்தையிடம் பேசி, தலைகீழாக நின்றாவது சஞ்சனா திரு மணத்தை மறுப்பது உறுதி. அது தற்காலிக முடிவாக இருந்தாலும் இப்ப டியே நாட்களை, வருடங்களை, தள்ளி போட்டு விடும் திட்டம் அவளுக்கு இருந்தது.

இந்த பிரேம், ஏன் அவளின் கொஞ்ச நஞ்ச நிம்மதியையும் பறிக்க வந்தான்? அதற்கு மேல் யோசிக்க சக்தியில்லாமல் படுக்கையில் கவிழ்ந் தாள் சஞ்சனா.

நினைவுகள் அவளை எங்கெங்கோ இட்டுச் சென்றன. அவளைத் தூங்கவே விடவில்லை. கழிந்த எத்தனையோ இரவுகள் போல.



பருவம் என்று ஒன்று இருக்கிறதே.... அது மிகவும் பொல் லாதது.

அந்த பருவத்தில் அவள் வாழ்வில் நடந்த சம்பவங்கள் அவளால் மறக்கமுடியுமா?

பொல்லாத அந்த நாட்கள்.

பிரபாகருக்கு ஆபீஸ் வேலையாக 'டிரெயினிங்' என்று நியூயார்க்கில் இரண்டு வருஷம் ''போஸ்டிக்'' கிடைக்க பதினொன்றாம் வகுப்பு படித் துக் கொண்டிருந்த சஞ்சனாவை, பள்ளிப்படிப்பை இந்தியாவில் முடித் தால் தான் சரியாகும் என்று, கோயம்புத்தூரில் தந்தை வழி 'அத்தை பாட்டி' வீட்டில் விட்டு விட்டு, பரத்தை மட்டும் உடன் அழைத்துச் சென் றனர்.

சென்னையிலிருந்து மாற்றலாகி கோயம்புத்தூரில் உள்ள பள்ளியில் சேர்ந்ததே சஞ்சனாவிற்கு புது அனுபவமாக இருந்தது. பெற்றோர், தம்பி யின் நினைவு அடிக்கடி அவளைத் தாக்கினாலும், பாட்டி பட்டம்மா அவ ளுக்கு ரொம்பவே ஈடு கொடுத்தார்.

ஐம்பத்தைந்து பட்டம்மா பயங்கர சுறுசுறுப்பு. தனக்கு வயதாகி விட் டதே என்ற நினைப்பு துளியும் கிடையாது அவருக்கு. மகனுக்கு பத்து வயதாகும் போதே கணவனை பறிகொடுத்தவர், திடீரென்ற கணவரது இழப்பிற்கு அவர் தயாராகவேயில்லை. இடிந்து போனார். மகனை நன் றாக வளர்க்க வேண்டுமே என்ற கவலையில் நிமிர்ந்தார். கணவன் பார்த்து வந்த ஆடை ஏற்றுமதி தொழிலை தானே ஏற்று நடத்தினார்.

மகன் அரவிந்தன் ஒரு நிலைக்கு வந்து, விண்வெளி ஆராய்ச்சி என்று அமெரிக்காவின் 'நாசா' சென்று விட, கடமை முடிந்த நிறைவோடு, அவ ரின் ஏற்றுமதி தொழிலை விற்றுவிட்டு, பணத்தை பாங்கில் போட்டு விட்டு, சாதனை, சமூக சேவகை என்று கிளம்பிவிட்டார்.

காலை எழுந்தவுடன் முழங்கால்வரை நீண்ட டைட்சும், தொடை வரை வழியும் சட்டையுமாக வாக்கிங் கிளம்பிவிடுவார். நீயும் வாயேன் சஞ்சு, ஒரு நாள் அவளையும் அழைத்துச் சென்றார். வீட்டுக்குப் பக்கத் தில் இருந்த கிரிக்கெட் கிரவுண்ட்டில் தான் அவர் தினமும் நடப்பார்.

முதலில் இரண்டு ரவுண்ட் கிரவுண்டை வலம் வந்த பட்டம்மா, பிறகு எட்டுமுறை ஓடவும், சஞ்சனா உண்மையில் அசந்து போனாள். ஓடி முடித்த பிறகு அங்கிருந்த சிமெண்ட் பென்சில் படுத்து கை கால்களை உயர்த்தி, நீட்டி, ஸ்டெரெச்சிங் எக்ஸசைஸ் செய்வதைக் கண்டு அவ ளுக்கு ஆச்சர்யம் கூடியது.

பட்டம்மாவின் வயதை நாற்பதுக்கு மேல் கணிக்கவே முடியாது. முகத்தில் உற்சாகமும், இளமையும் மின்னும் காரணம் உடலையும், மன தையும், ஆரோக்கியமாக வைத்திருந்தார்.

அவரின் தினப்படி 'ரொட்டீன் லைப்'பும் சஞ்சனாவிற்கு ஆச்சர்ய மாக இருக்கும். காலை பத்து மணிக்கு, அவருடைய 'மாருதி' யை ஓட் டிக் கொண்டு கிளம்பினால், மதியம் சாப்பிட வீட்டுக்கு வருவார். பின்பு



மீண்டும் கிளம்பி போனால், மாலை ஐந்து மணிக்குத்தான் வீடு வருவார். வீட்டில் தோட்டக்காரன், சமையல்காரன் என்று உதவிக்கு ஆட்களையும் வைத்திருந்தார்.

சஞ்சனாவின் விடுமுறை நாளில் ஒரு நாள், கூடவே அவளையும் கூட் டிச் சென்றார். 'செரிபிரல் பேலப்ஸி' தன்மையுடைய குழந்தைகளுக்கான பள்ளியில் காலை முழுவதும் அந்த குழந்தைகளுடன் தாயாக, டீச்சராக நின்று கண்ணும் கருத்துமாய் கவனித்து, அவர்களுக்கு கல்வி அறிவு புகட் டினார். அவரைக் கண்டதும் குழந்தைகளின் முகம் ஆயிரம் வாட்ஸ் பல்ப் போல பிரகாசிப்பதைக் கண்டாள். பட்டம்மாவைப் போல் இன்னும் சில ரும் குழந்தைகளுக்கு உதவினர்.

மதியம் சாப்பாட்டிற்குப்பிறகு, மூன்று மணி போல் அவர் சென்றது, சால்ஸா, ஜாஸ் என்று மேற்கத்திய நடனம் பயில்வதற்கு.

★★★

அங்கு அவருக்கிருந்த நண்பர்கள் எல்லாம் இளவட்டம். அவர்களு டன் ஒருவராக அவர் கலாட்டாவும், கிண்டலுமாக நேரம் கழித்ததைக் கண்டு சஞ்சனாவின் விழிகள் விரிந்தன. நடன அசைவுகள் வெகு லாவக மாக வந்தன அவளுக்கு. பாட்டி, தன் வயதை நினைப்பதே இல்லை என்று சஞ்சனாவிற்கு புரிந்து போயிற்று.

''நாலு வருஷம் பரதநாட்டியம் பயின்றேன் சஞ்சு'' என்று சஞ்சனா வின் பிரம்மிப்பான முகம் கண்டு அவள் கன்னத்தை தட்டியபடி சொன் னார்.

''இந்த வயதிலா! ''இல்லை பத்து வருஷம் முன்பு, அப்பவும் அமெ ரிக்கா, சிங்கப்பூர் என்று எங்க டான்ஸ் குரூப்போடு புரோக்ராமும் செய் தேன். தென் வெஸ்டன் டான்ஸ் பழகும் ஆர்வத்தில் இங்கு வந்து சேர்ந் தேன். இங்கே ஒரே ஜாலி 'யுத்' ப்ரஷ்னஸ் என்று நேரம் போவதே தெரி யாது'' என்றவர் தூரத்திலிருந்து ''பட்டம்மா கம் ஜாயின்'' என்று சக மாண வன் ஸ்டெப் போட்டுக்கொண்டு அழைக்க, ''வெயிட் சஞ்சு டார்லிங்'' என்றபடி நடையிலேயே நடனம் ஆடிச் சென்றார்.

பொறாமையாக இருந்தது சஞ்சனாவிற்கு.






பட்டம்மா அவள் கண்களில் என்ன பார்த்தாரோ, மறுநாள் மாலை பள்ளியிலிருந்து வந்தவுடன் இவளையும் கொண்டு போய் வெஸ்டர்ன் டான்ஸ் கிளாசில் சேர்த்து விட்டார்.

''பட்டம்மா படிப்பு...''- என்று இழுத்தவளிடம்....

''இங்கே நடனம் ஆடிவிட்டு போய் படி, எவ்வளவு லேசாக பாடங் கள் மனதில் பதியும் என்று பார்''- என்று அவர் அடக்கி விட பட்டம்மா சொன்னது தான் நடந்தது.

இரண்டு வருடம் படிப்பும், விளையாட்டும், நடனமுமாய் கரைந்து போயின. எல்லாம் பிரேமை பார்க்கும் வரை.

அன்று அப்படித்தான் ''பக்கத்து வீட்டில் கம்ப்யூட்டரில் பிரோஸ் பண் ணிட்டு வருகிறேன். அதோடு அப்பா ஈமெயில் ஏதாவது வந்திருக்கிறதா? என்று பார்த்து விட்டு வருகிறேன்'' என்று பாட்டியிடம் சொல்லிவிட்டு சஞ்சனா கவிதா ஆண்ட்டி வீட்டிற்கு கிளம்பினாள்.

வீட்டில் உள்ள குட்டி பம்பரேனியன் 'புகட்டி' அவள் எங்கு சென்றா லும் கூடவே காது விரிய பாய்ந்து ஓடிவரும். அது அவளை பிடிக்கும் முன் ஓடி விடுவது சஞ்சனாவின் அப்பொழுதைய விளையாட்டு. அன்றும் அப் படித்தான் யார் முதலில் ஆண்ட்டி வீட்டிற்குள் நுழைகிறார்கள் என்று பந் தயம் போல சஞ்சு பெடல் புஷ்ஷிம் இறுக்கிப் பிடித்த பனியனுமாக, உய ரக் கட்டின. போனிடெயில் காற்றில் பறக்க ஓட, பந்து போல் நாலுகால் பாய்ச்சலில் 'புகட்டி'யும் துரத்த ''கமான் காட்ச்... காட்ச்...''- என்று கத் தியபடி வந்தவள், அப்போது தான் கதவை திறந்து, வெளியே வந்து கொண்டிருந்த முற்றும் புதிய இளைஞன் மேல் மொத்தமாக மோதினாள்.

அவள் என்னதான் சின்னப்பெண் என்றாலும், அத்தனை வேகத்தில் ஓடி வந்து மோதியதில், அந்த திடகாத்திரமான ஆண் மகன் ''மை கா!...''- என்று தடுமாறி பின் நொடியில் தன்னை நிதானப்படுத்திக் கொண்டு, மோதிய வேகத்தில் விழ இருந்த சஞ்சனாவின் கைகளை பிடித்து தாங்க, நிலைதடுமாறிய சஞ்சனா அவன் மேல் சரிந்தாள். சில நொடிகள் சஞ்சனாவிற்கு என்ன நிகழ்ந்தது என்றே புரியவில்லை. புரிந்த போது மிகவும் சங்கடபட்டு போனாள். அதுவும் அவளைத் தாங்கியவன் முகத்தை அவ்வளவு அருகில் கண்டதும், முகம் சிவக்க,

''ஸாரி''- என்று முணுமுணுத்தபடி விலகினாள்.

'என்ன பிரேம் சப்தம்''- என்ற படி வந்தார் கவிதா.

''ஆண்ட்டி... நான்... கம்ப்யூட்டர்...''- என்று சஞ்சனா இழுக்க,

கண்கள் குறுகுறுக்க, உதடு விரிய அந்த புதியவன் பார்த்த பார்வை யில் மேலும் சிவந்து போனாள்.

''தெரியாமல் என் மேல் மோதிட்டாள் பெரியம்மா, இடி இடிச்ச சத் தம் கேட்டதில்லையா? அது என் மேல் விழுந்த இடியாக்கும்''- என்று சிரித்தான்.

அவன் சிரிப்பில், சஞ்சனாவிற்கு நெஞ்சம் படபடவென்று காரணம றியாமல் தடதடத்தது.

''பக்கத்துவீட்டு பட்டம்மாவோட பேத்தி பிரேம். ரொம்ப சமத்து. இவள் வருகிறாள் என்றால், நம்ம ரமேஷ் வீட்டை விட்டு நகர மாட் டான்னா பார்த்துக்கோயேன்'' என்று கண்சிமிட்டி அவர் சொல்ல,

''ஓ... என்று புருவம் வளைத்து இழுத்தவன் கண்களில் தெரிந்த பாவனையின் அர்த்தம் அவளுக்கு புரியவில்லை.

வெண் பற்கள் தெரிய சிரித்தபடி ''வரேன் பெரியம்மா'', என்றபடி அவளின் தலைமை மெதுவாக '...' என்பது போல் தட்டிச் சென்றான்.

கார்கால இரவின் ஒரு பளிச்சென்ற மின்னல் வெட்டில் மணல் தரைக்குள் காளான் கருக்கொள்வதாக கூறுவார்கள். அப்படி அந்த அவன் பார்வையின் மைக்ரோ கதிர் வீச்சில் அவள் நெஞ்சில் காதல் விதை கருகொண்டு மாயஜாலம் போல வேக வேகமாக பெரியமரமாக வளர்ந்தது.

அன்றிலிருந்து சஞ்சுவின் மனசு அவளிடம் இல்லை. ஆறடி உயரத்தில், செதுக்கின கண், மூக்கு, சிரிப்பில் விரிந்த உதடாய் நின்றவனின் காலடியில் கிடந்தது.

அவனிடத்தில் ஏதோ ஜென்ம ஜென்மமாய் தொடர்ந்த பந்தம் போல் அவள், அவனின் முதல் சந்திப்பில் தன்னிலையிழந்தாள். பட்டம்மா, இருந்த வேலை மும்முரத்தில் பேத்தியின் இந்த மயக்கத்தை கண்டு பிடிக்கவில்லை.

அது நாள் வரை பக்கத்து வீட்டு ஆண்ட்டியின் மகன் ரமேஷை கண்ணால் ஒரு பார்வை பார்க்காது விலகியவள் வலியப்போய் பேச்சு கொடுத்தாள்.

எல்லாம் ''அவன்'' விவரம் கேட்பதற்கு.

ஏதோ அவள் அவனிடம் பேசியதே அவன் செய்த புண்ணியம் என்பது போல் அவன் கொண்டாடி, அவள் கேட்ட விஷயங்களுக்கு டாண், டாண் என்று பதில் சொன்னான்.

மூன்று மாதம், அவன் இங்கு அடிக்கடி வந்து போவானாம். பெரும் பணக்காரணாம். அவனுடைய ஏதோ வியாபார விஸ்தரிப்பு விஷயமாக வந்திருக்கிறானாம். அது பற்றிய விவரம் அவளுக்கெதற்கு?

மூன்று மாதம், மூன்று மாதம் என்று மனசு ஆர்ப்பரித்தது. அவனை இன்றும் மூன்று மாதங்கள் பார்க்கலாம் என்று மதி மயங்கியது.

அந்த பதினெட்டு வயதில் தாய் அருகில் இருந்து மகளை கண் காணித்திருந்தால் சஞ்சனாவின் காதல் மலர்ந்த வேகத்தில் தவிர்க்கப்பட்டிருக்கும். அதனால் அவளுக்கு நேரவிருக்கும் இமாலய பாதிப்பும் தவிர்க்கப்பட்டிருக்கும்.

ஆனால் வாழ்க்கை என்பது வினோதமான விடுகதை. அதற்கு பதில் கிடைப்பது கடினம்.

6

மீட்டு ம்மாவிடம் பரீட்சை முடிந்து வீட்டில் சும்மா இருப்பதால் கவிதா ஆண்ட்டி வீட்டில் ரமேஷ் கம்ப்யூட்டர் என்ஜினீயரிங் படிக்கிறதால் நல்லா சொல்லித்தரார் பட்டம்மா'' - என்று பட்டம்மா நம்பும்படியாக சொல்லிவிட்டு மாலை நேரம் அவன் வீட்டிலேயே பழி கிடந்தாள்.

பாட்டியிடம் பொய் சொல்கிறோமே என்ற பயம், தவறு செய்கிற குறுகுறுப்பு எதுவும் அச்சமயம் அவளிடம் இல்லை. டான்ஸ் கிளாஸ்



செல்வதில் ஒழுங்கு இல்லாமல் போனது.

அருமையாக டிரஸ் செய்து கொண்டு வந்து விடுவாள். பல நாட்கள் அவன் அச்சமயம் வீட்டில் இருக்கவே மாட்டான். அப்படியே வந்தாலும், இவளைப் பார்த்து விட்டால், கண்கள் கனிய ஒரு அறிமுகச் சிரிப்பொன்றை உதிர்த்து விட்டு நகர்ந்து விடுவான். அவனாக ஏதாவது பேச மாட்டானா? என்ற ஒவ்வொரு சந்திப்பின் போதும் அகமலர்ந்து நோக்கியவள், அவன் அப்படியானதொரு பேச்சுக்கே தயாராகவில்லை என்பதை உணர்ந்த போது மனசு கஷ்டப்பட்டாள்.

அவனைக் கவர வகைவகையாக அணிந்து வந்த உடைகள் எதுவுமே அவனின் கருத்தை கவரவேயில்லையோ?

ஏன்? கேள்விகள் குடைந்தது அவளை.

அன்று டான்ஸ் கிளாஸ் முடிந்து, வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தாள் கஞ்சனா.

பக்கத்தில் கொஞ்சமும் சப்தமின்றி வந்து நின்ற காரின் ஹார்ன் ஒலி கேட்டு கொஞ்சம் ஒதுங்கி நின்றாள் அவள். ஆனால் 'சஞ்சனா' என்று இறக்கிய காரின் சன்னல் வழியே அழைத்த பிரேமைக் கண்டதும் அவள் முகத்தில் தான் எத்தனை பிரகாசம்.

சின்ன சிரிப்புடன் ''வீட்டுக்குத் தானே.... ஏறிக் கொள்'' என்றபடி அவன் கார் கதவை திறந்து விட குதித்துக் கொண்டு காரை முன்பக்கமாக சுற்றிக் கொண்டு ஓடி ஏறினாள். சஞ்சனா ஆகா... இன்று யார் முகத்தில் விழித்தேன். சந்தோஷத்தில் அவள் நெஞ்சம் பரபரப்பானது.

''தினமும் டான்ஸ் கிளாசில் இருந்து நடராஜா சர்வீஸ் தானா?'' என்று காரை ஓட்டியபடி அவளுடைய முகம் பார்த்து கேட்டு பார்வையை ரோட்டிற்கு திருப்பினான் பிரேம்.

''ம்கூம்..'' என்று தலையை இரண்டு ஆட்டு ஆட்டியவள் தொடர்ந்து ''தினமும் ரவளி கூட ஸ்கூட்டியில் போய் விடுவேன்''

''ரவளி?''

''என் ப்ரண்ட், பட்டம்மா வீட்டிலிருந்து ஐந்தாவது வீடு அவளோடது. அவள் வீட்டிற்கு போகும் போது இறக்கி விடுவாள் இன்று அவள் வரவில்லை. எப்படிடா நடந்து போறது என்று ரொம்ப கஷ்டமா இருந்தது. கஷ்டம் நடக்கிறது பற்றி இல்லை. பேச்சு துணைக்கு ஆள் இல்லாமல் நடப்பது தான் கொஞ்சம் கஷ்டம். நல்ல வேளை இன்று பேசுவதற்கு நீங்கள் கிடைத்து விட்டீர்கள்.

ஆமாம் நீங்க இன்று சீக்கிரம் வீட்டுக்கு வந்துட்டீங்க?'' என்று முடித்தாள் சஞ்சனா.

''ம்ம்ம்''- என்று வியந்தபடி ''என்னோட டைம்மிங் பற்றி உனக்கெப்படி தெரியும்?''- என்றான்.

படிக்கும் பாடத்தில் கேட்கப்படும் கேள்விக்கு பதில் தெரியுமோ இல்லையோ, ஆனால் இவனைப் பற்றிய விஷயங்கள் அவளுக்கு அத்துபடி, அவன் தான் அவள் உயிர் நாடி என்பது இவனுக்குத் தெரியுமா? தெரிந்தால் என்ன செய்வான்? நெஞ்சு படபடத்தது அவளுக்கு. அணிந்திருந்த துப்பட்டாவை நீவி விட்டபடி, தன்னை சமாளித்துக் கொண்டு,

''ஓ.... எனக்கென்ன வேறு வேலை, நம்ம காலனியில், யார், யார்



என்ன பண்ணுகிறார்கள். எப்பொழுது வருவார்கள், போவார்கள் என்று எல்லாமே எனக்கு அத்துபடி. அந்த கணக்கெடுப்பில் நீங்களும் தான் சேர்த்தி.''

நான் நூற்றில் ஒருவன் தானா? என்ற பதிலில் ஒரு சின்ன ஏமாற்றம் அவனுள் அவன் அனுமதியில்லாமல் பரவுவதை உணர்ந்தது. ஒரு கணம் திடுக்கிட்டு போனான். சின்னப்பெண், கபடறியாமல் குழந்தைதனத்துடன் பழகும் பெண், அதில் என்ன எதிர்பார்க்கிறான். எண்ணம் போகும் போக்கிற்கு பலமான கடிவாளத்தைக் கட்டினான் பிரேம்.

''நியூ இயர்க்கு இன்னும் இரண்டு நாட்கள் தானே இருக்கிறது. நீங்கள் செலிபரேஷனுக்கு போய் விடுவீர்களா? இல்லை இங்கேயே தானா? என்னோட ஃபிரண்ட்ஸ் எல்லாம் ஜாலி புரோக்ராம் போட்டு வைத்திருக்கிறார்கள்.

பட்டம்மாவிற்கு வெளியே இன்னொரு இடத்தில் செலிபரேஷன் உண்டு. என்னையும் அங்கு தான் கூப்பிடுகிறார்கள். லாஸ்ட் இயர் பட்டம்மா கூட அங்கு தான் சென்றேன். ஆனா இப்ப ஃப்ரண்ஸ் ஜாஸ்தியா இருக்காங்களா? எல்லோரும் 'யூத் கிளப்'ன்னு ஒரு கிளப் பார்ட்டிக்கு கூப்பிடுகிறார்கள். ஜாலியா இருக்கும். ஆனா மீட்டுமா பர்மிஷன் கிடைக்காது.'' கிடைத்தது சான்ஸ் என்று அவனிடம் வளவளத்தாள் சஞ்சனா.

''பார்ட்டி எங்கே நடக்கப்போகுது? ரோட்டில் இருந்து பார்வையை எடுக்காமலே கேட்டான் அவன்.

''சொன்னால் நீங்கள் வருவீர்களா? ப்ளீஸ் நீங்களு வந்தீங்கன்னா பட்டம்மா ஈஸியா பர்மிஷன் கொடுத்து விடுவாங்க. பொறுப்பா கூட்டிட்டு போய் கூட்டி வர யாராவது இருந்தால் பட்டமீமா 'டஸ்நாட் மைண்ட்'

கொஞ்சமும் யோசியாமல் இருந்த இரண்டு மூன்று மிக முக்கியமான புரோக்கரமை நொடியில் மனதில் கேன்ஸல் செய்து சஞ்சனாவிடம் 'எஸ்' என்று சொன்னான் அவன்.

அவனுடைய அப்பாயிண்ட்மெண்ட்டிற்காக இத்தனை பேர் காத்திருக்க, ஒரு சின்ன பெண்ணின் ஒரே ரிக்வெஸ்டில் இத்தனை இலகுவாக படு மேதாவியான பிரேம் 'எஸ்' சொன்ன காரணம் அவனையும் மீறி நிகழ்ந்தது.

ஆனால் அவன் உள்ளுணர்வும் அவனை எச்சரிக்காமல் இல்லை. அவளை பார்த்த நிமிடம் அவனையும் அறியாமல், அவன் வசம் இல்லாமல் நிகழ்ச்சிகள் நடந்து கொண்டு தானிருக்கின்றன.

உதாரணத்திற்கு தனியாக போகிறாளே என்று சஞ்சனாவை கூப்பிட்டு லிப்ட் கொடுக்கவில்லையா? இதெல்லாம் அவன் இயல்பு அல்லவே. அதைப்பற்றி மேலே யோசிக்கவும் அவனுக்கு விருப்பமில்லை.

7

அந்த நியூ இயர் பார்ட்டீ சஞ்சனாவை பொறுத்தவரையில் அவள் வாழ்க்கையிலேயே மறக்க முடியாத மிக சந்தோசமான பார்ட்டீ, அவன் உள்ளத்தை கொள்ளையடித்தவனுடன் அருகமர்ந்து சென்றது, கைகளை கோர்த்தபடி வெகு ஸ்டை



யிலாக பார்ட்டி ஹாலுக்கு சென்றது எல்லாமே கனவு போலத்தான் இருந்தது.

எல்லோரும் பாட்டு, டான்ஸ் என்று தொடங்கிய பின்னரும் பிரேம் கொஞ்சம் கூட இலகுவாக பேசாமல், ஏதோ சின்ன குழந்தையை அழைத்துக் கொண்டு காவலுக்கு வந்தவனைப்போல இருக்க காணவும், தானும் பெரிய பெண் என்று அவன் கவனத்தை ஈர்க்க, அவன் பொறாமையை தூண்ட என்று தோழியர் சொல்லிக்கொடுத்த ஐடியாவை ஃபாலோ பண்ணுவது என்று தீர்மானித்தாள்.

அவளுடைய டான்ஸ் ஸ்கூல் தோழர்களுடன் இணைந்து நடனம் ஆடத் தொடங்கினாள் சஞ்சனா. பொதுவாகவே சஞ்சனாவின் ஆட்டத்தில் நளினம் இருக்கும். இப்பொழுதோ பிரேமை கவர என்பதே குறியாக லாவகமாக ஆடிய அழகில் யாராகயிருந்தாலும் உருகித்தான் போயிருப்பார்கள். பிரேமினால் கண்களை அவளிடமிருந்த அகற்றவே முடியவில்லை

பிரேமிடம் நிறைய பெண்கள் ஆவலாக 'ஹலோ' சொல்லி அறிமுகப்படுத்திக் கொள்ள விளைந்தார்கள். அவனுடைய கவனத்தை சிலர் ஈர்க்க முயன்றனர். ஆனால் அவனின் தீர்க்கமான ஒரே பார்வையில் ''....மிஸ்டர் ரைட்'' என்று அரண்டு விலகினர்.

அலை அலையாய் கூந்தல் பறக்க, கன்னங்கள் சிவந்து போக சஞ்சனா நடனம் ஆடியதை கவனித்த பிரேமிற்கு நெஞ்சடைத்துப் போனது. அவளை நல்லபடியாக பாதுகாப்பாய் வீடு கொண்டு போய் சேர்க்கும். மிகப்பெரிய பொறுப்பு இருப்பதாய் எண்ணிக் கொண்டான். ஆனாலும் சஞ்சனா ஆண்களுடன் அடித்த லூட்டியில் அவனுள் கொஞ்சம் எரிச்சலானது நிஜம். என்ன பெண் இவள்? அதனால் தானோ என்னவோ, மணி பன்னிரண்டு அடித்து நியூ இயர் சொல்லி முடித்த பதினைந்தாவது நிமிடத்தில் கிளம்பி அவளையும் கிளம்பி விட்டான்.

பப்பே முறையில் பரிமாறப்பட்டிருந்த உணவையும் அதற்குள் சாப்பிட்டு முடித்திருந்தனர்.

காரில் வளவளத்துப் பேசியபடியே வந்தாள்.

அவனுடைய உணர்வுகள் அவனுக்குப் புரிந்திருந்தாலும், அவளுடைய உணர்வுகளின் ஆழம் அவனால் கணிக்க முடியவில்லை. பதி



''என்ன்டி இது... பக்கத்து வீட்டில் இருந்து கா:.பியே வருது?''

''ஆமாண்டி... தினமும் காபி தூள், சீனிநு கடன் கேட்கறதைப் பார்த்துட்டு, பேசாமல் கா:.பபியே கொடுத்திருறாங்க!''

- எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

னெட்டு வயது முதிராத இரண்டு கெட்டான் பருவம். அதில் எந்த ஆழமும் இருக்கப்போவதில்லை.

அவன், அவள் கண்ணெதிரே இருந்து போய் விட்டால், இரண்டு மூன்று தினங்களில் சரியாகப் போய் விடக் கூடிய உருவக் கவர்ச்சி தான். அந்த உருக்கவர்ச்சியை அவன் தனக்கு சாதகமாக்கினால். அவனை அவனுடைய மனசாட்சியே மன்னிக்காது.

வீடு வந்ததும் காரை விட்டு இறங்கிய சஞ்சனா காரின் மறுபக்கமாக வந்து தைரியமாக அவன் கன்னங்களில் முத்தமிட்டு ''தாங்யூ. ஹப்பி நியூ இயர்' என்றாள். விறைத்துப்போனான் பிரேம். பிரேம் கண்களில் சலனம் தெரியவும் வெட்கம் தாங்காமல் ஓடினாள் சஞ்சனா.

அந்த முத்தம் பிரேம் முற்றிலும் எதிர்பாராதது. அவன் நெஞ்சு வேகவேகமாக ஏறி இறங்கியது.

சஞ்சனா ஓடும் போது பிரேமின் உயரத்திற்கு ஏற்றவளாக தெரிய வேண்டும் என்று அவள் அணிந்திருந்த ஹை-ஹீல்ஸ் செருப்பு ஏற்படுத்திய சப்தத்தில், பிரேம் தன்னை மறந்து, சுற்றுப்புறம் மறந்து சற்று சப்தமாகவே கேட்ட, 'சஞ்சு என்னை திருமணம் செய்து கொள்கிறாயா? என்றது சஞ்சுவின் துரதிர்ஷ்டம். அவள் காதில் கேட்காமலே போனது.

8

ஷேவ் செய்து முடித்து விட்டு ஆப்டர் ஷேவ் லோஷனை முகத்தில் தடவியபடி கண்ணாடியில் தன்முகம் பார்த்தான் பிரேம். முட்டாளைப் போன்றல்லவா தெரிந்தான்.

''வாய் விட்டு சிரிக்கத்தான் தோன்றியது.

காரணம் சஞ்சனா.

கடந்த சில நாட்களாக அவன் தன் வசத்திலேயே இல்லை. அதுவும் நேற்றிரவு அவன் கேட்டது, நல்ல வேளை அவள் காதுகளில் விழவில்லை. சிறிய வயது பெண்ணிடம் பேசுகிற பேச்சா? கண்ணாடியில் பார்க்கையில் ஒரு வடிகட்டின மடையன் போல தான் அவன் தெரிந்தான்.

பின்னே... என்ன காரியம் செய்து விட்டான்.

அவள் கேட்டிருந்தால்?

விளைவுகள்?

சின்ன பெண். நல்லது, கெட்டது அலசி ஆராய்ந்து பார்க்கத் தெரியாத ரெண்டு கெட்டான் பருவம்.

பட்டம்மா?

அவரை நினைத்தால் வேறு அவமானமாக இருந்தது.

பக்கத்திலேயே நியூ இயர் பார்ட்டி என்று புகட்டியையும் கூடவே அழைத்துச் சென்று திரும்பி வந்துக் கொண்டிருந்த பட்டம்மா, பிரேம் கார் வீட்டு முன் நிற்பதைக் காணவும் வேகமாக நடந்து வந்தார்.

எதிர்பாராத விதமாக, பிரேம் கத்தியது, காரின் மறுபக்கத்தில் வந்துக் கொண்டிருந்த அவருக்கல்லவா கேட்டு விட்டது.

கேட்டவர் சும்மாவா இருந்தார்?



பட்டம்மாவை கண்டதும், அவர் கண்களில் கேள்வியைக் கண்டதும், தப்பு செய்தவனைப் போல் முகம் சிவந்தான்.

உதட்டை பற்களால் கடித்த படி, ஸ்டீயரிங் வீலில் ஒரு கையும், மறு கையால் நெற்றியை தேய்த்தவன் பதட்டத்தில் இருந்தான். அவரிடம் பேச வார்த்தைகளை தேடினவன் பின் சின்னதாய் சங்கடமாய் சிரித்தான்.

சஞ்சனாவின் முத்தத்தையும் பார்த்திருப்பாரா?

என்ன தெரியும் இவருக்கு?

பட்டம்மா சட்டென்று நாயுடன் அவன் காரில் ஏறி விட்டார்.

''கொஞ்சம் தூரம் டிரைவ் போய் விட்டு வரலாமா?'' என்று கேட்டவர் கண்கள், அவனையே உன்னிப்பாக பார்க்க, கைகள் மடியில் இருந்த நாயின் வெண்பட்டு சிகையில் அலைந்தன.

பின்பு அவர் மெல்ல பேசிய பேச்சுகள் அவன் காதில் இன்னும் ஒலித்துக் கொண்டு தானே இருக்கின்றன.

''நீங்கள் மிகப்பெரிய இடம். மெத்த படித்தவர் இதெல்லாம் சரி வருமா?''

அவனை பதிலுக்கு ஒன்றுமே பேசவிடவில்லையே. வெறும் இனக் கவர்ச்சியால் அவள் கவரப்பட்டிருக்கிறாள். அதை அவனுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வது தவறல்லவா?

அவளை தவிர்த்திருக்க வேண்டாமா?

அவளின் பார்வை வட்டத்திலிருந்து நீங்கள் மறையும் போது, சில நாட்களில் அவள் உங்களை மறந்து விடுவாள் தெரியுமா?

நிஜமான அன்பிருந்தால், கல்யாண பருவத்தில் அவனுக்காக காத்திருப்பாள்.

ஒரு சின்ன லெக்சர் கொடுத்து விட்டு போன பட்டம்மாவை சங்கடத்துடன் தானே பார்த்தான்.

சஞ்சனா அவனுக்காக காத்திருப்பாளா?

ஒரு மாற்றத்திற்காக இரண்டு நாட்கள் சென்னை போய் விட்டு வந்தான். இனி கூடுமான வரையில் அவளை முழுமையாக தவிர்த்து விட வேண்டும் என்ற முடிவோடு,

சஞ்சனா தான் தவித்துப் போனாள். கவிதா ஆன்ட்டிக்கு எப்போது பிரேம் வருவான் என்ற விவரம் சரியாகத் தெரியவில்லை. வருவானா?

ஆனால் வந்தான்.

அன்று டான்ஸ் கிளாஸ் முடித்து விட்டு வீட்டிற்கு வரவும், கவிதா ஆன்ட்டி வீட்டு வாசலில் பிரேமின் காரைக் கண்டதும் அவசர அவசரமாக உள்ளே ஓடினாள்.

ஹாலில் அவன் மட்டும் லேட்-டாப் கம்ப்யூட்டரை மடியில் வைத்து அமர்ந்திருந்தான். சஞ்சனாவைப் பார்த்தவுடன்,

''ஆன்ட்டி கோவிலுக்கு போயிருக்கிறார்கள். ரமேஷ் ஸ்பெஷல் கிளாஸ் அட்டெண்ட் பண்ண போயிருக்கான். கொஞ்ச நேரம் பொறுத்து வந்தாயானால் சரியாக இருக்கும்''-என்று கவனம் லேப்-டாப்பில் இருக்க கண்களை மட்டும் லேசாக மலர்த்தியபடி பேசி விட்டு மீண்டும் வேலையில் ஆழ்ந்தான்.

என்ன இவன் கண் நிமிர்த்தி கூட பார்க்க மாட்டேன் என்கிறான். சஞ்



சனாவிற்கு கோபமாக வந்தது. யார் எங்கே போனால் என்ன? உன்னைப் பார்க்கத்தான் இவ்வளவு ஆசையாக ஓடி வந்தேன் என்று எரிச்சலில் நினைத்துக் கொண்டாள்.

ஆனால் சடாரென்று நிமிர்ந்தான் அவன்.

புருவங்கள் இடுங்க, 'என்ன சொன்னாய்?' என்று கண்களில் கூர்மையுடன் அவன் கேட்க,

மனதில் நினைத்ததை வார்த்தை வடிவமாக வாய் மொழிந்து விட்டதை உணர்ந்து சஞ்சனாவின் முகம் சிவந்து போனது.

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. எப்படியோ அவள் விஷயம் அவன் மண்டையில் ஏறினால் சரி, என்று சந்தோஷமும் பட்டுக் கொண்டாள். அது தந்த தைரியத்துடன்

''இல்லை, வெளியில் உங்களோட ஸ்போர்ட்ஸ் கார் பார்த்தேன். அதான்...' என்று இழுத்தவள் மேலே எப்படி பேசுவது என்று தெரியாமல் கண்களை விரித்தாள்..

''அதனால்...'' அவன் வார்த்தைகளில் இருந்த அழுத்தத்தில் சஞ்சனாவின் சுவாசம் தடைப்பட்டது.அவன் தன்னைக் கண்டுக் கொண்டான் என்று புரிந்து, மேலும் விளக்கம் ஒன்றும் கொடுக்க தெரியாமல், அவள் சின்ன இதயத்தில் குழப்பங்களும், சந்தோஷமும் சேர்ந்து கொட்ட மடித்ததில் திண்டாடிப் போனாள்.

அவனின் பிரதிபலிப்பு என்னவாயிருக்கும் என்று வண்ணத்துப்பூச்சி சிறகாய் படபடத்த நெஞ்சத்தோடு மொட்டு போன்ற கண்களை மலர்த்தினாள்.

மடியில் இருந்த 'லேட்-டாப்' சோபாவிலிருந்து இடமாறியிருந்தது. நம்பவே முடியாத அவன் பார்வை கத்தி கூர்மையுடன் அவள் கண் வழியே நெஞ்சைதுளைத்தது.

அவன் கண்களில் தெரிந்த பாவனையும், கூடவே மாறி மாறி எழுந்த சீற்றத்தையும் கண்டு சஞ்சு உண்மையில் பயந்து போனாள்.

''நான்... என்று நெஞ்சின் மேல் கை வைத்து நடுங்கிய உதட்டுடன் பேச தொடங்கியவள் மேலே முடிக்க முடியாமல் வாசலில் சர்' என்று கார் வந்து வழுக்கியபடி நின்ற சப்தமும், அதன் கதவை திறந்து யாரோ ஹை-ஹீல்ஸ் சப்தத்துடன் நடந்து வந்த சப்தமும் கேட்க, திரும்பி வாசலை பார்த்தவளின் கண்கள் அகல விரிந்தன. டி.வி.யில் நிறைய விளம்பர படங்களில் பார்த்த அழகிய மாடல் மம்தா. வெண்ணெயில்



''என்னங்க, என் சேலையை 'அடிச்சி' துவைச்சீங்களா?'

''ஆமாம். ஏன் கேட்குற?''

''அந்த அளவுக்கு உங்களுக்கு தைரியம் வந்துருச்சா...?''

-ஆர்.என்.செழியன், சென்னை.



செதுக்கிய உருவமாய் காற்றை கொஞ்சியபடி வந்தவளை, எப்போது சோபாவில் இருந்து எழுந்தான், நடந்து அருகே வந்தரன் என்றே புரியாத படி,

''வா மம்தா, வெயிட்டிங் ஃபார் யூ, ஃபார் அ லாஸ் டைம்'' வொய் லேட்?''-என்று அவள் கன்னத்தில் இதழ் பதித்து இடையை அணைத்தாற் போல வரவேற்ற விதம் பார்த்த சஞ்சுவிற்கு கண்களை இருட்டிக் கொண்டு வந்தது.

''சஞ்சு நாங்கள் கொஞ்சம் பர்சனலா பேசணும். நீ பிறகு... பெரியம்மா வந்தவுடன் வருகிறாயா?'' என்றவன் அவளை திரும்பி பார்க்காமல் அவளுடன் அவனுடைய அறைக்குள் செல்ல, பொங்கி கொண்டு கண்களில் தண்ணீர் நின்றது.

பாட்டி வீட்டிற்கு ஓடிவந்து தன் அறையில் நுழைந்தவளுக்கு கோபம் பெருகியது. ஓடிப்போய் கண்ணாடி முன் நின்றாள். மாசு மருவில்லாத மினுமினுப்பான முகம். கண்ணாடியில் பார்க்க அழகாகத்தான் இருந்தது. ஆதாரமாக பள்ளியிலும், வெளியிலும் ஆண்கள், பெண்கள் பேதமில்லாமல், அவள் மேல் பார்வைகள் படருவது அவள் அறிந்தது தான்.

பிரேமிற்கு ஏன்? என்னை பிடிக்கவில்லை?

ஏன் விரட்டுகிறான்?

அறிந்து கொள்ளாமல் விடப்போவதில்லை. சின்னப்பெண் என்று தானே நினைத்து விட்டான். உடனே மனசு பரபரத்தது. ஸ்கூல் கடைசி நாள் விழாவிற்கு அணிந்த மஞ்சள் நிற சமிக்கி வைத்து தைத்திருந்த கிரேப் சேலையை ப்ளவுசுடன் அலமாரியில் இருந்து எடுத்தாள். பட்டம்மா கல்யாண ரிஷப்சன் என்று இவளிடம் சொல்லிக் கொண்டு கிளம்பிவிட, சஞ்சனா, புடவை கட்டி, மிதமாக முகத்திற்குப் மேக்கப் போட்டாள். அவள் அறை வழியே தெருவை எட்டிப்பார்த்தாள். பிரேம் கார் அங்கேயே தான் இருந்தது. அந்த மாடல் வந்த காரை காணோம். அதற்குள் போய் தொலைந்து விட்டாளே. நிம்மதி என்று மனதுள் முணுமுணுத்தபடி, மீண்டும் பிரேமிடம் என்னிடம் என்ன குறை என்று கேட்டபடி நின்றாள்.

அவனுடைய அறையில் துணியை பெட்டியுள் அடுக்கிக் கொண்டிருந்தவன் சஞ்சனாவின் வரவால் மெல்ல கலைந்தான். அதுவும் அவளின் நேரடியான கேள்வியை எதிர்பார்க்காமல் அதிர்ந்தான். ஆனால் சமாளித்துக் கொண்டு,

''இல்லை சஞ்சு நீ படிக்க வேண்டும். இந்த சின்ன வயதில் மற்றதில் மனம் அலைபாயக்கூடாது, அது தவறு''.

''இல்லை நான் ஒன்றும் சின்ன பெண் இல்லை''- சீற்றமாக பதில் வந்தது அவளிடம்,

இமைக்காமல் அவள் பார்த்தான் பிரேம்.

''சரி, எல்லாம் நாளைக்கு பேசிக் கொள்ளலாம். முதலில் நீ கிளம்பு, எனக்கு வேறு வேலையிருக்கிறது''- என்று முதலில் அவளை அங்கிருந்து கிளப்ப முற்பட்டான்.

''ப்ளீஸ் பிரேம். லிசின் டு மீ, எனக்கு உங்களை மிகவும் பிடித்திருக்கிறது. என் வாழ்க்கையின் ஆதாரமே நீங்கள் தான். ஐ ஆம் இன் லவ்''- என்று அவனிடம் அவள் அது நாள் வரை பேசத்தயங்கிய வார்த்தைகளை

தைரியத்துடன் பேசினாள். அவன் அவளின் வாழ்க்கையல்லவா? கண்கைளில் நிறைய எதிர்பார்ப்புடன் படபட வென்று இமை தட்டி விழித்த அவள் கண்களில் ஏக்கத்தை கண்டவன், தன்னிலையிழந்தான் என்று அவளை அவனுடன் இழுத்து அணைத்தான். சஞ்சனா முழுவதும் தன்னை மறந்தாள்.

பிரேமின் உதடு அவளின் கழுத்து வளைவில் அழுத்தமாக பதித்தது. ஸ்தம்பித்துப்போன சஞ்சனா முதன் முறையாக ஆணின் ஸ்பரிசம். அதுவும் அவளுக்கு மிகவும் பிடித்தவனின் ஸ்பரிசம். அவளுக்கு எங்கோ வானலோகத்தில் சஞ்சரிப்பது போலிருந்தது.

தன்னிலை மறந்து நின்றது அவள் மட்டுமில்லை அவனும்!!

சில நொடிகளோ, சில நிமிடங்களோ என்ற நினைவில்லாமல் இருவரும் அந்த அணைப்பில் தங்களை மறந்திருந்தனர்.

ஆட்டோ ஹார்ன் சப்தத்தில் பிரேம் தன்னை உணர்ந்தான். செய்த காரியத்தில் விறைத்து, முகம் சிவந்து போனான்.

சின்ன பெண்

எக்காரணம் கொண்டும் செய்கையாலும், சொல்லாலும் அவளை நிலைப்பிரள வைக்கக்கூடாது என்று நிறைய கணக்கு போட்டு செயல்பட்டு வந்தவன், இன்று என்ன பிழை செய்து விட்டான், பாறையாக இறுகினான். வார்த்தைகளில் மிகவும் சிரமப்பட்டு கடுமையை உருவாக்கிக் கொண்டு, ''சட்'டென்று அவளை அவன் பிடியில் இருந்து தள்ளி,

''எல்லாம் இதற்கு தானே, இந்த அணைப்பிற்கு தானே இப்பொழுது திருப்தியா?'' என்று கேட்டு, ஏதோ ஈன பிறவியைப் பார்ப்பது போல சஞ்சனாவை கண்களால் வெறித்துவிட்டு வேகமாக அந்த அறையை விட்டு அகன்றான்.

கூடை நெருப்பை தலையில் கொட்டியது போல் சஞ்சனா துடித்துப் போனாள்.

கடவுளே, என்ன பேச்சு பேசிவிட்டான். மாசு மருவில்லாத அவள் காதலை களங்கப்படுத்தி விட்டேனே. நிற்க முடியாது கால்கள் துவண்டன.

அவளை என்னவென்று நினைத்துவிட்டான்.

ஓட்ட ஓட்டமாக வீட்டிற்கு ஓடியவள் படுக்கையில் படுத்தவள் தான் ஒரு வாரம் கண் முழிக்கவில்லை. அதிர்ச்சியிலும், அழுகையிலும் காய்ச்சல் வந்தது. சீக்கிரம் குணமாக வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் அல்லவா ஜுரம் குறையும். அவள் தான் வாழ்வையே முடித்துக் கொள்ள வேண்டிய முடிவோடு இருந்தாளே. பட்டம்மா கொடுத்த மத்திரை எல்லாம் அவரறியாமல் குப்பை தொட்டியிலும், பாத்ரூமிலும் வீணானது. ஜுரத்தில் தன்னை மேலும் மேலும் கஷ்டப்படுத்திக் கொண்டாள். என்ன வார்த்தை சொல்லி விட்டான். மீண்டும் மீண்டும் மனம் அதில் தான் நின்றது.

பட்டம்மா பயந்து விட்டார். ஹாஸ்பிட்டலில் சேர்த்து டிரிப்ஸ் ஏற்றி, இருபத்துநான்கு மணி நேரமும் அருகில் இருந்து கண்ணும் கருத்துமாக பார்த்து, ஒரு வழியாக சஞ்சனாவின் ஜீரம் குறைந்தது. பிரேம் அதன் பிறகு



அங்கே வரவில்லை. பட்டம்மாவிற்கு பேத்தியின் மயக்கம் தெரியுமாதலால் தனக்குள் கணக்குப்போட்டு பார்த்துவிட்டு, பெருமளவு நேரத்தை சஞ்சனாவுடன் செலவிட்டார். கொஞ்சம் கொஞ்சமாக சஞ்சனா தேறினாள். ஆனால் பிரேம்...? அவள் நெஞ்சில் ஆறாத ரணமாக அவளை கொன்று கொண்டிருந்தான்.

படிப்பு தான் சிறந்த மருந்து என்று சஞ்சனா படித்தாள், படித்தாள், படித்தாள். படிப்பிலே தன்னை கரைத்துக் கொள்ள தயாராயிருந்தாள். பிரேம் நினைவுகளை மட்டும் மறக்க முடிந்திருக்குமானால், சஞ்சனா சந்தோஷமாயிருந்திருப்பாள்.

இனி அவள் வாழ்வில் என்றேனும் சந்தோஷம் வருமா?

அவனை மறக்க முடியுமா?

## 9

இந்த நினைவுகளில் இருந்து அவளுக்கு விமோஷனமே இல்லையா? கண்களில் வழிந்த நீரை துடைத்துக் கொண்டாள் சஞ்சனா.

அவள் வாழ்க்கையில் மீண்டும் பிரேம்.

அவளால் தாங்கமுடியுமா?

முடியாது. வேண்டாம். அவன் வேலை வேண்டாம். அவன் தொடர்பும் வேண்டாம். அவன் சம்பந்தப்பட்டது எதுவும் வேண்டாம். முடிவில் அவமானம் தான் மிஞ்சும்.

தனக்குள் முடிவெடுத்தபடி தன் வேலைகளை கவனித்தாள் சஞ்சனா. நாட்கள் மெல்ல நகர்ந்தது. இடையில் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் கடிதம், 'ரோஸ்கார்ட்'டில் இருந்து 'கொரியர்' மூலம் வர சற்று நேரம் அதை கையில் வைத்துக் கொண்டு சிலை போல அமர்ந்தாள்.

அவளுக்கு தெரியும் இது அவள் தகுதிக்கு கிடைத்த வெற்றி. ஆனால் அதை ருசி பார்க்க முடியாமல் பிரேம் தடையாக நின்றான்.

ஏற்கனவே இந்த வேலை பற்றிய முடிவு சஞ்சனா எடுத்துவிட்டபடியால், வேலைக்கான ஆர்டரை அவள் கப்போர்டில் வீசினாள்.

அவள் வாழ்க்கையில் மட்டும் ஏன்? எல்லாமே தவறுதலாக நடக்கிறது.

அவளின் கடந்த கால அவமானத்தை மட்டும் அவளின் ஞாபகத்தில் இருந்து மறைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். சதா நெஞ்சில் தோன்றும் பாரம் இல்லாமல் நிம்மதியாக இருப்பாளே.

ஆக்டோபஸ் என்னும் கடல் வாழ் உயிரினம், எதிரி துரத்தினால் தன் உடம்பில் இருந்து சில் வண்ணத்திரவங்களை கக்கும். கடல் நீரை நிறம் மாற்றி எதிரியின் கண்ணைக் குருடாக்கும்.

தண்ணீர் தெளிவதற்குள் தப்பித்தோடி விடும். சூழ்நிலையை வெற்றி கொள்ளும் சூத்திரம் தெரியவேண்டும்.

வாழ்க்கையை வாழப்பார்க்க வேண்டும் அல்லது வாழ்க்கைக்கேற்ப வார்க்கப்பட வேண்டும்.

சஞ்சனா தன் புது சூழ்நிலையை வெற்றி கொள்ளும் சூத்திரம் தெரி



யாமல், தன்னுடைய அவமானத்தை எந்த நிற திரவியம் கொண்டு அழிக்க, என்ற இயலாமையோடு கண்மூடி அமர்ந்தாள்.

## 10

''அம்மா! ''சித்தி போன்லே இருக்காங்க''- என்று தாயை அழைத்தாள்.

சஞ்சனாவின் குரலில் அலங்கரித்துக் கொண்டிருந்த பூக்குவளையை அப்படியே வைத்துவிட்டு போனை கையிலெடுத்தார்.

''அருணா எப்படி இருக்கே? குழந்தைகள் சுகமா? ஓ... ம்ம்... இன்றைக்கா?... சரி... அனுப்பிவைக்கிறேன்...''- என்றபடி முடித்தார். பிறகு சஞ்சனாவிடம் திரும்பி,

''சித்தி வீட்டுக்கு உன்னை கூப்பிடுறாங்க. பிரசவத்தில் ஒன்று பிறந்தாலே பார்க்கறது ரொம்ப கஷ்டம். குழந்தை செல்வம் இன்னும் உண்டாகவில்லை என்று ஏழு வருஷம் அழுது கொண்டிருந்தவளுக்கு, கடவுள் பம்பர் பரிசாக மூன்று பிள்ளைகளை ஒரே பிரசவத்தில் கொடுத்திட்டார். இப்ப ஒரே திண்டாட்டம் தான்''.

லஞ்ச் முடித்துவிட்டு பொழுது போகாமல், டி.வி. கம்ப்யூட்டர் என்று நேரத்தை ஓட்டிக் கொண்டிருந்த சஞ்சனா, ''நானே இன்று போகலாம் என்று தான் நினைத்தேன் அம்மா. குழந்தைகள் கண்ணுக்குள்ளே இருக்காங்க''

''ஒரு செட் டிரஸ் எடுத்துட்டு போம்மா. உனக்கு நைட் அங்கு தான் ஸ்டே.., தவிர்க்க முடியாத பிஸினஸ் பார்ட்டி இன்று 'நைட்' இருக்கிறதாம். கண்டிப்பா அருணாவும் வரணும்ன்னு நீரஜ் சொல்லிட்டாங்க போல. எத்தனை வேலையாட்கள் இருந்தாலும் குழந்தைகளை விட்டுப் போக மனம் வருமா? நீ கொஞ்சம் குழந்தைகளிடம் இருந்தால், நிம்மதியாக போய்ட்டு வருவாள்''

''சீக்கிரமா போனால் சித்தியிடம் கொஞ்சம் அரட்டை அடித்துக் கொண்டிருக்கலாம்''- என்றபடி தன்னுடைய அறைக்குள் நுழைந்தாள் சஞ்சனா.

''நீ இப்படி அடிக்கடி போய் பழகியே குழந்தைகள் உன் முகம் பார்க்கத் தொடங்கி விட்டார்கள்''- என்றபடி கையில் பூஸ்ட் கிளாஸுடன் வந்த வசுந்தரா, மகள் அதற்குள் தயாராகி நிற்பதை கண்டவுடன், ''சித்தி வீடு என்றால் ஜெட் வேகத்தில் கிளம்பி விடுவாயே'' என்று சிரித்தார்.

தாயின் கைகளில் இருந்த பூஸ்டை வாங்கி குடித்தவுடன் தன்னுடைய ஹோண்டா... ஸ்கூட்டரில் சித்தி வீட்டுக்கு சந்தோஷமாக கிளம்பினாள்.

இருக்கும் மனநிலைக்கு கடவுள் இந்த அளவு கருணை செய்து விட்டாரே என்று அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. எவ்வளவு நேரம் தான் அவள் தன் விதியை நொந்தபடி மொட்டு மொட்டென்று அமர்ந்திருப்பது?

குண்டு குண்டென்று, சுருட்டை முடியும், அழகு கண்களுமாய் மூன்று குட்டி கண்ணன்களை பார்க்க பார்க்க தெவிட்டாது அவளுக்கு,



அதுவும் குழந்தைகள் சிரிக்கும் சிரிப்பில் உலகமே மறந்து போகும் வரம் அல்லவா?

போர்டிகோவில் வண்டியை நிறுத்தி விட்டு கைப்பையுடன் வீட்டிற்குள் நுழைந்தாள் சஞ்சனா. மிகவும் ''பழக்கமான பெண் என்பதால், வாங்கம்மா, அம்மா கிச்சனில் இருக்காங்க'' என்றபடி வேலையாட்கள் தங்கள் வேலையில் ஈடுபட, சஞ்சனா சப்தமில்லாமல் கிச்சனில் நுழைந்தாள்.

முதுகு காட்டியபடி சமையல்காரருக்கு, ஏதோ புது, வீட்டு சமையல் ரெசிபியை சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார் அருணா. சப்தமில்லாமல் சஞ்சனா கையோடு கொண்டு வந்திருந்த பரத்தின் 'டிராக்குலா' முகமூடியை முகத்தில் அணிந்த கொண்டு, மினி டேப்ரிக்கார்டரில் பதிவு பண்ணி எடுத்து வந்திருந்த, மிருக ஒலியை, அந்த அமைதியான சூழ்நிலையில் உச்சஸ்தாயிலில் இயக்கி, பாய்ந்து போய் அவர் முன் தன் பேய் மூகத்தை சஞ்சனா நீட்ட, 'ஆ' என்று அலறிய அருணா கைகளில் இருந்த சாமான்களை 'படார்' என்று சப்தத்துடன் தரையில் நழுவ விட்டார்.

முகமூடியை எடுத்த சஞ்சனாவிற்கு கலகலவென்று சிரிப்பு.

பயம், நிமிடத்தில் அக்கா மகளைக் கண்டதும் பூரிப்பானது. 'வாலு' என்றபடி சஞ்சனாவை அணைத்துக் கொண்டார். ''ஐய்யோ என் பயந்தாங்கொள்ளி சித்தி''- என்று சஞ்சனாவும் அவர் தோளில் உரிமையுடன் சாய்ந்தாள்.

இருவரும் பேசி சிரித்தபடி கிச்சனில் இருந்து வெளியே வந்தனர்.

''உனக்கு படிப்பு முடிந்தாலும் முடிந்தது, பாவம் நீ தான் பேபி- சிட் பண்ண கிடைத்தாய்! ஜாலியா ப்ரண்ட்ஸ் கூட சுத்தப் போற பெண்ணை தொந்தரவு பண்ணாதேன்னு உன் சித்தப்பா ஒரே திட்டுடா. ஆனா அக்காவை விடவும் உன்னைக் கண்டால் தான் குழந்தைகளுக்கு குஷி''

'டிரிப்லெட்ஸ்' பார்த்துக் கொள்வதற்காக, ஹோம்மில் சொல்லி ஒரு ஆயா வீட்டோடு இருந்தார். பிறகும் இரண்டு மூன்று வேலையாட்கள் வீட்டோடு இருந்தனர். ஆனால் பிஞ்சு குழந்தைகளை நாசுக்காக வேலைப் பார்பவர்களிடமும் முழு பொறுப்பாக விட மனமில்லை அருணாவிற்கு.

இதோட இந்த ஆறு மாதத்தில் இரண்டாவது விருந்து நிகழ்ச்சி. பொறுப்பாக வீட்டில் யாராவது இருந்தாலொழிய குழந்தைகளை விட்டு



''ஹலோ டி.வி. கடையா... உடனே எங்க வீட்டுக்கு வாங்க...''

''எதுக்கு?''

''எனக்கும் என் மனைவிக்கும் சண்டை நீங்கதானே டி.வி. வாங்கி ஒரு வருடத்திற்குள் எந்தப் பிரச்சனை வந்தாலும் தீர்த்து வைப்பதாகச் கூறினீர்கள். சண்டையைத் தீர்த்து வைக்க வாங்க!''

-எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

நகர மனம் வராது அருணாவிற்கு. அதிலும் சஞ்சனா என்றால் கூடுதல் ஆனந்தம். முழு நிம்மதி. எந்த பொறுப்பு கொடுத்தாலும் அதை திறமை யாக ஆவலோடு எடுத்து செய்வாள்.

குடும்பத்தில் இளைய தலைமுறையில் மூத்த செல்ல பெண்.

சின்ன சின்ன மூன்று ரோஸ் நிற பேபி பெட்டில் சுற்றிலும் தடுப்பு கள் போடப்பட்டிருந்த பாதுகாப்பில் குழந்தைகள் மூன்றும் சுகமாக உறங் கிக் கொண்டிருந்தன. பார்க்கவே தெவிட்டவில்லை சஞ்சனாவிற்கு.

''அப்பு''- என்ற படி ஒரு குழந்தையை கையை காலை ஆட்டியபடி தூக்கத்தை கலைத்துக்கொண்டு கையில் தூக்கிக் கொண்டு அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

தூக்கம் முழுவதுமாக கலைந்த குழந்தை சஞ்சனாவின் கொஞ்சலில், பொக்கைவாயுடன் சிரித்தது.

''சின்னவன் தான் காலையில் இருந்து அழுது கொண்டே இருந்தான் சஞ்சு. இப்பதான் குரோசின் டிராப்ஸ் எல்லாம் கொடுத்து தூங்க வைத் தேன். அடுத்தவனும் இன்று முழுவதும் சிணுங்கிக் கொண்டேயிருந்தான். இவனுக்குத் தான் எப்பவும் சிரிப்பு, குழந்தையின் கால் விரல் நுனியை மென்மையாக பற்றி ஆட்ட, இன்னும் அழகாக சிரித்தது குழந்தை.

''சரி சஞ்சு வாயேன் நான் என்ன புடவை கட்டறேன்னு காட்டறேன்''.

''செல்லம், என்ன செல்லம் கதை பேசனுமா?'' என்று கையில் தவழ்ந்த குழந்தையிடம் பேசியபடி சித்தியுடன் நடந்தாள் சஞ்சனா.

அவருடைய அறையில், நீல நிறத்தில் பட்டில் சரிகை வேலைப்பாடு இல்லாமல் பட்டு நூல் வேலைபாடும் அதில் குந்தன் வொர்க்கும் செய்தி ருந்த புடவையை காட்டினார்.

''முந்தானை ரொம்ப கிராண்ட்டாக அமைஞ்சிருக்கு பார்த்தியா?''- என்றவர் பின்,

''சஞ்சு வேலை இண்டர்வ்யூ பற்றி அம்மா வேறு ஏதோ சொன்னாங்க என்ன ஆச்சு? கிடைக்கலையா?''

சட்டென்று உதட்டை கடித்தாள் சஞ்சனா, வேலையை பற்றி நினைக் கவே கூடாது. அதன் தொடர்ச்சியாக அவன் நினைப்பையும், என்று இவ் வளவு நேரம் அந்த நினைப்பையே தவிர்த்தவளுக்கு, 'குப்' என்று வியர்த் தது. மனசில் அலைபோல நினைவுகள் ஒன்றையொன்று அடித்துக் கொண்டு கிளம்பியது.

''என்ன அதுக்குள்ள சத்தத்தையே காணும். நான் வேணா அக்கா கிட்டே பேசட்டுமா? ஒரு இரண்டு வருஷம் கழிச்சு கல்யாணம் பண்ண லாம் என்று சிபாரிசு பண்ணட்டுமா?''

பேச்சு வராமல் 'ம்ம்' கொட்டினாள் சஞ்சனா.

''கல்யாணம் பற்றி பேசினாலே உன்னோட 'மூட்' ஸ்பாயில் ஆகிவி டுகிறதே சஞ்சு! நான் ஒன்று கேட்டால் பதில் சொல்வியா?''- கண்களால் சஞ்சனாவை அளவெடுத்தபடியே கேட்க,

சஞ்சனாவை என்ன என்பது போல் சித்தியை இமைதூக்கிப் பார்க்க,

''யாரையாவது லவ் பண்றியா?'' என்று மென்மையாக கேட்டார்.

இந்த மாதிரி கேள்வியை சித்தியிடம் அந்த சமயம் எதிர்பாராததால் அரண்டு போய் கண்களை விரித்தாள். அந்த கண்களில் நீர் நிறைந்திருப்



பதை கண்டவர், பெண்ணின் நெற்றியில் முத்தமிட்டார். அதற்குள் தன்னை நிதானப்படுத்திக் கொண்ட சஞ்சனா 'இல்லை' என்று மறுப் பாக தலையை அசைக்க,

''சஞ்சு எனக்கும் உங்க சித்தாப்பாவுக்கும் எட்டு வருஷத்துக்கு முன்பு காதல் கல்யாணம் தெரியுமா? சித்தி அமெரிக்காவில் இருக்காங்கன்னு தான் உங்க அம்மா சொல்லியிருப்பாங்க. ஆனா வீட்டை விட்டு வெளி யேறி அப்பா அம்மா ஆசையை எதிர்த்து நான் நீரஜ் கை பிடித்தது பெரிய கதை. எங்களை யாரும் ஏத்துக்கவேயில்லை. சித்தப்பா ரொம்ப என்னை கன்வின்ஸ் பண்ணினார். என்னை கல்யாணம் பண்ண முடியவில் லைன்னா வாழ்க்கை முழுவதும் பிரம்மச்சாரியா வாழ்ந்துடுவேன்னார். எனக்கும் அப்படித்தான் இருந்தது. பிறகும் நாங்க நிறைய கஷ்டங்கள் பட்டோம். அமெரிக்கா போய் ஐந்து வருஷம் இருந்தோம். நிறைய பணம் சம்பாதித்தோம். குழந்தை தான் பிறக்கவில்லை.

நானும் அக்காவும் நகமும், சதையுமா இருப்போம். என்னோட காத லைப் பற்றியும் அக்காவிடம் சொல்லியிருக்கேன். ஆனா அப்பா தான் பயங்கரமா எதிர்த்தார்.

ஏதோ பெரிய அசிங்கத்தை நான் செய்துவிட்டதைப் போல் புழுவை விட கேவலமாக பார்த்தார். என் மகளே இல்லைன்னுட்டார்''- என்று பழைய நினைவுகளில் மூழ்கிவிட்டார்.

இதெல்லாம் சஞ்சனாவிற்கு தெரியாத விஷயங்கள். ஆச்சர்யமாக கதை கேட்டாள்.

''அக்காவும் அத்தானும் அமெரிக்கா வந்த போது மீண்டும் உறவு ஒட் டியது. அமெரிக்காவில் இருந்தாலும் இங்கே தான் மனசு கிடந்தது. ஏதோ வனவாசம் போல இருந்தோம். சம்பாதிச்ச பணத்தை வைச்சு உங்கப்பா பண்ண அட்வைஸ்ஸை ஏற்று பிஸினஸும் செய்தோம். எங்க நல்ல காலம் இதில் தொட்டதெல்லாம் பொன்னானது. காதல் கல்யாணம் என் றால் என்ன கஷ்டம் என்று எனக்கு தெரியும்மா. தனியா சமாளிப்பது ரொம்ப சிரமம். ஆனால் சஞ்சு உனக்கு 'காதல் இப்படி ஏதாவது பிரச்ச னையென்றால் என்னிடம் சொல்லுடா. சித்தியிருக்கேன் கவலைப்ப டாதே''- என்று சொல்லிக் கொண்டிருக்க, படுக்கை அறை கதவை தட்டி அனுமதி கிடைத்தவுடன் வந்த 'ஆயா'

''அம்மா சின்னவன் நிறுத்தாமல் ரொம்ப அழறான். உடம்பு ரொம்ப சுடுகிறது. அடுத்தவனும் அழுகையை தொடங்கி விட்டான். எவ்வளவு சமாதானப்படுத்தினாலும் அழுகையை நிறுத்த முடியவில்லை கொஞ் சம் வந்து பாருங்கள்'' என்று சொல்ல,

''நீ இவனை வச்சுக்கிட்டு இங்கேயே இரு சஞ்சு! நான் பிள்ளையை பார்த்துட்டு வரேன்''- என்று நடையா, ஓட்டமா என்று புரியாதபடி போனார்.

சஞ்சனா மடியில் சுகமாக படுத்துக் கொண்டு, கால் கட்டை விரலை வாயில் கொண்டு போக முயற்சி பண்ணிக் கொண்டிருந்தான் குழந்தை.

அடுத்த அரைமணிநேரம் அந்த பங்களா மிகவும் பரபரப்பாக இயங் கியது.

டாக்டர் வந்தார். கவனமாக பிள்ளைகளின் உடல் நிலையை 'செக்



அப்' செய்தார். காய்ச்சல் குறையவில்லை என்றால் பிட்ஸ் வர சான்ஸ் இருக்கு என்று பயம் காட்டிவிட்டு போனார்.

அவ்வளவு தான். அருணா, ''நான் குழந்தைங்க கிட்டேயே இருக் கேன். பார்ட்டிக்கு வரவில்லை என்று முகம் எல்லாம் டென்ஷன்ல ஊற சடக் என்று சொன்னார்.

அதற்குள் நீரஜ்க்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''சஞ்சு தான் நல்லா பார்த்துப்பாளே. அத்தோடு ஒன்றுக்கு பத்தா ஆட் கள் வீட்டில் இருக்கிறார்கள். வேண்டுமானால் ஒரு டாக்டரையே வீட்டில் டியூட்டி வைத்து விட்டு போகலாம். சும்மா ஒரு இரண்டு மணி நேரம் மேனேஜ் பண்ண முடியாதா? நீ வரணும்''- என்று முடித்தார்.

''இல்ல நீரஜ், ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்க. என்னால் முடியாது. இந்த இடத்தை விட்டு நகர முடியாது.''

அழும் குழந்தையை ச்சோ...ச்சோ'' என்று முதுகில் தட்டிக்கொடுத் தபடி அவர் சொல்ல...

''நான் மட்டும் பார்ட்டிக்குப்போய் என்ன செய்ய. நாம ''ஹோஸ்ட்'' பண்ணற பார்ட்டி, நீ இல்லாமல் நன்றாகவா இருக்கும்? இந்த பார்ட்டியே கிளையன்ஸ்ஸை இம்பரஸ் பண்ற பேமிலி கெட்-டூ-கெதர் மாதிரி அரேன்ஜ் பண்ணியிருக்கேன். எல்லோரும் குடும்பத்தோடு வருவாங்க. வரவேற்க பெண் நீ இருந்தால் தானே நிறைவா இருக்கும்''-

''எப்படியாவது மனைவியை கன்வின்ஸ் பண்ண நீரஜ் தழைந்து பேச, அருணாவின் கண்களில் மின்னல் வெட்டியது. குழந்தையும், கையு மாக இருந்த சஞ்சனாவின் பக்கம் பார்வை சென்றது. கூடவே நீரஜ்ஜின் பார்வையும் அவருடன் சென்றது.

''சஞ்சு, நான் தான் பார்ட்டிக்கு போறதில்லை என்று முடிவாகி விட் டதே, நீ பார்ட்டிக்கு சித்தப்பாகூட போயேன். நான் அம்மாகிட்டே சொல் லிக்கறேன்''.

''நானா''- கண்களை விரித்தாள். ''அது எப்படி சித்தி? எனக்கு அங்கே யாரையும் தெரியப்போறதில்லை. அப்பறம் பார்ட்டி டிரஸ் ஒன் றும் கொண்டு வரவும் இல்லை. இனி வீட்டிற்கு போய் டிரஸ் சேன்ஞ் பண்ணி கிளம்புவது எல்லாம் நடக்கற காரியமா? நான் எப்படி சித்தி அது வும் இந்த டிரஸ்லே?''

''என்னோட சாரி எதுவும்... என்று தொடங்கியவள், உடனே, ''சஞ்சு




''நீ அம்மாவுக்கு பயப்படு வியா, அப்பாவுக்குப் பயப்படு வியா?''

''நானும் அப்பாவும் அம்மா வுக்குத்தான் பயப்படுவோம்!''

-என். குணசீலன், பட்டுக்கோட்டை.





நெக்ஸ்ட் வீக்' வர உன்னோட ''பெர்த் டே'' க்குன்னு முதல் தடவையா ஒரு ஷிபான் சாரி வாங்கி ப்ளவுஸ் கூட அம்மாகிட்டே கொடுத்து ரகசியமா 'தைத்து வைத்திருக்கேன் அதை போட்டுட்டு போயேன்''.

''ஆமா சஞ்சு வாயேன். உன் சித்தி இந்த நிலையில் நான் தலைகீழா நின்றாலும் வரமாட்டாள். எனக்கும் தனியா போனால் சரியா இருக்கும்னு தோணலை''

இப்படி மறுப்பதற்கு வாய்ப்பே தராமல் இருவருமாக கேட்கையில் சஞ்சனாவால் சரி என்று தான் சொல்ல முடிந்தது.

## 11

மருந்துகளின் உதவியால் குழந்தைகளின் ஜுரம் கணிசமாக குறைந்திருந்தது. குழந்தைகள் அழுவதையும் நிறுத்தியிருந்தார்கள்.

சித்தி கொடுத்த புடவையும், சோளியையும் பிரித்து பார்த்தவுடனேயே அவள் முகம் லேசான குழப்பத்தை காட்டியது.

''ஐய்யோ சித்தி, பின்புறம் ப்ளவுஸ் இவ்வளவு 'டீப்' பாக இறங்கியிருக்கு. அப்புறம் இத்தனை ஸ்டிரிங்ஸ்! நான் இந்த மாதிரி ப்ளவுஸ் அணிந்ததேயில்லையே.''

''உன்னோட டெய்லர்கிட்டே அளவு கொடுத்து கொஞ்சம் லேட்டஸ்ட் 'பேர்ட்டனா' தைச்சுக் கொடுக்கச் சொன்னேன். போட்டுப்பாரு, அசத்தலா இருக்கும்.

சஞ்சனாவிற்கு புடவை மிகவும் பிடித்திருந்தது. லைட் ப்ளுவில் கொஞ்சம் பச்சை நிறம் கலந்த புடவையில் மயில் தோகை விரித்த மாதிரியான பச்சை, நீலம், வெள்ளை கற்கள் பதித்த வேலைப்பாடு கண்களை பறித்தது.

'டிசைனர் வேர்' சாரி என்று பார்த்ததுமே தெரிந்தது. ப்ளவுஸ்லேயும் அதே போன்ற நிறத்தில் கற்கள் வேலைப்பாடு செய்திருந்தது.

''சஞ்சு புடவை கட்டியவுடன் மேட்சிங்கா இந்த நகைசெட் அணிந்து கொள்''- என்று ஒரு நகை பெட்டியை கொடுத்து விட்டு போனார் அவர்.

பெட்டியை திறந்து பார்த்தாள் சஞ்சனா.

மிகப்பெரிய ஒற்றை கருநீல நிறக்கல் பதித்த மெல்லிய செயின், மேட்சிங்காக காதிலும், அதே நிற கல் பதித்த மயில் வடிவ தொங்கட்டான், கங்கணம் சைசில் வளையலும் கொடுத்து விட்டுப் போனார். இதே செட் சஞ்சனாவிற்கும் உண்டு. சித்தியுடையதை பார்த்து தான் அவளுக்கென்று வசுந்தரா செய்திருந்தார்.

குழந்தைகள் அறைக்கு பக்கத்தில் இருந்த 'கெஸ்ட் ரூமில்' தன்னை தயார்படுத்தினாள் சஞ்சனா.

இவ்வளவு நல்ல புடவையை கட்டும் போது அலங்காரமும் முழு அளவில் இருக்க வேண்டுமே என்றபடி வேகவேகமாக ஷாம்பு போட்டு தலைக்கு குளித்து விட்டு 'ப்ளோ' டிரை செய்து முடியை 'செட்' செய்தாள்.

ஆனால் மனசெல்லாம் சித்தியின் பேச்சில் தான் இருந்தது. காதல்,



கல்யணம், என்ன இனிமையான வாழ்க்கை. மனசு இந்த நினைவுகளை அசைபோட்டாலும், அலங்காரம் தானாகவே நடைபெற்றது.

பட்டாக விரிந்து முதுகில் படர்ந்து நுனியில் சுருண்ட கூந்தலும், புடவையும், மயில் தோகை வேலைப்பாடும், கற்கள் இறைத்த ஒளியும், ப்ளவுஸ் தைத்திருந்த விதமும் சஞ்சனாவை பேரழகியாக காட்டியது.

அழகான இள சிவப்பில் லிப்ஸ்டிக், கன்னத்தில் கொஞ்சமாய் ரூஜ், நெற்றியில் சின்னதாய் நீலக்கல் பொட்டு, கழுத்தில், காதில், கையில் அழகிய அணிகலன் என்று பிரம்மன் வடித்த சிலை போல் இருந்தாள்.

கண்ணாடியில் பார்த்த உருவம் அவளுக்கே வித்தியாசமாக இருந்தது. அவளே தானா? ப்ளவுஸ்ஸின் ஏற்ற இறக்கங்களா?

போன் பேசியபடி மீண்டும் உள்ளே வந்த அருணா, வைத்த கண் வாங்காமல் சஞ்சனாவையே பார்த்தார்.

''அக்கா உன் பெண் யாரைக் கொண்டு பிறந்தாள்? இப்படி ஒரு அழகும், நிறமும் நம்ம குடும்பத்திலும் சரி, அத்தான் குடும்பத்திலும் சரி இருந்ததில்லை. என் கண்ணே பட்டுடும் போல. ம்ம்...ம் ......அவள் பிறந்த நாளுக்கென்று நான் வாங்கி வைத்திருந்த அதே புடவை தான். ஆனால் சஞ்சு கட்டினதால் தான் புடவைக்கே ஒரு அழகுன்னா பார்த்துக்கோயேன்க்கா... ....அக்கா... ம்ம்...

குழந்தைகள் தூங்கத் தொடங்கியாச்சு. ஆனால் மனசு திக்திக்னு இருக்கு. ஊரெங்கும், டெங்கு காய்ச்சல். அது வேற மனசுலே பீதியை கிளப்புது. எனக்கு நிம்மதியாவே இருக்க முடியாதுக்கா... சரி நான் சஞ்சுவை அனுப்பி வைத்து விட்டு பேசறேன்'' என்று போனை வைத்த அருணா, சஞ்சனாவின் நெற்றியில் விழுந்த ஒற்றை முடிக்கற்றையை ஒதுக்கியபடி,

''அழகு ராணியாக உன்னை இப்படிப் பார்த்தவுடன் எனக்கு பார்ட்டிக்கு அனுப்ப மனமேயில்லை சஞ்சு. சித்தப்பா கூட வர்றாங்கதான். ஆனாலும் ''பத்திரம்'' சஞ்சனா. பார்ட்டியில் ''டிரிங்ஸ்'' எல்லோரும் எடுப்பாங்க. சித்தப்பா இண்ட்ரடியூஸ் பண்ணியபிறகு, கூடுமான வரையில் லேடீஸ் கம்பெனியிலேயே இரு. ஆண்கள் கிட்டே அதிகம் பேச வேண்டாம் ஜாக்கிரதை. பொதுவா ஒரு மணி, இரண்டு மணி வரை பார்ட்டி போகும். சித்தப்பா கிட்டே பன்னிரெண்டு மணிக்கெல்லாம், உன்னை கொண்டு விட்டுட்டு போகச் சொல்றேன்''- 'ஜாக்கிரதை' 'பத்திரம்' என்று மாறி மாறிச் சொன்னார்.

உண்மையில் சஞ்சனாவை இத்தனை அழகு பெண்ணை, இரவு நேர பார்ட்டிக்கு அனுப்ப மனமேயில்லை அவளுக்கு. சொன்னால் நீரஜ் புரிந்து கொள்ள வேண்டுமே. ஆனால் சஞ்சனாவை கணவன் பத்திரமாக பார்த்துக் கொள்வார் என்று தைரியம் இருந்தது.

''என்னோட நீல நிற ஹை ஹீல்ஸ் போட்டுட்டே போ சஞ்சு. என்னதும், உன்னதும் ஒரே சைஸ்தானே. மேட்சா இருக்கும்''- என்றபடி அதை தன்னுடைய 'ஷு' ரேக்கில் இருந்து எடுத்து வரச் செய்து, சஞ்சுவை அணியவைத்தார்.

''பார்ட்டியில் சல்சர்'' மேல்தட்டு வகுப்பில் ரொம்ப சாதாரண விஷ



யம் தான். வாரம் ஒரு முறையாவது இந்த மாதிரியான பார்ட்டிகள் நண்பர்கள் வட்டம், அல்லது பிஸினஸ் வட்டத்தில் நடப்பது தான்.

சஞ்சனா இந்தமாதிரி இரவு நேர பார்ட்டிகளுக்கெல்லாம் போனது கிடையாது. ஆனால்... இந்த ஆறு வருடம் மூன்பு முதலும், கடைசியுமாக போன நியூ- இயர் பார்ட்டீ திடீரென்று நினைவில் விரிந்தது. அதன் பிறகு வந்த நாட்களும்... முகம் அவமானத்தால் சிவந்தது. ஆனால் சமாளித்துக் கொண்டாள்.

போகும் வழியில் சித்தப்பாவிடம், வரும் தோழர்கள், கெஸ்ட்ஸ் பற்றி விசாரித்துக் கொண்டாள்.

''முக்கியமா ஒரு கிளையண்ட் மாட்டியிருக்கான். அவன் மட்டும் சரியா 'கிளிக்' ஆகிவிட்டால் பிஸினஸ் ரொம்ப பெரிய அளவில் வந்துவிடும் சஞ்சு. அவனுடைய அப்பாயிண்ட்மெண்டை பிடித்து, இன்னும் சொல்லப்போனால் அவனுக்காகவே ஏற்பாடு செய்த பார்ட்டீ அது தான். ஒரு குடும்பமாக வந்தால் அப்பொழுதும் பார்ட்டீ பிஸினஸ் ஆக தெரியாமல் ஒரு பர்சனல் 'டச்' வரும். பிஸினஸ்க்கும் அது ஆரோக்கியமாக இருக்கும். இந்த காரணத்தால்தான் அருணா வரவில்லை என்றதும் கொஞ்சம் 'அப்செட்' ஆகிவிட்டேன். பார்ட்டி தொடங்கி கொஞ்சநேரம் நீ இருந்து எல்லோரிடமும் கலகலப்பாக பேசிக்கொண்டிரு. நான் சீக்கிரம் உன்னை வீட்டுக்கு அனுப்பிவிடுகிறேன். இருந்தாலும் ஜாக்கிரதையாக இருந்து கொள் சஞ்சு. படித்த பெண் உனக்கு நான் சொல்லித்தரவேண்டாம்''- என்று அட்வைசோடு, அவருடைய பிஸினஸ் விரிவாக்கத்தைப் பற்றியும் பேசிக் கொண்டு வந்தார்.

ஆனால் சஞ்சனாவிற்கு மட்டும் அங்கு அவள் சந்திக்கப் போகும் நபரைப் பற்றி முன்பே தெரிந்திருக்குமானால் நிச்சயமாக இந்த பார்ட்டிக்கு வர சம்மதித்திருக்கவே மாட்டாள்.

விதி தன் விளையாட்டில் காய்களை அழகாக நகர்த்தியது.

## 12

பார்ட்டி நட்சத்திர ஓட்டலின் ஹாலில் இன்டோர் 'ஸ்விம்மிங் பூல்' பக்கமாக நடைபெற்றது.

பூவின் அறை வட்டத்தைச் சுற்றிலும் சின்னச் சின்ன வட்ட மேஜைகளும் அதை சுற்றி நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன.

ஆண்கள் அனைவரும் புல் சூட்டில் வந்திருந்தார்கள். சில வெளிநாட்டவரும் வந்திருக்கக் கண்டாள். பெண்கள் மாடலிங் ஸ்டேஜ்' லிருந்து அப்போது தான் இறங்கியவர்களைப் போல் 'செக்ஸி'யாக உடை அணிந்திருந்தார்கள்.

சஞ்சனாவை எல்லோருக்கும் தன் மகள் என்றே அறிமுகம் செய்து வைத்தார். ஆண்கள் மட்டுமல்லாமல், பெண்களும், அவளுடன் பேசவிருப்பமுற்றனர்.

வெரைட்டி, வெரைட்டியாக 'ஸ்டார்டர்ஸ்' ஸை எடுத்துக் கொண்டு வந்த பேரர்கள் அதை டூத்பிக்கில் குத்தி, டாப்கினுடன் வைத்து தட்டுடன்



நீட்டினார்கள்.

சாப்பிடுவதும், தங்களைப் பற்றிய அறிமுகப் பேச்சாலும் நேரம் கழிந்தது. உடைபற்றிய பேச்சே பெருமளவு விலாபித்தது.

அதுவும் பேஷன்ஷோவில் ஒருவர் மாடலமைத்த உடையை அணிந்து ஒய்யாரமாக நடந்து வந்த மாடல், 'கேட் வாக்' செய்ததை சொல்லி சொல்லி சிரித்து பின் விவாதித்தனர்.

அந்த பெண் வேண்டும் என்றே சுய விளம்பரத்திற்காக செய்திருப்பாள் என்று கொஞ்ச நேரம் விவாதம் செய்தார்கள்.

காதை அடைக்காத மென்மையான சங்கீதமும், அந்த இடத்தை வியாபித்தது. இரண்டு மூன்று முறை கண்களும் சஞ்சனாவின் அருகில், மது கோப்பைகளுடன் வந்து உல்லாசமாக பேசிச் சிரித்தனர். ஆனால் அடுத்த நிமிடம் சித்தப்பா எங்கிருந்தாலும் அருகே பரபரப்புடன் வந்து நின்றார்.

காப்பதற்கு ஆள் இருந்தாலென்னவோ, சஞ்சனாவிற்கு இருந்த சங்கோஜம், பயம் எல்லாம் மறைந்தது. மிக இயல்பாய் எல்லோரிடமும் பழகத் தொடங்கினாள்.

பார்ட்டீயை அனுபவித்து அவள் 'என்ஜாய்' பண்ணத் தொட்ங்கிய கணத்தில் சித்தப்பா, வெகுவேகமாக சஞ்சனா அருகில் வந்தார்.

''சஞ்சு சொன்னேனில்லை? அந்த முக்கியமான நபர் பற்றி, வந்து விட்டார். என்னுடன் வா. அறிமுகம் செய்து வைக்கிறேன்''- என்று அழைத்துச் சென்றார்.

எல்லோரையும் பார்த்து ரசனையுடன் சிரித்தபடி அழகு ஓவியமாக நடந்து வந்தவளின் முகம் அறிமுகப்படுத்தப்பட்டவனைக் கண்டதும், இரத்த பசையற்று வெளுத்துப் போனது.

''கடவுளே''!

அவன்...

பிரேம்!

கண்களில் கூர்மையுடன் அதே ஊடுருவும் ரேசர் பார்வை.

சஞ்சனாவை இந்த 'நேரத்தில்', 'இந்த' பார்ட்டியில் எதிர்பார்க்கவில்லை என்பது அவனது அதிர்ந்த முகம் உணர்த்தியது. கண்களில் கேள்வியும் இருந்தது.



'என் மகள்'- என்று பிரேமிடம் சஞ்சனாவிடம் திரும்பி இவர் ''மிஸ்டர் பிரேம்'', 'இவர் மிஸ் நந்தர்'' என்று அவன் அருகில் இருந்தவளையும் அறிமுகப்படுத்துகையில் தான் கண்கள் அந்தப் பெண்ணை நோக்கின. கை குலுக்க நீட்டிய நந்தாவின் கைகளை பற்றி கை குலுக்கிய போது தான் கவனித்தாள்.

மிக அழகான நவநாகரீகப் பெண், கோதுமை நிறம் வெகு கவர்ச்சி, வெள்ளை நிறத்தில் ஸ்லீவ்லெஸ் சீத்ரூ டாப்ஸீம், அதே நிறத்தில் மூட்டு வரை வழிந்து, லேயர் லேயராக பிரிந்து பறந்த வெள்ளை ஷிபான் ஸ்கர்டும் வெகு பாந்தமாக அவளுக்கு பொருந்தியது. கழுத்தில் கருப்பு நிற நெட்டட் 'ஸ்டோல்', கால்களில் இட்டாலியன் டைப்பில் கட்டப்படும் ஹை ஹீல்ஸ் செருப்பு ஒவ்வொன்றும் அழகுதான் எல்லாமாக சேர்ந்து அவளை பேரழகியாகத் தான் காட்டியது.

எல்லாவற்றையும் விட சஞ்சனாவின் கண்களை துருத்திக் கொண்டிருந்தது. அந்த பெண்ணின் கைகள் இருந்த இடம் பிரேமின் கைகளுக்குள் சிறையிருந்தன. அவன் பிடியில் பெருமையாக.

எத்தனை வருடம் கழித்தும், வேறொரு பெண்ணுடன் அவனைப் பார்க்கையில் சஞ்சனாவால் சகித்துக் கொள்ள முடியவில்லை. நெஞ்சை அடைத்துக் கொண்டு வந்தது.

சித்தப்பா அவனிடம் பேசப் பேச, அவன் கண்கள் முழுவதும் அவள் மேல் இருந்தன. முகம் மாறாமல் காத்து நந்தாவிடம் சிறிது உரையாடின. சஞ்சனாவால் அதற்கு மேல் தாக்கு பிடிக்க முடியவில்லை.

''ஜஸ்ட் எ மினிட் யூ கேரியான்''- என்றபடி ஏதோ வேலையிருப்பதைப் போல் நகர்ந்தவள் இன்னொருவரின் தொணதொணப்பில் மாட்டிக் கொண்டாள். எதுவும் ஒரு வகையில் சஞ்சனாவிற்கு நிம்மதியாகத் தான் இருந்தது.

மது அவரின் வயிற்றில் நான்கைந்து பெக் இறங்கியிருக்கும் போலிருந்தது. அவரே பேசிக் கொண்டிருந்தார். ஏதோ ஜோக்கடித்துச் சிரிக்க, தன் மனக்கலக்கம் வேறு யாருக்கும் தெரிந்து விடக் கூடாதென்று அவளும் வாய்விட்டுச் சிரித்தாள். அந்த சிரிப்பின் பின் மறைந்திருந்த சோகம் யாருக்கும் தெரியவில்லை.

தோள்புறம் மெல்ல தட்டி யாரோ அழைப்பதை உணர்ந்து திரும்பியவள் எதிரில் பிரேமைக் கண்டதும், தன்னை சமாளித்துக் கொண்டு மெல்ல ஓர் அறிமுகச் சிரிப்பை உதிர்த்தாள். இத்தனை வருடங்களாக அவன் நினைப்பில் அவள் இல்லை என்பதைப் போல,

''ஹலோ, ''ஹவ் ஆர் யூ'- என்றாள்.

''ம்ம்...ம்... இந்த பழக்கம் எல்லாம் இன்னும் தொடர்கிறதா?''- என்று அவன் தாடை இறுக விரல்களால் ஆண்களை சுட்டிக்காட்டி கேட்க, அவளைப் பற்றிய அவன் கணிப்பு இது தான்.

அவனிடம் மட்டும் மயங்கிய நெஞ்சம். புரிந்துக் கொள்ளவில்லையே அவன். நெஞ்சு எரிமலையாக எரிந்தது.

கடவுளே மறுபடி மறுப்பு எதற்கு அவனைக் கொண்டு வந்து என் முன் நிப்பாட்டுகிறாய்? அவன் இங்கு வந்தேயிருக்க கூடாது. ஒரு காலத்தில் அவனின் பார்வைகளுக்காக ஏங்கியவள், அவன் நின்ற இடத்தில்



நிற்க தவம் கிடந்தவள், இன்று அவனை காண, அவன் பேச்சை கேட்க, பிடிக்காமல் உதட்டை கடித்து நின்றாள். பிறகு தன்னை கடினப்பட்டு சமனப்படுத்தி முகத்தில் கடுகடுப்பைக் காட்டி

''என்ன?'' என்றாள்.

அவளின் ஒற்றை வார்த்தையில் அவன் புருவம் உயர்ந்தது.

''பரவாயில்லை. நிறைய மாறி விட்டாய் சஞ்சனா''- என்றான் சின்ன குரலில்.

''மாறாமல் இன்னும் விவரம் அறியாத சின்னப்பெண் போல உங்களையே சுற்றி சுற்றி வர வேண்டும் என்ற நினைப்பிருந்தால், மறந்து விடுங்கள். அன்று வயதின் கோளாறு. இப்போது எனக்கு நீங்கள் ஒன்றும் இல்லை''- என்று படபடப்புடன் நெற்றி வியர்க்க பேசினாள் சஞ்சனா.

அவன் புருவங்கள் தெரிந்தது. பேசி முடித்த சஞ்சனாவிற்கு அவ மீதே அவனுக்கு கோபம் வந்தது. ஏன் பழைய விஷயத்தை கிளறி பேசினோம் என்று வயிறு கலங்கியது.

அவள் உள் மனதில் 'நினைவுகள்' ஆறாத ரணமாக இருப்பது அவனுக்கு தெரிந்து விடக்கூடாது. அவற்றை எல்லாம் அவன் கண் மறைந்த நிமிடம் மறந்து சகஜ நிலைக்குத் திரும்பி விட்டாள்.

அவன் நினைவால், மறுப்பால், இவள் ஒன்றும் ஏங்கிக் கிடக்கவில்லை என்பதை உணர்த்தி விட வேண்டும் என்ற வேகம் மட்டுமே அவள் பேச்சில் இருந்தது. எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பது போல்? பேசியதற்கு ''ஹலோ ஹவ் ஆர் யூ'' என்றவுடன் போயிருந்ருக்க வேண்டும் என்று மூளை அவளின் தவற்றை சுட்டிக்காட்டியது.

தொண்டையை செருமியபடி, ''பிறகு வேலை வேண்டாம் என்று அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் வந்த பிறகும் சும்மா இருந்தது ஏன்?'' கேட்டான் அவன்.

''எனக்கு அந்த வேலை பிடிக்கவில்லை. சேருவதும் சேராததும் என்னிஷ்டம்.''

''ஆகா... இது நல்லாயிருக்கு'' என்றவனின் உதடு ஒரு புறமாக ஏளனமாக வளைந்தது. பிறகு தொடர்ந்து,

''எத்தனை கட்ட பரீட்சைகள், ரிட்டர்ன் எக்ஸாம், குரூப் டிஸ்கஷன், இண்டர்யூ என்று கடும் பயிற்சி எடுத்து ...பண்ணி, பங் கெடுத்தவளுக்கு வேலை கிடைத்ததும் பிடிக்காமல் போய் விடுமா? அதுவும் ஐநூறு பேரில் தேர்ந்தெடுக்கப்பட்டவள் நீ ஒருத்தி தான்...! நல்ல வேடிக்கை தான்''

அவன் பேச பேச சஞ்சனா கண் இமைக்காமல் அவனை பார்த்தாள். இன்று இங்கு அவள் வந்திருக்கவே கூடாது. அவனைப் பார்த்திருக்கவே கூடாது. பெரிய தவறு. விதி தான் அவளை இழுத்து வந்து அவன் முன் நிறுத்துகிறதே.

''ஏன் சஞ்சனா வேலை மறுப்பின் காரணம், நான் தானே? என்னை பார்த்து விட்டால் மீண்டும் மனம் அலை பாய்ந்து விடும் என்று பயந்து தானே வேலையை மறுத்தாய்?''

அழுத்தம் திருத்தமாக குரல் பிசறாமல் அவன் கேட்க, சஞ்சனாவிற்கு நிஜமாகவே தலை சுற்றியது. கிண்டல் செய்கிறான். அவளுக்கு தேவை தான். தன் கலக்கத்தை அவள் வெளியே காட்டிக் கொள்ளவில்லை.



அவன் பேசியதை கேட்டுக் கொண்டு முகம் சிவக்க நிற்க அவள் ஒன்றும் பதினாறு வயது சஞ்சனா இல்லையே. மனதின் கலவரத்தை முகம் சின்ன மாற்றத்தையும் காட்டவில்லை.

மெனிக்கூர் செய்து பளபளப்பாக மென்மையாக இருந்த விரல் கொண்டு சுருண்டு முன் விழுந்த தலை முடியை கோதி பின்புறம் தள்ளி, மென்மையாக சிவந்த உதடு விரிய சிரித்தபடி,

''தேவையில்லாமல் ஏதேதோ பேசுகிறீர்கள்? முன்னொரு காலத்தில் நடந்த நிகழ்ச்சியால் நான் மறந்து விட்ட சம்பவங்களில், மனிதர்களில் நீங்கள் ஒருவர், அவ்வளவு தான்.

''என்னைப் பார்த்து பாதிப்பில்லை என்கிறாய்? பின் வேலையில் சேர வேண்டியது தானே? கடைசி கட்ட இண்டர் வியூ வரை வந்து என்னைப் பார்த்தவுடன் வேலை வேண்டாம் என்றால், நான் என்னை நினைப்பது. மம்ம்?'' என்று ஒற்றை புருவம் உயர்த்தினான் பிறகு தொடர்ந்து ''அப்படி இல்லை என்கிறாய் நீ. நிரூபி பார்க்கலாம்.''

இவன் ஆபத்தானவன். முதலில் அவன் அருகில் இருந்து நகர வேண்டும் என்று மனசு அவளுக்கு கட்டளையிட்டது.

எதற்காக வலிய வந்து இப்படி பேசுகிறான்? இவனுடைய பேச்சுக்கு என்ன பதில் சொல்ல வேண்டும் என்று எதிர்பார்க்கிறான்? என்று நிறைய கேள்விகள் அவளுள் முளைக்க, கண்கள் உதவிக்கு சித்தப்பாவை தேடின. தூரத்தில் அவர் முகம் தெரிய அவரைப் பார்த்து கையசைத்தாள்.

''சித்தாப்பாவிடம் ஒரு விஷயம் கேட்க வேண்டியிருக்கிறது. ஒரு நிமிடம்...'' என்று ஒயிலாக கேட்டபடி திரும்பி நடக்க இரண்டெட்டுவைக்க,

சட்டென்று அவனின் நீண்ட கரங்கள் அவளின் மென்மையான கரங்களைப் பற்றித்தடுத்தன.

சஞ்சனா செயலிழந்து போனாள். அவன் தொடுதலில் அவள் முகத்தில் ரத்தம் 'குபூக்'என்று பாய்ந்தது. நெஞ்சம் ரேஸ் குதிரை வேகத்தில் தடதடத்தது.

''நிரூபி சஞ்சனா; என்னிடம் வேலைக்குச் சேர்ந்து நிரூபி சஞ்சனா. என்னால் உன்னிடம் நிகழ்ந்த பாதிப்பு இப்போது ஒரு நூலிழை கூட மிச்சம் இல்லை என்று நிரூபி பார்க்கலாம்''- என்று சவால் விடுவதைப் போலக் கேட்டான் அவன்.

இன்னும் அவள் கரங்களை அவன் விடுவித்த பாடில்லை. முதலில் சாதாரணமாக பற்றியிருந்த அவன் கரங்கள், அவள் தன் கரங்கள் தன் பக்கமாக இழுக்கமுற்பட்டது. அழுத்தவும், இந்த குறுகுறுப்பு அவளை மேலும் சிவக்க வைத்தது.

''உங்களிடம் எதையும் நிரூபிக்க வேண்டிய அவசியம் எனகில்லை'' முணுமுணுப்பாய் பதிலளித்தாள்.

''அப்படி என்றால் பாதிப்பு இருக்கிறது என்று அர்த்த பண்ணிக் கொள்ளவா?'' அவளை அவன் தூண்டி விடுவது அந்த நொடியில் சஞ்சனாவிற்கு புரியத்தான் செய்தது. ஆனால் அதன் காரணம் அவளுக்கு விளங்கவில்லை.

''அப்படியே இந்த வேலையில் நான் தான் சேர வேண்டும் என்று, உங்களுக்கு அப்படி என்ன பிடிவாதம். சும்மா, விரட்டி, விரட்டி பிடிக்கி



றீர்கள்''

உதடு ரகசியமாக விரிய, சில வினாடிகள் பளிச்சிட்ட, அவன் விழிகள் காட்டிய குறிப்புகளின் காரணத்தை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் சட்டென்று இயல்புக்கு வந்து விட்டான்.

''வேலைக்கு மிகத்தகுதியான பெண் நீ என்று இத்தனை பரீட்சைகள் வைத்து தேர்ந்தெடுக்கிறோம். கை நழுவி விடுவாயோ என்று பயம் என்று நிறுத்தி அவளை நோட்டம் விட்டு பிறகு தொடர்ந்து,

''என்னை அன்று பார்க்கும் வரை உனக்கு அங்கே வேலையில் சேர விருப்பம் தானே. எங்கே இல்லை என்று சொல் பார்ப்போம்.'' மீண்டும் புருவம் வளைந்தது அவனுக்கு.

''நீங்கள் என்ன பெரிய மன்மதனா? உங்களையே நினைத்துக் கொண்டு நான் இருப்பதாக எண்ணமா?'' நல்ல கதை. அவன் பேசியதில் உண்மையில் கோபம் வந்தது சஞ்சனாவுக்கு...

''அப்படி இல்லையென்றால் வேலையில் சேர்வதில் உனக்கென்ன தயக்கம்?''

''சரி உங்களிடம் வேலையில் சேர வேண்டும். அவ்வளவு தானே. அப்படியாவது நான் பழைய சஞ்சனா இல்லை என்பது உங்கள் மூளையில் ஏறினால் சரி'' என்று சலிப்புடன் பேசினாள் சஞ்சனா.

அதற்குள்,

''டார்லிங் இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள். அங்கே ஒரே ஃபன்'' என்று சிரித்தபடி வந்த நந்தாவின் சிரிப்பு உதட்டில் உறைந்தது. கண்கள் பிரேமின் கைகள் சஞ்சனாவின் கைகளை இறுகப்பிடித்திருந்த இடத்தில் நிலைத்தது.

சஞ்சனாவிற்கும் ஒரு மாதிரியாக இருந்தது. அவளுமே அவனிடம் இருந்த கைகளை விடுவிக்க அதன் பிறகு முயற்சியும் பண்ணவில்லை.

சகஜம் போல சஞ்சனாவின் கைகளை விடுவித்து விட்டு நந்தாவிடம் சுவாரசியமாக எதையோ சொல்லத் தொடங்க, சட்டென்று அந்த இடத்தை விட்டு அகன்றாள் சஞ்சனா.

நந்தாவின் இனிய குரலோசை சிரிப்பில் சஞ்சனாவை வேகமாக துரத்தியதோ!?



''எங்கவீட்டுலே திருடவந்த திருடன் திருடிட்டுப்போறப்ப ஒரு ஜோக் சொன்னான். அதுக்கு சிரிச்சதுதப்பா பேச்சு''

''என்னாச்சு?''

''என்னோட தங்கப்பல்லையும் தட்டி எடுத்திட்டுப்போயிட்டான்!''

-என். குணசீலன், பட்டுக்கோட்டை.

அதன் பிறகு ஒன்றுமே ரசிக்கவில்லை அவளுக்கு.

சித்தப்பாவின் அருகில் போய் அமர்ந்தாள்.

''ரொம்ப நேரம் அவருடன் பேசிக் கொண்டிருந்தாயே! முன்பே தெரிந்தவரா? என்று கண்களால் பிரேம்மை கட்டிக்காட்டி அவர் கேட்க,

''முன்பே'' என்ற வார்த்தையில் ஒரு சில வினாடிகள் மூளை மரத்துப் போனது, எந்த முன்பே கேட்கிறார்? பின் சமாளித்துக் கொண்டு,

''ம்...ம்... சித்தப்பா, போனவாரம் இண்டர்வியூ இவங்களோட ''ரோஸ்கார்ட்''க்கு தான் போனேன். லாஸ்ட் ஸ்டேஜ் இண்டர்வியூலே ஃபைனல் செலக்ஷன் நானும், இன்னொரு பெண்ணும். கடைசியில் நான் செலக்ட் ஆனேன். அதைத் தான் விசாரிச்சுட்டிருந்தார்.

''என்னது..., ரோஸ்கார்ட் இண்ட்லூயா? அங்கேயா உனக்கு வேலை கிடைத்தது. எனக்குத் தெரியாதே. சித்தி ஏதோ நீ வேலைக்கு போகமாட்டேன். பிடிக்கவில்லை என்று சொன்னதாக ஞாபகம். இத்தனை பெரிய இடத்தில் வேலை கிடைத்தால் நீ புத்திசாலியுடன், 'அதிர்ஷ்டசாலியும்மா''- அதிர்ச்சியும், பிரம்மிப்புமாக பேசினவர், தொடர்ந்து

''வேலைக்கு சேரமாட்டேன் என்று உறுதியாக முடிவு பண்ணி சொல்லி விடவில்லையே''

ம்மம் என்று மறுப்பாக தலையசைத்தாள் சஞ்சனா.

''எனக்கும் இனி கொஞ்சம் இலகுவாக இருக்கும் என்று பெரிய புன்னகையுடன் ரிலாக்ஸ் ஆக அவர் சொல்ல, மெல்ல பிரேம் இருந்த புறமாக கண்கள் அவள் கட்டுப்பாட்டையும் மீறி சென்றன.

அங்கே அவனும் அதே சமயத்தில் அவளைப் பார்த்தான். உதட்டில் புன்னகையும், கண்களில் கேள்வியூமாக.

உதட்டை கடித்துப் பர்வையை தழைத்தாள் சஞ்சனா.

## 13

சஞ்சனா வேலையில் சேர்ந்து நாட்கள் பல உருண்டோடின.

முதலில் டிரையினிங் பீரியட் என்று இரண்டு மாதங்கள் அவளுக்கு பயிற்சியில் கழிந்தது.

ரோஸ்கார்ட் மோட்டார்ஸ்'ல் இவன் பைனான்ஸ் பிரிவில். வாரம் ஒருமுறையாவது பிரேமி நேர்முகம் இருந்தது. அந்த நாட்களை கடத்துவது தான் சஞ்சனாவிற்கு பிரம்ம பிரயத்தனமாக இருந்தது. போதாதற்கு இரண்டாவது மாடியில் அவள் இருந்த கேபின் லிப்ட்டில் இருந்து இறங்குபவர்கள் ஒரு எட்டு எட்டி பார்த்துவிட்டு போவதற்கு தோதாகவேறு இருந்தது. பிறகு ஆட்கள் சந்தடிக்கு கேட்பானேன். பிரேம் உள்பட.

பிரேம்.

அவனைக் காண்கையில் அவள் சிறு பிராயத்தில் அறியாமல், செய்த பிழைதான் ஞாபகத்தில் வந்து அவளை குன்ற வைத்தது. அந்த அவமானம் வாழ்க்கையில் அவளின் மணவாழ்க்கையையே கேள்விக் குறியாக்கியது.

இப்போதும் அவளுக்கு அவனைக் கண்டால் தோன்றுவது அவமா



னச் சிவப்பே ஒழிய வெட்கச் சிவப்பு கிடையாது என்று மனதில் பல முறை சொல்லிக் கொண்டாள்.

அன்று வேலையில் கவனமாக இருந்தவள் தன் காபின் முன்னே ஆள் அரவம் கேட்க, வெளியே வந்து எட்டி பார்த்தாள். பார்த்தவளின் கண்களில் 'ஆயிரம் வாட்' மின்சாரம் தாக்கியது போல் பிரகாசமானது.

''ஏய் ஆனந்த்'' என்று சந்தோஷத்தில் மெல்ல இரைந்தாள். சஞ்சனாவை கண்ட மாத்திரத்தில் ஓடி வந்து சந்தோஷமாக கைகளை பற்றி குலுக்கினான் அவன்.

''சஞ்சு, வாட் எ ப்ளசண்ட் சர்ப்ரைஸ். இங்க என்ன பண்ணிட்டு இருக்கே?''- என்றான் அவன்.

''நீ சொல்லுடா. இரண்டு வருஷம் கழிச்சு தான் அமெரிக்காவில் இருந்து வருவேன் என்று ஏ.சி.சி.எஸ். டிகிரி படிக்கப் போனவன், ஆறே மாதத்தில் வந்து நிக்கறே. சொல்லு என்ன விஷயம்''- என்றாள்.

சட்டென்று அவன் முகத்தில் ஒளிமங்கியது. சமாளித்துக் கொண்டு,

''அதை விடு முதலில் நீ இங்கே என்ன பண்ணிட்டு இருக்கேன்னு சொல்லு''.

''இங்கே, பைனான்ஷியல் ஹெட்டாக நான் அப்பாயிண்ட் ஆகியிருக்கேன்னு சொன்னால் நீ பொறாமைப்படுவே ஆனந்த் தெரியுமா?''- கண்களில் மின்னல் வெட்ட பெருமையாக சஞ்சனா சொல்ல,

''இஸிட்''- என்றவன் சிரித்ததுடன் சரி. வா கேபினுக்குள்ளே என்று அவனை தன்னுடைய அறைக்குள் அழைத்துச் சென்று பெருமையாக எல்லாவற்றையும் காட்டினாள். பிறகு, காலேஜ், பிரண்ட்ஸ், புரபசர்ஸ் என்று அரட்டையில் கொஞ்சம் நேரம் கழிந்தது.

''சொல்லு ஆனந்த். நீ இங்கே என்ன பண்றே? அமெரிக்காவில் இருந்து எப்ப வந்தே? எப்பொழுது திரும்பி போகப்போகிறாய்?

பதில் பேச சில வினாடிக்ள் ஆயிற்று அவனுக்கு.

''நான் திரும்பி போகப் போவதில்லை சஞ்சு. நான் படிப்பை பாதியிலேயே நிறுத்திட்டு இன்று காலையில் தான் இந்தியா வந்தேன்.

''வாட்? என்ன சொல்றே? பாதியிலேயே நிறுத்திட்டா? வாட் டு யூ மீன் பை தாட்?''

''சஞ்சு உனக்கு என்னை நல்லா தெரியும். ஏதோ வீட்டில் அண்ணனுக்கு பயந்து அவன் இஷ்டப்பட்ட பேச்சுலர் டிகிரி முடித்தேன். அப்புறம் எப்படியோ எம்.பி.ஏ.வும் தடுமாறி முடித்தேன். கூடவே துணைக்கு உன்னை மாதிரி பிரண்ட்ஸ் கேங்க். படிக்கிற கேங்கில்... மாட்டிக்கிட்டதால் எப்படியோ படிச்சு டிகிரி வாங்கிட்டேன். ஆனா அமெரிக்காவில் முடியவில்லை. நான் இருக்குற ரூம் பக்கத்து பில்டிங்கில் மியூசிகல் ஆல்பம் போடற ரூம். தொடக்கத்தில் சும்மா கொஞ்ச நேரம் போனேன். இப்ப புல் ஆ அங்கே தான். என்னோட இண்ட்ரஸ் முழுக்க மியூசிக்கிலதான் இருக்கு. சொன்னால் வீட்டில் யாருக்கும் புரிவதில்லை''

''காலேஜ்லே. எல்லாகல்சுரல்ஸ்லேயும் உன்னோட பாட்டு இல்லாமல், மியூசிக் இல்லாமல் நடந்ததே கிடையாதே. அப்பவே மேக்னா சொல்வாள் சரித்திரத்தில் அடுத்த ஏ.ஆர். நகுமான் நீதான்னு நான் கூட நினைப்பேன், நீ அந்த லைன்லே போயிருந்தால் பிரம்மாதமாக வந்திருப்



பேன்னுட்டு''

''எங்க வீட்டுலே இதுக்கு பலத்த எதிர்ப்பு, அந்த மேனேஜ்மெண்ட் படி, இந்த மேனேஜ்மெண்ட்படி, ஹெச் ஆர் படி ஏ.சி.சி.எஸ். படி என்று எனக்கு கொஞ்சம் கூட பிடிக்காததை செய்தால் நான் என்ன செய்வது?''

''இப்ப எல்லாத்தையும் விட்டுட்டு வந்து நிக்கறியே. வீட்டில் எதுவும் சொல்லமாட்டாங்களா?

சொல்லமாட்டாங்களா? என்று வேதனையுடன் அவளை மாதிரியே கேள்வி கேட்டவன் தொடர்ந்து, எனக்கு ஒரு அண்ணன் இருக்கான். கொஞ்சம் கூட புரிஞ்சுக்கவே மாட்டான். மனசு 'கல்' மாதிரி அதை பண்ணாதே, இப்படி பண்ணாதே, இப்படி பண்ணு. இங்கே நில், அங்கே நில் என்று ஒரே மிலிட்டரி ரூல். எப்ப பார்த்தாலும் படி படி என்று சொல்லி ஒரே டார்ச்சர். ச்ச்சே. இப்ப மட்டும் நான் பண்ணிட்டு வந்திருக்கிற காரியம் அவனுக்கு தெரிஞ்சுது, நான் க்ளோஸ்''

''மீண்டும் உன்னை இன்வின்ஸ் பண்ணி, மிரட்டி, அமெரிக்காவில் போய் படிச்சு முடிச்சுட்டு வா என்று சொல்லப் போகிறார் ஆனந்த்''

''அது முடியாதே. இவன் அனுப்பினாலும் அவர்கள் ஏத்துக்கமாட்டாங்களே. அட்டனென்ஸ் கிடையாது. அதனால் சீட்டை கிழித்து அனுப்பிவிட்டார்கள்''

''மைகாட். இவ்வளவு செலவு பண்ணி அனுப்பி இவ்வளவு அறைகுறையா வந்தால் கோபப்படாமல் என்ன செய்வார்கள் ஆனந்த்''

''ஆனால் நான் முன்பே சொன்னேன், உனக்கு இதெல்லாம் சரிப்பட்டு வராதுன்னு. அண்ணனிடம் யாரும் எதிர்க்க கூடாது. ஒரு வார்த்தை மாறி பேச கூடாது. நான் அவன் கையில் மாட்டின பொம்மை. ஆடறா ராமா ஆடறா ராமா என்றால் கண்ணை மூடிக்கொண்டு குட்டிக்கரணம் போட வேண்டியது தா. எல்லாம் என் தலை விதி''.

''இல்லை ஆனந்த். உனக்கு பிடிக்காத பட்சத்தில் நீ முதல்லேயே உன்னோட விருப்பத்தில் பிடிவாதமாக நின்றிருக்க வேண்டும். இப்படி பாதியிலேயே ஓடிவந்தால் எனக்கே வருத்தமாக இருக்கிறது''

''சஞ்சு தப்பு செய்துவிட்டேன் என்கிறாயே? நல்ல தோழி நீயே என்னை புரிஞ்சுக்கவில்லை என்றால் என் அண்ணன் என்ன புரிஞ்சுக் கொள்ளவா போகிறான். என் தோலை உரித்திடுவான். அவன் கோபமாக






என்னை பார்வை பார்த்தாலே போதும், எனக்கு பத்து நாளுக்கு சாப்பாடு தொண்டைக்குள் இறங்காது. அந்த பார்வைக்கு பயந்தே அவன் சொல்வதெல்லாம் கேட்பேன். இந்த விஷயத்தை எப்படி அவனிடம் சொல்ல போகிறேன் என்றே தெரியவில்லை என்று கைகளை பிசைந்தான் அவன்.

''தப்பு செய்தால் அதை எதிர்நோக்கத்தான் வேண்டும். தைரியமா இரு ஆனந்த், அவன் தோள்களில் கைவைத்து தட்டி ஆறுதல் படுத்தினபடி, உன்னுடைய விருப்பத்தை வெளிப்படுத்தி அதில் உறுதியாக இரு. சரி இப்ப சொல்லு. இந்த பக்கம் என்ன விஷயமாக வந்தாய்?

ஒரு முறை சஞ்சனாவைப் பார்த்து கண்களை தட்டி விழித்தவன் பின் மேஜையில் கண்களை ஒட்டியபடி,

பதில் சொல்ல வாய்திறந்த வேளையில் கேபின் கதவை திறந்து கொண்டு வேகநடையுடன் பிரேம் வந்து நின்றான்.

வந்தவன் கண்கள் ஆனந்தைக் கண்டதும் கழங்கின. அதிலும் சஞ்சனா கைகள் அவன் தோள் பற்றியிருந்த விதத்தில் கண்கள் சிவந்தன.

''நீ... எப்படி இங்கே?'' வாட் ஆர்யூ டூயிங் ஹியர்?''- வார்த்தைகள் சரேல்லென்று கடுமையாக வெளிவந்தன.

நடுங்கிப் போய்விட்டான் ஆனந்த்.

''நான் அண்ணா... அண்ணா... படிக்க பிடிக்காமல் வந்துட்டேன்'' பதட்டத்தில் கொஞ்சம் கூட வார்த்தைகளுக்கு வர்ணம் பூசி செய்த தப்பின் வீரியத்தை குறைக்கத் தெரியாமல் 'ப்ளிச்' என்று போட்டுடைத்தான் ஆனந்த்.

நொடி கூட யோசிக்காமல் பிரேமின் கைகள் அவளை அடிக்க ஓங்கி விட்டது.

ஆனந்தின் அண்ணன் என்ற அழைப்பில் சகலமும் புரிந்து போயிற்று சஞ்சனாவிற்கு. ஆனால் அவன் மேல் விழும் முன் வீசிய கையை பிடித்தாள் சஞ்சனா.

''என்ன கொடூரம்? லண்டனில் பெற்ற குழந்தைகளை அடிப்பது கூட குற்றம், ஜெயில் தண்டனை தெரியுமா? நீங்கள் என்னவென்றால், வளர்ந்த தம்பியை மூன்றாம் மனிதரின் முன் அடிக்க கை ஓங்குகிறீர்கள்? உங்களை என்ன செய்ய?

''சஞ்சனா இதில் நீ தலையிடுவது சரியில்லை'' என்றவன் அவளின் கரங்களை சட்டென்று விலகி நகர்ந்தான்.

''உங்களின் சர்வாதிகார ஆட்சியில் ஆனந்தின் சின்ன சின்ன ஆசைகள் மிதிபட்டு அல்லவா போய்விட்டது.

''சின்ன ஆசைகளா? சின்னப்பிள்ளைத்தனமான ஆசைகளா?''- என்று அவன் உதட்டில் இருந்த தடித்து விழுந்தன வார்த்தைகள்.

''அவன் ரோபோ மிஷின் இல்லை, நீங்கள் அதை செய், இதை செய் என்று பட்டனை தட்டிவிட்டால் ஆடிக்கொண்டு செல்வதற்கு. தம்பியின் மேல் உண்மையாக அன்பிருந்தால், அவனின் விருப்பம் கேட்டு, அந்த பீல்டு படிப்பிக்கவேண்டும். லஞ்சம் வாங்குற காசு ஒட்டாது என்பது போல், விருப்பமில்லாமல், கட்டாயப்படுத்தி படிப்பது மூளையில் ஏறாது. நேரம் காலம் விரயம். அது கூட தனிமனித உரிமையை பறிப்பதா

கும்''- என்று வரிசையாக பிரேமின் மேல் குற்றப்பத்திரிக்கையை வாசித்தாள் அவள்.

அதுவரை அண்ணனை தனியாக எப்படி சந்திப்பது என்ற பதட்டத்தில் இருந்த ஆனந்த், சஞ்சனாவின் உதவியுடன் மெல்ல நகர்ந்து அவளின் துப்பட்டாவை பற்றிக் கொண்டான். என்னை காப்பது உன் கடமை என்பது போல்.

''நீங்கள் செய்வது தப்பு பிரேம்...'' என்று சஞ்சனா பேச்சை தொடர,

ஒரு கணம் பிரேமின் கண்கள் ஆனந்த் சஞ்சனாவின் அருகாமையை கணக்கெடுத்தது. முகம் கடுமையானது. சட்டென்று திரும்பி,

''ஆனந்த் என்னுடைய அறைக்கு உடனே வா''- என்று வேகமான நடையுடன் சென்று விட்டான். அவனும் பலி ஆடு போல் சஞ்சனாவை ஒரு முறை பார்த்து உதட்டை பிதுக்கியபடி அண்ணனை பின் தொடர்ந்து சென்றான்.

காலேஜ் ஹாஸ்டலில் தங்கிப் படித்தவன் ஆனந்த். பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளை என்று தெரியும். ஆனால் 'இந்த' குடும்பத்துப் பிள்ளை என்று அவன் அலட்டிக் கொண்டது இல்லை. மிகவும் மென்மையான சுபாவம். ஆனந்த் யார் என்று தெரிந்து சஞ்சனாவிற்கு வேறு உள்ளூர ஒரே ஆச்சர்யம் தான்.

அண்ணனுக்கும், தம்பிக்கும் நடந்து போகையிலேயே என்ன வித்தியாசம். பிரேமின் வேகமும், ஆண்மையும், ஆனந்தின் நிதானமும் மென்மையும் வெவ்வேறு இரு துருவம். உள்ளே அவனுக்கு என்ன திட்டு கிடைத்துக் கொண்டிருக்கிறதோ. பாவம் தான்.

14

மறுநாள் காலையிலேயே ஆனந்திடம் இருந்து போன் வந்தது. மிகுந்த மகிழ்ச்சியில் இருந்தான். அடுத்த இரண்டு மாதத்தில் மீண்டும் அமெரிக்கா போகிறானாம். அவன் இஷ்டப்பட்ட அதே மியூசிக் ஸ்கூல்லே சேர்ந்து படிக்க அண்ணன் அனுமதி கிடைத்து விட்டதாம். ஒரே சந்தோஷ ஆர்ப்பரிப்பு தான்.

''எல்லாம் உன்னால் தான் சஞ்சு''

''நான் என்ன பண்ணினேன்''- வியந்தாள் அவள்,

''எனக்கு என்ன பிடிக்கும் என்று கூட அண்ணனிடம் சொல்ல பயம். ஆனால் அதை அண்ணனிடம் எடுத்துக் கொடுத்தாயல்லவா? எப்படி தொடங்குவது, சொல்வது என்று ஒரு வாரமாக தூக்கம் சாப்பாடு ஒன்றும் கிடையாது. எங்க வீட்டில் அண்ணனிடம் யாரும் எதுவும் எதிர்த்து பேசவே மாட்டோம். அண்ணன் எது சொன்னாலும், செய்தாலும் சரியாகவே இருக்கும் என்பது எங்கள் எல்லோருக்கும் உறுதி. ஏதோ மரியாதை கலந்த பக்தி என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளேன். என்னோட இசை தாகம் என்னையும் மீறி இது நடந்துவிட்டது. எப்படி அண்ணனிடம் தைரியமாக அப்படிப்பேசினாய்? அதுவும் மிரட்டுவது மாதிரி. அவரிடம் வேலை பார்த்துக் கொண்டு மிரட்டுவதென்றால்... எனக்கு எங்கேயோ இடிக்கிறது.



''அ... அது... என்று என்ன பேசுவது என்று தெரியாமல் வார்த்தை தேடியவள், ஆனால் அவன் அவளின் பதிலை எதிர்பார்க்காமல் தொடர்ந்து பேசினான்.

''நம்ம செட் எல்லோரும் நாளைக்கு மீட் பண்ணலாமா? ஹரிணி, ராகவ், ஷ்யாம், தாரிகா, கெவின், சௌம்யா, எல்லோரையும் இன்வைட் பண்ணப் போறேன். உனக்கு தான் தாங்க்ஸ் கிவ்விஸ் பார்ட்டின்னு வைச்சுக்கோ சஞ்சு. எந்த ஒரு எக்ஸ்கியூஸ்'ம் சொல்லாமல் வந்து சேர்''

மறுநாள் சனிக்கிழமை. ஆனந்த் வீட்டு டின்னர் பார்ட்டி. காலையில் இருந்தே அவளுக்கு ஒரே யோசனையாக இருந்தது. டின்னர் பார்ட்டியில் பிரேம் இருப்பானா? போகத்தான் வேண்டுமா?

உள்ளுக்குள் குறுகுறுப்பாக அவளையும் மீறி ஆவல் பிறந்தது. பிரேம் குடும்பத்தை சந்திக்கப்போவது, மிகுந்த எதிர்பார்ப்பை உண்டு பண்ணியது.

என்ன அணிவது என்று ரொம்ப யோசித்தவள், பின்பு, ப்ளு ஜீன்சும், சிக்கன்வொர்க் செய்த தூய வெண்ணிற 'டாப்ஸ்'ம் அணிந்து, உயரக்கட்டி பறந்த கூந்தலும், முகத்தில் மிதமான மேக்கப்புமாக பளிச்சென்று இருந்தாள்.

''ஆனந்த் வீடு போய் சேர்ந்தவுடன் ஒரு போன் பண்ணிடுடா''- என்ற அம்மாவின் முகத்தில் முத்தமிட்டு விட்டு கிளம்பினாள் சஞ்சனா.

பிரேம்... ஆனந்த் வீடு நாகரீகமான தனி பங்களாவாக இருந்தது. பளிங்கு கதவுகளும், கண்ணாடியுமாக பளீச்சென்று இருந்தது. பார்ட்டி உணவருந்தி முடித்து விட்டு எல்லோரும் கிளம்பும் வரையில் பிரேம் வரவேயில்லை.

நீண்ட நாட்களுக்கு பிறகு தோழர், தோழியரை சந்தித்து அரட்டை அடித்ததில் பொழுது ரம்மியமாக சென்றது. நாளை காலை ஃப்ளைட்டில் ஆனந்த், சஞ்சனா தவிர மற்ற நண்பர்கள் அமெரிக்கா செல்லயிருந்தார்கள். நண்பர்கள் சொல்லி வைத்துக்கொண்டு ஒரே ஆபீஸில் வேலைக்கு சேர்ந்த வேலைக்கு சேர்ந்த ஆறு மாதம் ப்ராஜெட் என்று கம்பெனியே எங்களை வெளிநாடு அனுப்புகிறது என்று நண்பர்கள் ஒரே சந்தோஷத்தில் இருந்தார்கள். எல்லோருமாக சேர்ந்து போவது தான் இன்னும் சந்தோஷம்.

''எங்களை விட உனக்கு பல மடங்கு பிரமாதமாக வேலை தான், இருந்தாலும் நாங்கள் சேர்ந்த கம்பெனியிலேயே நீயும் சேர்ந்திருந்தா இன்னும் ஜாலியா இருந்திருக்கும்.''- என்று சஞ்சனாவை மிகவும் 'மிஸ்' செய்வதாக அவளிடம் நிறையவே அரட்டை அடித்தார்கள். சஞ்சனாவும் ஒரே கிண்டலில் இறங்கினாள்.

எத்தனையோ சந்தோஷமாக இருந்தாலும், பிரேம் எங்கே? என்று நெஞ்சு குடைந்தது. பிரேமின் அப்பாவும், அம்மாவும், தங்கையும் கூட மிகுந்த பிரியத்துடன் எல்லோரிடமும் பழகினர். கலாட்டா செய்தபடி ஹவுஸி ஹவுஸி கூட இரண்டு ரவுண்டு ஆடி முடித்தார்கள். இன்னும் பிரேமை காணவில்லையே சஞ்சுவால் அதிக நேரம் கட்டுப்படுத்த முடியவில்லை.

''ஏன் ஆனந்த், பிரேம் எங்கே? காணவில்லையே?''- வாய்விட்டு



கேட்டே விட்டாள். வேறு யாருடனோ, பேசிக் கொண்டிருந்த சத்யா கண்கள் சட்டென்று சஞ்சனாவின் புறம் திரும்பியது. ஆசை மகனின் பெயரை அவ்வளவு சர்வ சாதாரணமாக உபயோகித்தப் பெண் யார்? என்ற வியப்பு கண்களில் தென்பட்டது.

யோகேந்திரருக்கும் அதே வியப்பு தான். ''ஜெர்மனியில் இருந்து அண்ணன் பிரண்ட்ஸ் வந்திருக்காங்க, டின்னருக்கு வெளியில் போயிருக்காங்க என்ற பதிலில் சஞ்சனா உதடு கடித்தாள். அட.... பார்க்க முடியாதே..., என்ற ஏக்கமும், ஏன் பார்க்க வேண்டும். எதற்கு? என்ற எதிர்க் கேள்விகளோடு மனசு குழம்பிப் போனாள்.

டின்னர் முடிந்ததும், எல்லோரும் இரண்டு காரில் ஏறி போக, சஞ்சனா தன்னுடைய ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்தாள். அதற்குள் சின்ன தூரல்கள் 'சட சட'வென்று நொடியில் பெரிய மணிகளாகி மழை கொட்டியது. வேகமாக வண்டியை நிறுத்தி விட்டு கார்ஷெட் பக்கமாக மழைக்கு தப்பி நின்று கொண்டாள்.


அதே சமயம், 'சர்'ரென்று கூர்கா கதவை திறக்க ஒரு நீண்ட பெரிய வெண்ணிறக்கார் 'கார்ஷெட்டை' நோக்கி வந்தது.

மங்கிய அந்த இரவு நேர வெளிச்சத்தில் தேவதையாக நின்றவளின் கோலத்தைக் கண்டதும் வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தவன் ஒரு கணம் நெஞ்சு தடுமாறிப் போனான். அதற்குள் ஆனந்த் அங்கிருந்தே குரல் கொடுத்தான்.


''சஞ்சு வீட்டிற்குள் வா. மழை நின்றவுடன் போகலாம்.'' கையில் இரண்டு குடையுடன் வேலையாட்களில் ஒருவன் ஓடி வந்தான். பின்னாடியே ஆனந்த் வேகமான கண் அசைவினால் இதைக் கண்ட பிரேம், ''ஆனந்த், நல்ல மழை பிடித்துக் கொண்டது.

விடாமல் மழை பெய்யும் போல மேகம் கருத்திருக்கு. சஞ்சனாவை காரில் ஏறச் சொல். நானே டிராஃப் செய்கிறேன்''- என்று காரின் சன்னல் கதவை இறக்கி பேசினான்.

''கெவின் இப்பொழுது தான் கிளம்பினான். மழை பிடிக்கும் என்று முன்னே தெரிந்திருந்தால் சஞ்சனாவை அவனுடன் போக சொல்லியிருப்பேன். ஸாரி அண்ணா வந்து... என்று குழறியடித்து பேசிய ஆனந்த்,





சஞ்சனாவிடம் ஸ்கூட்டி சாவியை வாங்கிக்கொண்டு, அவள் மறித்துப் பேசிய பேச்சு ஒன்றையும் காதில் வாங்காமல், அண்ணன் பேச்சையே சிரத்தில் ஏற்று, காரின் முன் கதவை திறந்து அவளை ஏற்றினான்.

வீட்டில் இரண்டு டிரைவர்கள் இருக்கும் போது, இந்த சின்ன விஷயத்தில் பிரேம் காட்டிய ஈடுபாட்டில் வீட்டில் உள்ளவர்களுக்கு ஒரே ஆச்சர்யமாகிப் போனது. எந்த ஒரு பெண்களுக்காகவும் சுண்டு விரலை அசைத்தறியாதவன்.

சஞ்சனாவிற்கு காரில் இருப்பே கொள்ளவில்லை. ''மழை நின்றவுடன் போயிருப்பேன். உங்களுக்கேன் கஷ்டம்''- என்றபடி சங்கடமாக பேசி வீடு போகும் வழியும் சொன்னாள்.

ஒன்றும் பதில் பேசாமல் காரை ஓட்டியவனை பார்க்கையில் சஞ்சனாவிற்கு ஏதோ ஏதோ நினைவுகள் நெஞ்சில் அலை அலையாக கிளம்பியது.

அவன் காரில் ஏறியது தப்பு. ஏன், எல்லாம் அவளுக்கு எதிராகவே நடக்கிறது. இருந்தாற்போல இவள் ஸ்கூட்டியில் கிளம்பும் போது, தானா மழை பெய்ய வேண்டும்.

சரியாக அப்பொழுது தானா பிரேம் வர வேண்டும்? காரில் வெகு நேரம் நிசப்தமே நிலவியது. ஒவ்வொரு முறையும் கியர் மாற்றும் போது, அவள் மேல் அவன் கை பட்டது. வேண்டுமென்றா? என்று அவளுக்கு சந்தேகமாக இருந்தது. அவளை சீண்டி பார்க்கிறானா? ஆனால் எதற்கு?

''டேப்பில் பாட்டு போடவா?''- திடீரென்று அவன் குரல். அவளிடம் கேட்டபடியே காரில் இருந்த பட்டனைத் தட்டினான். மெலோடிஸ்ஸான ஆங்கில காதல் பாட்டு நெஞ்சை வருடியது. சஞ்சனாவிற்குள் நினைவுகள் எங்கெங்கோ தப்பியது. கார் சீராகச் சென்றது. ஆனால் அதில் பயணப்பட்ட இருவரின் மனதிலும் என்னென்னவோ எண்ணங்கள்.

''இடைப்பட்ட காலத்தில் நிறைய பாய்பிரண்ட்ஸ்ஸை மடக்கி கையில் போட்டிருக்கிறாய். பரவாயில்லை நல்ல முன்னேற்றம் தான்''- சம்பந்தமேயில்லாம, அவன் பேச்சை தொடங்க, சஞ்சனாவிற்கு அவனின் விகல்பமான பேச்சில் அவனை அடிக்க வேண்டும் போல கைகள் பரபரத்தது. கடினப்பட்டு அடக்கினாள்.

''என்ன பதிலையே காணோம். இல்லை என்று என்னிடம் பொய் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அப்படி சொன்னாலும் நான் நம்பவும் மாட்டேன். அவன் குரலில் என்ன இருந்தது? இயலாமையா? கோபமா? இளக்காரமா?

''நீங்கள் நம்ப மாட்டீர்கள் என்றால், எதற்கு இந்த அனாவசிய கேள்வி. ஆனாலும் உங்களுக்கு பதில் உண்டு.'' என்று நிறுத்தியவள் கோபத்தில் பின் தொடர்ந்து என்னுடைய பாய்பிரண்ட்ஸ் பற்றிய லிஸ்டை உங்களிடம் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை.

''ம்ம்..ம்... அவசியமில்லை தான். அவசியமில்லை தான்.''- அவன் பேசும் போது குரலில் இருந்த கடினம் சஞ்சனாவின் வயிற்றை கலக்கியது. மெல்ல இமை விரித்து திரும்பி கீழ் கண்க்ளால் அவனை நோட்டம் விட்டாள்.



காரை நூறு கிலோ மீட்டர் ஸ்பீடில் அனாயசமாக ஓட்டியவனின் கண்களில் இருந்த அலட்சியம், சிரிக்கவா என்று அழைக்கும்படியான உதடுகள், ஸ்டியரிங் வீலில் அவன் கரங்கள் சுழன்ற அழகு. ''ம்ம்ம்...''- என்று பிரேம் லேசாக தொண்டையை கனைக்க, சட்டென்று இமைத் தாழ்த்தினாள்.

வெட்கம் கெட்ட மனது என்று தனக்குள் சபித்தாள். இத்தனை வருடங்கள் கழித்தும், யாரிடமும் இதுவரை இப்படி கண்கள் அவள் வசமிழந்து சென்றதில்லை. இவன் என்றால் எல்லாம் உல்டா தான். அதன் பிறகு பேச்சும் இல்லை. வீடும் வந்து விடவே 'தாங்க்ஸ்' என்று முணுமுணுப்போடு இறங்கினாள்.

பதிலுக்கு அவன் தொண்டையை செருமியதுடன் காரை மின்னல் விரைவுடன் ஓட்டிக் கொண்டு போனான்.

## 15

லஞ்ச் டைம்மில் கேண்டீனில், ஒரு சிக்கன் ஃபர்கரையும், கோக்கையும் வாங்கி சாப்பிட்டுக் கொண்டிருந்தாள் சஞ்சனா. கூடவே அவளுடன் வேலை செய்யும் கோலீக்ஸ்ம் இருந்தனர். பொதுவான விஷயங்களைப் பற்றி பேசி விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது, ''சஞ்சு...'' என்றபடி வந்து நின்றது ஆனந்த்.

''ஆனந்த்...? சஞ்சனாவின் புருவம் உயர்ந்தது. அந்த நேரத்தில் அவனை எதிர்பாராததால் கண்களில் கேள்வியும் எழுந்தது. ஆனால் அவன் முகத்தில் இருந்த கவலை ரேகைகள் ஏதோ விஷயம் இருக்கிறது என்பதை அவளுக்கு உணர்த்த, எக்ஸ்கியூஸ்மி பிரண்ட்ஸ் என்றபடி தோளில் ஹாண்ட் பேக்குடன் கையில் கோக்கை மட்டும் எடுத்துக் கொண்டு கிளம்பினாள். தன்னுடைய கேபினுக்கு செல்லும் திசையில் நடக்கத் தொடங்கியவளிடம்,

''சஞ்சு கொஞ்சம் வெளியே போயிட்டு வரலாமா?'' என்று தயங்கியபடியே கேட்டான் ஆனந்த்.

''இப்பவா? லஞ்ச் பிரேக் முடியப்போகுது''

''எனக்காக அரை நாள் கூட லீவ் போட மாட்டாயா?''

''லீவா இஸ் இட் தாட் இம்பார்ட்டண்ட்?''

''ம்ம்... ப்ளீஸ்'' என்று அவன் கெஞ்சுகையில் இதழ் ஓரம் சிரிப்பில் துடித்தது.

அண்ணனுக்கும் தம்பிக்கும் எவ்வளவு வித்தியாசம். பிரேம் அகராதியில் ப்ளீஸ் என்ற வார்த்தைக்கே இடமிருக்காது. உருவத்திலும் எண்ணத்திலும் இவன் மான்குட்டி என்றால் அவன் சிங்கக்குட்டி.

''சரி வா. லீவ் சொல்லிட்டு வரேன்''

அவர்கள் இருவரும் லிப்ட் விட்டு இறங்கி வெளியே செல்வதை கட்டிடத்தின் மறுபுற வாசல் வழியாக உள்ளே வந்து கொண்டிருந்த பிரேம் பார்த்து விட்டு புருவம் சுருக்கினான்.

சஞ்சனாவிடம் பேசுவதற்கு என்று விட்டு, காபி ஷாப்பில் காபி ஆர்டர் செய்த பிறகும் மேஜையின் மேல் கோர்ந்து வைத்திருந்த விரல்களை

பார்ப்பதும் பின் மூடியை கோதி விடுவதுமாக இருந்தவனைப் பார்க்கையில் அவளுக்கு யோசனையாக இருந்தது.

''என்ன விஷயம் ஆனந்த். பிரேம் மறுபடியும் உன்னோட படிப்பு விஷயத்தில் பிடிவாதமாக இருக்கிறாரா?''

''அதெப்படி சஞ்சு. அன்னை ரொம்ப நாட்கள் பழக்கப்பட்டவரைப் போல் இவ்வளவு இலகுவாக பெயரிட்டு அழைக்கிறாயே.

''இதை கேட்கவா இவ்வளவு அவசரமாக என்னை அழைத்து வந்தாய்? உன் விஷயம் என்ன சீக்கிரம் சொல்''

''சீக்கிரம் என்ன சீக்கிரம்'' என்று எரிச்சல் பட்டான் அவன்.

ஒன்றும் பேசாமல் புருவம் சுருக்கி கேள்வியை பாவனையுடன் கேட்டாள் அவள்.

''அண்ணனுக்கு என்னை பற்றி முழுவதும் நம்பிக்கையே இல்லை''.

''எதை வைத்து அப்படி சொல்கிறாய்?'' அது தான் உனக்கு பிடித்த இசையை படிக்கத்தான் அனுமதி கிடைத்து விட்டதே. பிறகென்ன?

''சம்மதம் கொடுத்ததோடு விட்டார்களா? என்று நிறுத்தியவன். தலையில் பெரிய குண்டையல்லவா தூக்கி போடுகிறார். அண்ணன் சொன்னதை எப்படி மறுப்பது என்று தான் எனக்கு புரியவேயில்லை. இரண்டு நாள்களா இதே யோசனை சஞ்சு. ஆனால் முடிவு தான் புரியவில்லை. சரி, ஒரே மூளையா யோசிக்காமல், உன்னையும் யோசிக்கச் சொல்லலாமே என்று நினைத்தேன்.''

''புதிர் போடாமல் விஷயத்தை சொல்''


''எனக்குப் பொறுப்பே இல்லையாம். அதனால் அண்ணன் எனக்கு கல்யாணம் பண்ணி, பிறகு அமெரிக்காவிற்கு அனுப்ப போகிறானாம். இருபத்தியிரண்டு வயதில் யாராவது திருமணம் செய்வார்களா?

இதை அண்ணனிடம் யார் சொல்வது?

அம்மாவும், அப்பாவும், அண்ணன் சொல்வது தான் சரி என்கிறார்கள். நான் என்ன செய்யட்டும். எனக்கு, வாழ்க்கையில் ஒன்றும் சாதிக்காமல் கல்யாணம் செய்து கொள்வதில் இஷ்டமேயில்லை என்று தலையை பிடித்துக் கொண்டு உட்கார்ந்தான்.

கண்களில் கூர்மையுடன் ஆனந்தை இமைக்காமல் பார்த்த சஞ்சனா,

''உன்னை விட ஒன்பது வயது மூத்த அண்ணன் இன்னும் ஏன் திருமணம் செய்து கொள்ள்வில்லை ஆனந்த்? நியாயப்படி அவருக்கல்லவா திருமணம் முதலில் நடக்க வேண்டும்?






''நியாய அநியாயங்களுக்கு எல்லாம் அண்ணன் அகராதியில் இடமே கிடையாது. அம்மா, அப்பா சொல்லி அண்ணன் செவி கேட்காத விஷயம் என்று பார்த்தால் இந்த கல்யாண மேட்டர் தான். அம்மா எப்போதும் அண்ணனிடம் கல்யாணம் பற்றி கேட்பார்கள்''

''என்ன சொல்வார்'' கேள்வி அவளையும் மீறி வேகமாக பிறந்தது.

''அண்ணன் தான் எல்லோரையும் வசமாக தன் பிடியில் வைத்திருக்கிறானே. இப்ப வேண்டாமே, கொஞ்ச நாள் போகட்டும்மா, நானே சொல்றேனே, இந்த மாதிரி ஏதாவது சொல்வாங்க''

நான் என்றால் எந்த அபிப்பிராயமும் கேட்பதே இல்லை. இப்படி செய். அப்படி செய் என்று எல்லாமே டிக்டேஷன் ரூல் தான்.

''சரி அதுக்கு நான் என்ன பண்ணமுடியும்?

உன் அண்ணாவிடம் போய் இந்த மாதிரி பெர்சனல் விஷயம் எல்லாம் நான் எப்படி பேச முடியும்?''

''அண்ணாவிடம் வேண்டாம். ஆனால் எனக்கு பார்த்து வைத்திருக்கிற பெண் வீட்டில் சொல்லி வேறு, மாப்பிள்ளை பார்த்துக் கொள்ளுங்கள்.

நான் வேண்டாம் என்று சொல்லிவிடலாமல்லவா? அப்படி என்றால் வீட்டில் என்னை யாரும் கேள்வி கேட்க மாட்டார்களே!

வடிவேலு ஸ்டைலில் சொல்லணும்னா

''இது என்ன சின்னப்பிள்ளைத்தனமா இருக்கு'' என்று சொல்லி சிரிக்கத்தான் தோன்றியது சஞ்சனாவிற்கு.

''பெண் வீட்டில் போய் என்னவென்று சொல்வாய்? அதற்கு நான் என்ன செய்ய முடியும்? கொஞ்சம் மூளையுடன் பேசு ஆனந்த்''

''எல்லாம் மூளையுடன் இரண்டு நாளா யோசிச்சு கண்டுபிடிச்ச ஐடியா தான்''

''என்ன ஐடியா?''

''அதாவது... என்று வேகமாக பேசத் தொடங்கியவன் மெதுவாக வேகத்தைக் குறைத்தான்.

அவன் பேச்சின் வித்தியாச ஏற்ற இறக்கத்தில் சஞ்சனா கண்கள் தீவிரமாக அவனைப் பார்த்தாள்.

''வந்து சஞ்சு, எனக்கு ஏற்கனவே வேறு இடத்தில் இண்ட்ரஸ்ட் இருக்குன்னு சொல்லலாமான்னு...'' வார்த்தைகளைமென்று விழுங்கினான் அவன்.

''வேறு இடத்தில் இண்ட்ரஸ்ட் என்றால் என்ன அர்த்தம் ஆனந்த். உனக்கு கல்யாணம் பிடிக்காது. மியூசிக் தான் இண்ட்ரஸ்ட் அது மாதிரி... என்று பேசிய சஞ்சனாவின் பேச்சை மறித்தான் அவன்.

''அதெல்லாம் பெரிய விஷயமாக எடுத்துக்க மாட்டார்கள். அதனால் எனக்கு ஆல் ரெடி பெண் இருக்கு என்று சொல்ல போறேன்.''

''அப்படின்னா?''

''நான் வேறு பெண்ணை காதலிப்பதால், ப்ளீஸ் நீங்கள் திருமணத்தை நிறுத்தி விடுங்கள். எங்கள் 'லவ்' மேட்டர் வீட்டில் தெரிந்தால் ரொம்ப குளறுபடியாகி விடும். மெதுவாக சமயம் பார்த்து என் லவ் மேட்



டரை சொல்லலாம் என்று நான் நினைத்துக் கொண்டிருக்கும் போது, திடீரென்று என்னைக் கேட்காமலே திருமணம் நிச்சயித்தி விட்டார்கள்.

ப்ளீஸ் ஸாரி. உங்களுக்கே என்னை பிடிக்காத மாதிரி திருமண பேச்சை நிறுத்தி விடுங்கள். இவ்வளவு சீக்கிரத்தில் என்னோட திருமண பேச்சை எடுப்பார்கள் என்று நான் நினைக்கவேயில்லை.''

ம்ம்ம்... மேலே சொல்லு என்ற பாவனையில் சஞ்சனா இருக்க,

''கேர்ள் ஃப்ரெண்ட் என்றபடி உன்னையும் கூட்டிக்கொண்டு போய் ரிக்வெஸ்ட் பண்ணினால் சொல்லும் பொய் கொஞ்சம் எஃபெக்டிவ்'வாக இருக்கும் சஞ்சு.

ப்ளீஸ் எனக்கு நீ இந்த ஹெல்ப் மட்டும் கண்டிப்பாக நீ செய்யணும் என்றபடி பேச்சை நிறுத்தினான் அவன். உண்மையில் அதிர்ந்து தான் போனாள் சஞ்சனா.

தோழர், தோழிகள் தங்களுக்குள் உதவி செய்யலாம் தான். ஆனால் அதற்கும் அளவு உண்டல்லவா? இவனானால் காதலி என்றல்லவா சொல்ல சொல்கிறான். பொய் என்றாலும் அவளால் முடிகிற காரியமா?

''யோசிக்காதே சஞ்சு. நான் இரண்டு நாட்களா யோசிச்சிட்டேன். எனக்கு இதை தவிர, வேறு வழியே தெரியவில்லை. ப்ளீஸ் சஞ்சு. ப்ளீஸ் சஞ்சு என்று சஞ்சுவின் அதிர்ந்த பார்வையில் அவன் கெஞ்ச.

''என்னால் முடியாது. நான் எப்படி...ச்சே... ப்ளீஸ் பர்கெட் அபௌட் தாட்''- என்று பேச்சை முடித்தாள்.

''என்ன சஞ்சு இப்படி முடிச்சிட்ட உன்னை விட்டால் நான் யாரிடம் ஹெல்ஃப் கேட்பேன்''- அவன் குரல் கம்மி போயிருந்தது.

சஞ்சனாவிற்கு அவனைப் பார்க்கையில் பாவமாக இருந்தது. சில நொடிகள் கண் மூடி யோசித்தாள். பிறகு,

''ஆனந்த், நீ ப்ளான் போட்டது மாதிரியே எனக்கு திருமணத்தில் இண்ட்ரஸ்ட் இல்லை என்று பெண் வீட்டில் சொல்லி விடு. ஆனால் காதலி என்று என்னை கொண்டு போய் நிறுத்தினால் தான் நம்புவார்களா? உன் கல்யாணத்தில் நீயே விருப்பம் காட்டவில்லை என்றால் அவர்களே திருமணத்தை நிறுத்தி விடவே நினைப்பார்கள்.

''அப்படி என்றால் நான் இன்றே போய் பேசி விடட்டுமா? எல்லாம் சரியாக வருமா? எனக்கு ஒரே பயமா இருக்கு என்று முடித்தான்.

''ஆனால் ஆனந்த், நீ இப்படி இந்த இரண்டாவது வழியைப் பற்றி யோசித்ததே எனக்கு பிடிக்கவில்லை. உன் வீட்டிலேயே நீ எல்லோரிடமும் இவ்வளவு சீக்கிரம் திருமணம் புரிவதில் விருப்பமில்லை என்று உறுதியாக சொல். போராடு.''

''சொல்லி பார்த்தாகி விட்டது. மதிப்பு கொடுத்து கேட்டால் தானே. வெளிநாட்டில் இந்த மாதிரி. ஃபீல்டிங் படிக்க போனால் கெட்டு போவதற்கு நிறைய சான்ஸ் இருக்காம். அதனால் கல்யாணம் கட்டிக் கொண்டு மனைவியோடு போனால் என்னை அடக்கி வைத்து கொஞ்சம் உருப்படற வழியை காட்டுவாளாம்.

எனக்கும் கொஞ்சம் பொறுப்பு வருமாம். இல்லாவிட்டால் திரும்பவும் படிக்காமல் வந்து, இந்த மியூசிக் பிடிக்கவில்லை, வேறு எதிலாவது சேர்த்து விடுங்கள் என்று நிற்பேனாம். எவ்வளவோ பேசி பார்த்து விட்டு



தான். இனி இங்கே இந்த பேச்சு எடுபடாது என்று புரிந்தவுடன் தான் இந்த இரண்டாவது வழியைப் பற்றி நான் யோசித்தேன்.''

மேலும் சிறிது நேரம் பேசி விட்டு இருவரும் கிளம்பினார்கள்.

16

கடந்த ஒரு வார காலமாகவே ஆனந்த் அவளிடம் பேசவில்லை. சாதாரண நாட்களாக இருந்திருந்தால் அதற்கு சஞ்சனா முக்கியத்துவம் கொடுத்திருக்க மாட்டாள். ஆனால் அவன் கல்யாண மேட்டரை எப்படி டீல் செய்தான் என்பதை அறிய அவள் ஆவலோடு இருந்தாள். அவனுடைய செல்போன் நம்பரை வேறு ஏதோ நோட்டில் எழுதியிருந்தாள். அதை வேறு காணவில்லை. செல்லில் ஸ்டோர் செய்யாமல் விட்டதால் நம்பர் அழிந்திருந்தது. சரி பிரேம்மிடம் ஆனந்த் நம்பரைக் கேட்டு பார்த்தால் என்ன என்று மனசுக்குள் ஒரு எண்ணம் ஓடியது. ஆனால் சஞ்சனாவிற்கும் மேலே யோசிக்க நேரம் இல்லாமல் வேலை நிறைய இருந்தது.

அன்று ஆபீஸ் வந்தவள், லப்-டாப்பில் 'இம்போர்ட் செய்ய வேண்டிய ஸ்பேர் பார்ட்ஸ்' ''பட்ஜெட் ப்ளான் ஐ சரி பார்த்தாள். இத்தோடு இதை அவள் சரி பார்ப்பது ஐந்தாவது தடவை. எதிலும் தவறு செய்திருக்கூடாதே என்ற நோக்கத்தில் இன்னொரு முறை செக் செய்வதிலும் அவளுக்கு களைப்பு தெரியப்போவதில்லை தான்.

காரணம் பிரேம்.

நாளை அவனிடம் பட்ஜெட்டை நேரடியாக ஒப்புவித்து டிஸ்கஸ் பண்ண வேண்டியிருந்தது. முதல் தடவை அவளுக்காக கொடுக்கப்பட்டிருந்த ப்ராஜெக்ட் கிட்டதட்ட இரண்டு மாதமாகவே பெருமளவு நேரம் இதில் தான் செலவழிந்தது.

மறை மலை நகர் கார் ஃபேக்டரிக்கு கூட ஆறேழு முறை போய் வந்தாள். ஸ்டாக் செக் பண்ணி, கம்பெனிக்கான தேவையின் அளவை கணக்கிட்டு கடந்த வருட பட்ஜெட் கூட முற்றிலும் அலசி ஆராய்ந்து பார்த்து ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட ஸ்பேர் பார்ட்ஸ் கணக்கெடுக்கச் சொல்லி, இவள் மேற்பார்வை பார்த்து, தேவையானவற்றை ஹைலைட் செய்து... இன்னும் எத்தனையோ...

காலையில் பத்து மணிக்கு ஆபீசில் அவன் அறையில் மீட்டிங். சஞ்சனா சீஃப் பைனான்ஷியல் அட்வைசர் என்பதால் அவனும், அவளும் மட்டுமாக வேலையை எண்ணுகையில் மிகப்பெருமையாகவும், அவள் போட்டிருந்த பட்ஜெட் அமைப்பில் கர்வமாகவும் உணர்ந்தாள் சஞ்சனா. மிகவும் விருப்பப்பட்டு படித்த பாடம், மிக கஷ்டப்பட்டு அவள் தகுதியை கூடுதலாக்கி, மிகப்பெரிய நிறுவனத்தில் கிடைத்த வேலை.

எல்லாமே அவள் நினைத்த விதத்தில் அமைந்தது. ஆனால் பிரேம்?! அவன் தான் அவளை மீறிக் கொண்டு நிகழ்ந்தவன்.

தன் வேலையில் பெருமையாக அவனின் கச்சிதமான அலுவல் அறைக்கும் சென்ற சஞ்சனா அவளை கண்டவுடன் தலையசைத்தபடி சுழல் நாற்காலியில் இருந்து எழுந்து, அங்கிருந்த கிரீம் நிற லெதர் சோபா

வில் அவளை அமர, கை காட்டி விட்டு தானும் எதிரில் இருந்த மற்றொரு சோபாவில் அமர்ந்து, 'எஸ், என்ற படி அவளின் பைலுக்காக தன்னுடைய நீண்ட உறுதியான கைகளை நீட்ட சஞ்சனாவிற்கு பேச நினைத்தது எல்லாம் மறந்தது போல பிரம்மை ஏற்பட்டது.

என்ன வேகம்?''

நொடிக்கூட வீணாக்காமல் அவன் செயல்பட்டது அவளை ஈர்த்தது, எப்போதும் போலவே.

வேலை நேரம் செல்லச் செல்ல கடினம் கூடியதே தவிர குறையவில்லை. அவளின் குறிப்புகளில் தவறு இருந்தது போலும் தெரியவில்லை. ''குட், இதைத்தான் எதிர்பார்த்தேன். வெல்டன்'' என்று அவன் வாய் பாராட்டினாலும் கண்களில் பாராட்டுதல் இல்லை.

ஏன்?

சஞ்சனாவிற்கு புரியவில்லை.

இவ்வளவு பெரிய நிறுவனத்தை நிர்வகிப்பவன் நெஞ்சில் என்ன கவலையோ?

வேலை நல்ல படியாக பாராட்டுதலுடன் முடிவடைந்ததால் சஞ்சனாவின் முகம் மலர்ந்து போனது. அவனிடம் விடைப்பெற்றுக் கொண்டு எழுந்தவள். ஆகா... ஆனந்த் செல் நம்பரை கேட்க நல்ல தருணம் என்று மனதில் எண்ணியபடி,

''ஆனந்த் செல் நம்பர் எனக்கு 'வேண்டுமே'' என்று சாதாரணமாக கேட்டாள் சஞ்சனா.

ஆனால் அவள் கேட்ட மாத்திரத்தில் அவன் கண்களில் தெரிந்த சீற்றத்தை கண்டு சஞ்சனா நெஞ்சு திடுக்கிட்டு போனாள்.

என்ன கேட்டு விட்டாள்? தவறாக ஏதாவது பேசி விட்டாளா? என்று மீண்டும் மனசு அவள் கேட்டதை ஒரு முறை ரீப்ளே செய்தது. இல்லையே?

பிரேம் பதிலொன்றும் பேசாமல், புருவம் நெருங்க இமைக்காமல் பார்த்த பார்வையில் சஞ்சனா பரீட்சையில் கேள்விக்கு விடை தெரியாத சின்ன பிள்ளையை போல முழித்தாள். ஆனால் அவன் அதே வேக நடையுடன் அணிந்திருந்த கழுத்து 'டை'யை அட்ஜெஸ்ட் செய்து கொண்டு தன்னுடைய ப்ரீஃப் கேஸை எடுத்துக்கொண்டு பதிலொன்றும் பேசாமல் அறையை விட்டு வெளியே செல்ல போவதைக் காணவும் சஞ்சனாவிற்கு குழப்பமாக இருந்தது.

ஏதேனும் பிரச்சனையோ?

இந்த ஆனந்த் தன்னுடைய பிரச்சனையை எப்படி கையாண்டானோ? கோபத்திற்கு ஆளுமைக்கும் முன்னால், தன்னுடைய விருப்பத்தை தைரியமாக சொல்லியிருப்பானா? ஒரு நல்ல தோழியாக எண்ணி தன்னுடைய உதவியை கோரியவனுக்கு, இந்த சந்தர்ப்பத்தில் கொஞ்சம் உதவலாம் என்று சஞ்சனாவிற்கு தோன்றிய காரணத்தால்,

''ஆனந்த் பற்றி உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்'' என்றாள்.

''அவனைப் பற்றி பேச உனக்கு அருகதை கிடையாது விட்டு விடு'' மின்னல் விரைவுடன் பிரேமிடம் இருந்து வந்த ஊசியாய் குத்தியாக பதிலில் சஞ்சனாவிற்கு முகம் கோபத்தில் சிவந்தது.



இந்த மாதிரி பதில் பேசுபவனிடம் இரண்டு வார்த்தைக் கூட நிச்சயமாக ஆனந்த் பேசியிருக்க.. என்ற நினைப்பும் கூடவே வர,

''என் அருகதை பற்றி பிறகு பேசுகிறேன். அதற்கு முன் ஆனந்த் திருமணத்தை பற்றி எனக்கு முக்கியமாக பேச வேண்டும்'' சஞ்சனா தனக்குள் பொங்கிய கோபத்தை அடக்கியபடி நிதானமாக சொல்ல அவனுடைய தாடை மேலும் இறுகி போயிற்று. அதைக் கண்டும் காணாதது போல தொடர்ந்தாள் சஞ்சனா.

''ஆனந்த் தற்சமயம் இசை பற்றிய படிப்பு, பயிற்சிக்கு முழு ஆவலாக இருக்கிறான். திருமணம் பற்றி நீங்கள் சொல்லியதையும் சொன்னான். இசையில் எதையாவது சாதிக்க வேண்டும் என்கிற ஆர்வம். திருமணத்தால் மட்டுப்பட்டு விடுமோ என்று நினைக்கிறான். அதனால்... என்று மிகப்பொறுமையாக ஆனந்த் மனதிலிருப்பதை தெளிவாக சஞ்சனா சொல்ல

''அதனால்...'' என்று கடித்த பற்களுக்கிடையே வார்த்தையை சீற்றத்தோடு அவன் சொன்ன விதத்தில், இவனிடம் சுற்றி வளைத்துப் பேசி பயனில்லை என்ற முடிவோடு

''யாரையும் வற்புறுத்தி திருமணம் செய்து வைக்க முடியாது பிரேம். ஆனந்த் விருப்பத்தை முதலில் கேட்க வேண்டும், மதிக்க வேண்டும். ஏற்கனவே அவன் விருப்பம் கேட்காமல் கட்டாயப்படுத்தி அமெரிக்காவிற்கு படிக்க அனுப்பினீர்கள் என்னவாயிற்று? அது உங்களுக்கே தெரியும். அவனுக்கு விருப்பமில்லாமல் திருமணம்...''

பிரேமின் கண்களில் சடாரென்று ஏறிய சிவப்பில் சஞ்சனா பயந்து போனாள். இந்த பத்து நிமிடத்தில் நொடிக்கொரு தரம் அவன் நிறம் மாறியது. அவளின் பிரம்மை என்று கூட அவளுக்கு தோன்றியது.

ஏன்?

எதற்காக இவ்வளவு கோபம்?

இவள் யார் அவர்கள் வீட்டு விஷயத்தில் தலையிட என்று நினைத்து விட்டானா?

''திருமணம் வேண்டாம் என்று ஆனந்த் சொல்வதன் காரணம் எனக்கு தெரியும்'' என்றவன் அதற்கு மேல் அவளிடம் பேச பிடிக்காதவன் போல அறையின் கண்ணாடி கதவை நோக்கி நடக்க... எவ்வளவு ஈடுபாடில்லா



''இதோ பாருங்க... உங்கக் கிட்டே கிரடிட் கார்டு இருக்குங்கறது உண்மைதான்... அதுக்காக இப்படி கல்யாண வீட்டில் மொய் எழுதற இடத்தில் வந்து கார்டை நீட்டுவது சரியல்ல!''

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.



மல் பேசுகிறான். காரணம் தெரிந்த பின்பும் தம்பியின் வார்த்தைகளுக்கு செவி கொடுக்காமல்...

''காரணமா, அதை என்ன மறைத்தா வைத்திருக்கிறான். பெரிதாக அப்படி எதை கண்டுபிடித்தீர்களாம்? அது தான் பட்டவர்த்தனமாக...''

வேக வேகமாக நடந்தவன் சஞ்சனாவின் பேச்சில் சட்டென்று திரும்பினான்.

''தெரிகிறதல்லவா? ஆனால் அது நடக்காது. நடக்கவும் விடமாட்டேன்'' என்று இடி முழக்கம் போல உறுமி விட்டு சென்று விட்டான்.

என்ன அராஜகம்?

என்ன அதிகாரம்?

கூடப்பிறந்த தம்பியின் எண்ணத்திற்குக் கூட கொஞ்சமும் மரியாதை கிடையாதா?

சஞ்சனாவிற்கு எரிச்சல் வந்தது.

அதன் பிறகு வந்த நாட்களிலும் அவள் எதைப்பற்றி பேசினாலும், கடித்து குதறி விடுவான் போல தான் கோபத்தின் உச்சத்தில் இருந்தான்.

சஞ்சனா புரியாது விழித்தாள்.

அவள் என்றால் அவ்வளவு வெறுப்பா?

17

அருணா தன்னுடைய 'டிரிப்லெட்ஸ்'' பிறந்த நாள் விழாவை பெரிய விழாவாக கொண்டாட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார்.

''அருணா எல்லோருக்கும் ''டிரஸ் கோட்'' கொடுத்திருக்கிறாள். பேபி பிங்க் நிறத்தில் உடையணிந்து கொண்டு வர வேண்டுமாம். சஞ்சு உன்னிடம் ''பார்ஸி வொர்க் செய்த 'பேபி பிஸ்க்' ஸாரி இருக்குதுல்ல, அதை எனக்கு கொடுத்துடு, நான் அதை கட்டிக்கிறேன். நீ உன்னோட தீபாவளிக்கு எடுத்த லேங்கா சோளியை அணிந்து கொள். நல்ல வேளை அது பிங்க் கலரில் எடுத்தோம்'' நிம்மதி பெருமூச்சாக தாய் வேகமாக ஃப்ளான் போட சஞ்சனாவிற்கு சிரிப்பாய் இருந்தது.

''என்னம்மா, சின்னப்பிள்ளைப் போல ரொம்ப எக்ஸைட் ஆகறீங்க''

''அப்பாவுக்கு டிரஸ் இருக்கு. தம்பிக்கு .... டீ சர்ட் எடுக்கணும். டிரிப்லெட்ஸ்க்கு டிரஸ், நகைன்னு ஷாப்பிங் போகும் போது வாங்கிடலாம். சஞ்சனா பேசியதை காதிலேயே போட்டுக் கொள்ளாமல் வேக வேகமாக ப்ளான் போட்டார் அவர்.

''நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை உனக்கு லீவு தானே சஞ்சு. என் கூட ஷாப்பிங் வாயேன். உன் செலக்ஷன் நல்லாயிருக்கும். குழந்தைகளுக்கு டிரசும், நகையும் ... பரிசா கொடுக்கணுமே. ப்ரீயா வரயாடா'' கெஞ்சலாக கேட்டாள்.

''ஓ யெஸ் நாளை புல்டேயும் ப்ரீ தான். எனக்குக் கொஞ்சம் ஷாப்பிங் பண்ணணும் போலேம்மா'' என்று சம்மதித்தாள் மகள்.

ஞாயிற்றுக்கிழமை,

ஸ்பென்ஸர் பிளாசாவில் கூட்டம் அன்று சற்று அதிகமாகவேயிருந்



தது. இருந்தாலும் வசுந்தராவும், சஞ்சனாவும் கூட்டத்தை பெரிய விஷயமாக நினைக்காமல் தங்களுக்கு வாங்க வேண்டிய சாமான்களை வாங்க குறியாய் கடை கடையாக நுழைந்து துளாவினார்கள். காஷ்மீர் எம்போரியத்தில் சஞ்சனா தனக்கென்று இரண்டு டாப்ஸ் வாங்கினாள். ரொம்ப நாட்களா இந்த வொர்க் இந்த கட் வைத்து தேடினேன்.

அப்பாடா கிடைத்து விட்டது என்று தாயிடம் சந்தோஷமாக பகிர்ந்தாள். பிறகு பொட்டு, பேஸியல் கிரீம், லிப் லைனர் என்று தேர்ந்தெடுத்தார்கள். பரத்துக்கும் சட்டையை ''வெஸ்ட் சைஷல்'' எடுத்தார்கள். ''இனி குழந்தைகளுக்கு பார்க்க வேண்டியது தான் என்று வசுந்தரா சொல்ல,

''இந்த ஹேர் கிளப் டால் போடுங்க'' என்று மெம்பர்ஷிப் கார்டில் பாயிண்ட் போடச் சொல்லி கொடுத்து விட்டு, அம்மா நான் மூன்றாவது ப்ளோரில் ஒரு கடை பார்த்து வைச்சிருக்கேன். குழந்தைங்க டிரஸ் ரொம்ப நல்லா இருக்கு. அங்கேயே நாம் போயிடலாம்'' என்று வாங்கிய சாமான்களோடு கடையை விட்டு வெளியே வர, சஞ்சனாவின் கண்கள் ஏதோ காணக்கூடாததைக் கண்டு விட்டதைப்போல் சுருங்கி விரிந்தன.

காரணம்!

பிரேம்...!

அவன் தனியாக வந்திருந்தால், அவனை அக்கணம் கண்டதில் அவளுடைய மலர்ந்த கண்கள் அவனை முழுமையாக இமைக்கும் அடக்கிட மேலும் விரிந்திருக்கும். ஆனால் அவள் மலர் கண்கள் சுருங்கியது.

காரணம், நந்தா!

நந்தா பேசிய பேச்சில்..., ஜோக்கா?

அதில் பிரேம் தன்னை மறந்து பற்கள் பளிச்சிட கம்பீரமாக சப்தமாக சிரித்ததில், அதில் அவன் முகம் மாறிய அழகில், இன்னமுமே கோபம் வந்தது சஞ்சனாவிற்கு. அவளிடம் ஒரு சின்ன புன்னகைக்கு பஞ்சம். எப்போதும் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிப்பது மாதிரி கோபமுடன் கூடிய முகம் தான் சமீபத்தில் அவள் மனதில் பதிந்த அவன் முகம். அவன் மனதில் அவளைப் பற்றிய நினைவுகளின் எண்ணங்களின் லட்சணம் அது தான் போலும். சட்டென்று அதிர்ந்தாள் அவள்.

என்னவாயிற்று அவளுக்கு. யாருடன் அவன் பேசினால் என்ன? அப்படியே கொஞ்சிக் குலாவினாலும் தான் என்ன?

எதற்காக அவளுக்கு இந்த அலைப்புறுதல்? கடந்த காலத்தில் சின்ன வயதில் அவள் மனதில் ஏற்பட்ட நிகழ்ச்சியை வயதின் சலனமாக மறந்து விட்டாளே?

இப்போது அவனைப் பார்த்தால் வெறுப்பு தானே
வர வேண்டும்?

அவனுக்கு அவளைப் பார்த்தால் வெறுப்பு தானே வருகிறது. அது தான் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அவன் பேச்சில் நன்கு தெரிகிறதே.

அவள் மனதில் பலமான எண்ணப்போராட்டமே நடந்தது. தனக்குத் தானே எதையோ காரண காரியங்களோடு நியாயப்படுத்த அவன் முயற்

சித்தான்.

ஆனால் அவளின் ஆழ் மனதில் புதைந்து கிடந்த அவனின் ஞாபகங்கள், இன்னும் அவனிடம் அவள் தன்னையிழந்து நிற்பது எல்லாம் சின்ன சின்ன ஞாபகக் குமிழ்களாக அச்சமயம் எதிர்பாராமல், வெளிவந்து அவள் நெஞ்சை, உடம்பை என்று எல்லா பாகங்களிலும் வியாபித்தது.

அது தந்த அழுத்தத்தில் வியர்த்துப் போனாள். நெஞ்சம் படபட வென்று அடித்துக் கொண்டது. நிற்கக்கூட சக்தியிழந்து கால்கள் வலுவிழந்தது போல சட்டென்று அருகிலிருந்த தூண் மேல் சாய்ந்தாள்.

செத்தொழிந்து போனதாய் அவளே அவளை ஏமாற்றிக்கொண்ட உணர்வு. யாரையும் தன்னால் திருமணம் புரிந்து கொள்ள முடியவே முடியாது. காரணம், அந்த உணர்வுகள், அதை உருவாக்கியவனாலேயே அழிந்து விட்டன. இறந்து விட்டன என்று இறுகிக் கிடந்த மனது, அந்த கணம் சிலும்பியது.

அதுவும் பலமாக பிரேம் தன்னை மறந்து சிரித்த சிரிப்பிலும், அவன் நந்தாவை உரிமையுடன் பார்த்த பார்வையிலும், அவளுள் பிரேம் விஸ்வரூபம் எடுத்து நின்றான்.

அவளை அழிக்கவா, அந்த விஸ்வரூபம்!!

அதுவரை, ஷோ கேஸ் பொம்மையின் அலங்காரங்களை நோட்டம் விட்டுக் கொண்டிருந்த வசுந்தரா, பெண்ணின் பார்வையின் பாதையில் பயணித்தவர், அது பிரேமில் முடிய,

''ஏய் சஞ்சு, அவர் யார்? தெரிந்தவரா? இப்படியே பார்த்துக் கொண்டு நிற்கிறாய், போய் ஹலோ சொல்லி விட்டு வரலாமே''- என்ற தாயின் பேச்சில், தன்னை உணர்ந்தாள் சஞ்சனா. கலங்கிய கண்களை தாய் அறியாமல் லேசாக திருப்பி சரி படுத்தியவள், உடைந்த குரலை செறுமி முடிந்த வரை நிலைபடுத்தி,

''என்னோட பாஸ்ம்மா. ஏதோ ஃபர்சனல் விஷயமாக வந்திருக்கிறார் போல தெரியுது. டிஸ்டஃர்ப் பண்ண வேண்டாம்.-'' என்றபடி தாயின் கையை பிடித்தபடி அவன் இருந்த திசைக்கு எதிர்புறமாக நகர்ந்தாள்.

ஆனால் தாயின் கண்கள் மீண்டும் பிரேமிடம் திரும்பி மீள்வதைக் கண்டாள் சஞ்சனா.

''ரொம்ப சின்ன வயசு மாதிரி இருக்கு. இந்த வயசுலே பாஸ்ஸா? ரொம்ப ஹேண்ட்சம்மா இருக்கான் சஞ்சு. கூட இருக்கிறது அவனோட ஃவைப்...பா?''- என்று கேட்ட அம்மாவின் ஆர்வமான கேள்விக்கு,

எரிந்து விழுந்தாள் சஞ்சனா.

''எனக்கென்ன தெரியும். போய் கேட்டு விட்டு வேண்டுமானால் வரட்டுமா?'' வசுந்தராவிற்கு ஏதோ அதிசயம் போல கண்கள் விரிந்தது.

அப்படி என்ன கேட்டு விட்டாள் என்று சஞ்சனா இப்படி முகம் கடுகடுக்க பேசுகிறாள்? சாதாரணமாக இப்படி பேசும் பெண் என்றால், வார்த்தைகளையும், பேசப்பட்ட தொனியையும் மறந்து விடலாம். ஆனால் சஞ்சனா, சிரிக்க சிரிக்க பேசும் பெண். அந்த சுபாவமே மாறுகிறதென்றால், மகளை நோட்டம் விட்டார் அவர்.

ஹாப்பிங் என்று 'ஸ்பென்ஸ்'ரில் இதுவரை கூட இருந்த மகளின்



முகத்தில், நிம்மதி, சந்தோஷம், அமைதி எல்லாம் துணி கொண்டு துடைத்தது போல் மிஸ்ஸிங். அதற்கு பதில், முகம் வாடி கண்கள் கலங்கி, நெற்றி புருவங்கள் சுருங்கி!.... சம்திங் இஸ் ராங்.

எல்லாம் அந்த பாஸ்ஸை சந்தித்த பிறகு தான். தாய் மனம் கணக்கிட்டது. சதா கத்தி, கோபப்பட்டு, வேலையில் குற்றம் கண்டுபிடித்து, மகளை கவலைப்படுத்தும், சிடுமூஞ்சி பாஸாக இருப்பானோ?

பெண்கள் விஷயத்தில் மேலதிகாரியாக ஏதாவது இம்சை கொடுப்பானோ? இவளை யார் இப்படி கஷ்டப்பட்டு வேலைக்கு போகச் சொன்னது?

தலையெழுத்தா?

சந்தோஷமாக வீட்டில் ஏசியில் இருந்து கொண்டு, இவள் காலால் இட்ட வேலையை செய்ய ஆட்களா இல்லை?

இவளாகவே எல்லாவற்றையும் இழுத்துப் போட்டுக்கொண்டு, யார் கஷ்டப்பட சொன்னார்கள்? மகளின் சந்தோஷம் தொலைந்ததற்கு தாயின் மனம் இப்படியாக நினைத்து வேதனைப்பட்டது.

மகளின் சந்தோஷசத்திற்காக உயிரையே கொடுக்கும் தாய் மனம் சஞ்சனாவின் முகவாட்டத்தில் சிறிது பாதிப்படைந்தது உண்மை.

அதன் பிறகு சஞ்சனாவிற்கு ஒன்றிலும் வியப்பு இல்லாமல் போனது. சித்தி பிள்ளைகளுக்கு உடுப்பு எடுக்க போன கடையிலும், வசுந்தரா எதை காட்டினாலும், ஓ நல்லாயிருக்கும்மா, எடுக்கலாம்மா என்ற ஸ்டீரியோடைப் பதில்களையே அவளால் தர முடிந்தது.

வசுந்தராவும் ஏதோ புரிந்தவராக அதன் பிறகு மகளை கலந்துக் கொள்ளாமலே அவராக உடையை தேர்ந்தெடுத்தார்.

மேட்சிங்காக சாக்ஸ், ஷூ, மிக்கிமவுஸ் தொப்பி என்று கிடைக்க அதையும் 'பேக்' செய்து எடுத்தார்.

''இனி நகைக்கடைக்கு போகணும் சஞ்சு. உம்மிடியாஸ் போகலாமா? நல்ல டிசைனாக பார்த்து வாங்கலாம்.''

''அம்மா எனக்கு தலை வலிக்கிறது. குட்டீஸ்க்கு செயின் வாங்கறதுக்கு நாளைக்கு போகலாம்? இப்ப வீட்டுக்குப் போகலாம்மா?''- என்று தாயிடம் கேட்டுக் கொள்ள,

''அப்ப கொஞ்சம் இரு, நீ இந்த சேலை கடையில் பார்த்துட்டு இரு. நான் ஃபுட் கோர்ட்டில் சிக்கன் தந்தூரியும், ஃப்ரையும் வாங்கிட்டு வந்துடறேன்'. வீட்டில் நைட்டுக்கு சைட்டிஷ் ஒன்றும் பண்ணவில்லை. பரத்






எதுவுமில்லாவிட்டால் சண்டைக்கு வருவான்''- என்றபடி புட் கோர்ட்டில் வேகமாக நுழைந்து சிக்கனுடன், நூடுல்ஸ் மூன்று பாக்கெட் ஆர்டர் செய்து வாங்கிக் கொண்டார்.

ஃபுட் கோர்ட்டை விட்டு வெளியே வந்த வசுந்தரா எதிர்பாராமல் மீண்டும் பிரேம்மை பார்த்தார். அவர் பார்க்கையில் தானா கூட இருந்த பெண் அவன் கன்னத்தில் எக்கி முத்தமிட வேண்டும். அவனும் அவளுக்கு வாகாக தலையை சரிக்க வேண்டும்.

பிறர் கவனம் ஈர்க்காமல் நொடியில் நடந்த நிகழ்ச்சி தான். ஆனாலும் வசுந்தரா கண்களில் இருந்து தப்பவில்லை. பார்த்தவளுக்கு நெஞ்சு 'திக்'கென்றது.

பொது இடம் என்றும் பார்க்காமல் அவனின் வசீகரத்தில் மயங்கும் பெண்கள்! சஞ்சனா அவன் பால் ஈர்க்கப்பட்டு விட்டாளா? என்ற பயங்கர சந்தேகம் ஆட்கொண்டது.

வீடு வந்த பின்பும், எல்லோரும் சாப்பிட்டு அவரவர் அறைக்குள் தஞ்சம் புகுந்த பின்பு, சஞ்சனா மட்டும் ஹாலில் எதையோ ஒழுங்குபடுத்திக் கொண்டிருப்பதைக் கண்டு, மெல்ல அவளிடம் பேச்சுக்கொடுத்தார்.

''உன் பாஸ் பயங்கர 'ப்ளே பாய்' போலிருக்கு''. ஆபீஸ்லே எப்படி? சஞ்சு.....'' மீன் தொட்டியில் மீன்களுக்கு உணவை எடுத்துப் போட்டபடி, ஏதோ சுவாரசியமாக கேட்பது போல்,

''ஏம்மா, திடீரென்று இதென்ன பேச்சு'' என்றாள் சஞ்சனா.

''இல்ல சஞ்சு, இன்னைக்கு புட்கோர்ட்டில் உங்க பாஸ்ஸை பார்த்தேன். இளவட்ட பெண்களின் கண்கள் அவன் மேல் மீண்டு பாயறதை பார்த்தேன். அது போதா குறைக்கு, ஒருத்தி அவன் கன்னத்தில் பப்ளிக் பிலேஸ்லே கிஸ் பண்ணறா. இவனும் சிரிச்சிக்கிட்டு கன்னத்தை காட்டறான். இன்னொரு பெண் ஓடி வந்து இவன் மேல் விழுகிறாள். ஆபீஸ்லே ஆள் எப்படின்னு கேட்கலாம்ன்னு தான்... என்று அவர் பேச....

சஞ்சனா இதயத்தை யாரோ கை கொண்டு பிசைந்தது போல் துடித்துப் போனாள். அவளுடைய இதயத்தில் இடம் பிடித்த பிரேமின் நெஞ்சத்தில் அவளுக்கென்று இடம் காலியில்லை என்பது அவளுக்கு புரிந்து தான் இருந்தது. இருந்தாலும் தாயின் வாய் வழியே அவனைப்பற்றி இந்த மாதிரி செய்தி வந்ததும் வாடிப்போனாள்.

என்னிடம் என்ன குறை கண்டு விட்டான். அவளுக்காக ஆவலாக ஒரு பார்வை கூட அவனிடம் வழியில்லை.

ஏன்?

அவள் என்ன அவலட்சணமா?

'சக்'- என்று தன்னையே ஒரு குலுக்கு குலுக்கினாள். நினைவுகள் போக்கை பார்த்து அவளுக்கே அவமானமாக இருந்தது. இருந்திருந்து இவன் மேலா இவளுக்கு ஈர்ப்பு வர வேண்டும். அதுவும் இத்தனை வருடங்கள் கழித்தும் கொஞ்சம் கூட புதுக்கருக்கு மாறாமல்,

''ஆமாம் சஞ்சு, கேட்கணும்னு இருந்தேன், உன் வேலை அவனின் நேரடி தொடர்பின் கீழ் தான் இருக்கா?''

''ம்ம்...''- என்று கையில் இருந்த மீன் உணவு டப்பாவை ஷெல்ப்



பில் வைத்தாள்.

''என்னடா... இந்த மாதிரி இவன் கிட்டே வேலைக்கு கண்டிப்பாக நீ போகணுமா?'' மகள் அமைதியை கடைபிடிக்கவும், ''என்னால் நிம்மதியா இருக்க முடியவில்லை சஞ்சு. கொஞ்சம் ஜாக்கிரதையா இரு. ஆள் வேற வாட்டசாட்டமா ஹண்ட்சம்மா இருக்கான். அம்மா சொல்றது புரியுதில்லை. கொஞ்சம் தூரம் வைச்சுக்கோ.

வேலை வேலையோடு போகட்டும். மனசுலே நெருங்க விடாதே. அப்புறம் கஷ்டப்படுவே... புரியுதாடா?''- என்று மகளின் கன்னத்தை தடவி நெற்றியில் முத்தமிட்டார்.

தாயின் எச்சரிப்பு புரிந்து சஞ்சனாவின் கண்கள் கரித்தது. காலம் கடந்த எச்சரிப்பு.

இதைப்போல ஆறு வருடம் முன்னால் அம்மா எச்சரித்திருந்தால், இந்த அளவு பாதிப்பு அவளுள் நேர்ந்திருக்குமா? சதா சிறைப்பட்டு போனது போல இருக்கும் அவள், சுதந்திர பறவையாக இருந்திருப்பாளே. இந்த காதல் 'அது படுத்தும் பாட்டை உணராமல் நிம்மதியாக இருந்திருப்பாளே.

மகளிடம் ஏதோ பேசி விட்டாலும், வசுந்தராவின் மனதில் புதிதாக சந்தேகங்கள் முளைக்கத் தொடங்கின. ஒன்றுமே பேசாமல் நிற்கிறாளே.

இப்படி ஏதாவது பேசினால் ''என்னிடமா? அந்த மன்மதனே வந்து நின்றாலும் உங்கள் பெண்ணை அசைக்க முடியாது என்று தாட் பூட் என்று சொல்வாள் என்று கொஞ்சம் எதிர்பார்த்தார்.

ஆனால் மகளிடம் ஒரு அசைவையும் காணோம். மீன் தொட்டி மீன்கள் விளையாடும் அழகை பார்ப்பதாக பாவனை வேறு.

தாயறியாத சூழலா?

அவரின் நெஞ்சில் பாறாங்கல் ஏறியது போல் ஒரு உணர்ச்சி ஆக்ரமித்தது.

18

'டிரிப்லெட்ஸ்'' முதல் பிறந்த நாள் விழாவை நீரஜ், அருணா இருவரும் பெரிய விழாவாக எடுத்துக் கொண்டாடினார்கள்.

ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் ''ஹால்'' எடுத்து விழா வைத்திருந்தார்கள். ''இது தான் அக்கா வசதி. காசை கொடுத்து விட்டோமானால், சாப்பாடு, டெக்கரேஷன், தீம் எல்லாம் அவர்களே பிரமாதப்படுத்தி விடுவார்கள்- என்று வசுந்திராவிடம் சொல்லிக் கொண்டிருந்தார் அருணா.

எங்கு பார்த்தாலும் ஒரே 'பிங்க்' நிறம். வந்திருந்தவர்கள் எல்லோரும் விழாவிற்கு மதிப்பளித்து 'பிங்க் நிற உடைகளில் வந்திருந்தது சிறப்பாக இருந்தது.

அதுவும் வந்திருந்த அனைத்து பிள்ளைகளுக்கும் 'ஹவாய்'' டிரஸ், செயற்கை இழைகளால் ஆன வண்ண வண்ணப்பூக்கள் கட்டி தொங்கவிட்ட ஸ்கர்ட், கழுத்தில் வண்ண வண்ணப்பூக்கள் கட்டிய மாலை, பூக்

கள் ஒட்டிய ஓலை தொப்பி என கொடுத்து அமர்க்களப்படுத்தியிருந்தார் கள். சின்னஞ்சிறுவர்களுக்கு ஒரே குதூகலம் தான். ரொம்பவே கலர்புல் ஆக பூக்குவியலாக சந்தோஷமாக ஓடியாடி கொண்டிருந்தார்கள்.

பலூன் பேர்ஸ்டிங், மியூசிக்கல் சேர் என்று சின்னப்பிள்ளைகளுக்கு போட்டி வைத்து, பரிசு வழங்கி கொண்டிருந்த சஞ்சனாவிற்கும், பரத் திற்கும் நேரம் போனதே தெரியவில்லை. இடையிடையே தன் அழகிய அக்கா மகளை சஞ்சனாவை, அருணா புதிதாக வந் வர்களுக்கு அறிமு கப்படுத்த மறக்கவில்லை.

அந்த குதூகலமான சந்தோஷமான சூழ்நிலையை குறைப்பதற்கே வந்து சேர்ந்தவனாக வந்திறங்கினான் பிரேம். சஞ்சனாவிடம் பேசிக் கொண்டிருந்த அருணா. ''அட பிரேம் நிஜமாகவே வந்துட்டான். அவன் வருவானா? மாட்டானா என்று எனக்கும் உன் சித்தப்பாவிற்கும் பட்டி மன்றமே நடந்தது.

உன் சித்தப்பாவிற்கு அவன் வர வேண்டும், கொஞ்சம் உறவை புதுப் பித்துக் கொள்ள வேண்டும் என்று ஆசை. வந்து விட்டானே.. அவன் இருக்கும் நிலைமைக்கு இங்கே எங்கே வரப்போகிறான் என்று மனசில் இருந்தாலும், கூப்பிட்டு தான் பாருங்களேன் என்று நான் சொன்னேன். வந்து விட்டானே என்று பிரமிப்புடன் முகமெல்லாம் மலர அருணா வேகமாக அவனை வரவேற்க ஆவலாக ஓடினாள்.

சஞ்சனாவும் கவனித்தாள். லைட் பிங்க் நிறத்தில் டீ-சர்ட்டும் நீல நிற ஜீன்ஸுமாக ஜம் என்று வந்து கொண்டிருந்தவனை கண்கொட் டாமல் பார்த்தாள்.


எந்தவித பதட்டமோ, ஆக்கிரமிப்போ இல்லாமல், மலர்ந்த முகத்து டன் ரொம்ப சகஜமாக, அலட்டலில்லாமல் சிரித்த முகத்துடன் நீரஜிடம் கை கொடுத்தபடி நின்றிருந்தான். தன் தந்தையும் அவனிடம் அறிமுகப் படுத்தப்படுவது சஞ்சனாவின் விழிகளில் இருந்து தப்பவில்லை.

கண்கள் அவனையே தொடர்ந்தது. வேலையாட்களின் கைகளில் பலூன் வைத்தபடி இருந்த குழந்தைகள் கைகளில் சின்ன நகை டப்பா ஏதோ கொடுத்தான். வாழ்த்துக்கள் என்று சொல்லி அவனுடைய செக ரிட்டரி கையில் இருந்து பூங்கொத்தை வாங்கி சித்தி- சித்தப்பா கைக ளில் கொடுத்தான். பின் அவன் கண்கள் சுழன்ற விதத்தில் சஞ்சனா அனிச்சை செயலாக பரத்தின் முதுகில் முகத்தை மறைத்தாள்.

மனம் என்பது பல சமயங்களில் மனிதனின் அறிவுக் கட்டுப்பாட்







டையும் மீறி விடக் கூடிய துடுக்குத்தனம் உடையது. அதே போல் சஞ்ச னாவின் அறிவு, சமீபகாலமாக அவனுடைய சுடு சொற்களை நினை வூட்டி, அவனிடமிருந்து தூர நில் என்று எடுத்து சொல்ல சொல்ல, காதல் கொண்ட மனம் அதை காதில் வாங்கிக் கொள்ளும் நிலையில் இல்லை.

அருணா, சஞ்சு அவர் உன்னுடைய பாஸ் தானே. கொஞ்சம் வந்து கம்பெனி கொடும்மா வா வா'' என்று பிரேம் இருந்த புறமாக அவளை அழைத்துச் செல்ல, சஞ்சனா ''நான்... சித்தி அப்புறம்...'' என்று மறுத்து கைகளை சுகுணாவின் பிடியில் இருந்து நெஞ்சு படபடக்க உருவினாள். அவனிடம் பேசி, உள்ள சந்தோஷமான சூழ்நிலையை கெடுத்துக் கொள்ள மனமில்லை அவளுக்கு. ஆனால் அதற்குள் அவளை பார்த்து விட்டான் அவன்.

வரவேற்பாக அவன் அவளை நோக்கி உதடு பிரித்து சிரித்த புன்ன கையில் 'அவள் நெஞ்சில் ஏதோ செய்தது' கடவுளே! இது கோபியரை மயக்கும் கண்ணனின் மாயச் சிரிப்பல்லவா? இது... அவளிடம் ஏன்?

கால்கள் நகராமல் சண்டித்தனம் செய்தது. ஆனால் அவன் எழுந்து வந்தான்.

''ஹலோ'' சொன்னான்.

ஏதோ பேசினான். சஞ்சனாவின் காதுகளில் ஒன்றுமே எட்டவில்லை. அவளிடம் இவ்வளவு இயல்பாக பேசுவது அதுவே முதல் தடவை.

அவள் கண்களின் முன்பு ''சொடக்' போட்டான் பிரேம். தன்னையு ணர்ந்தாள் சஞ்சனா.

''உனக்கொரு தம்பி உண்டென்று ஞாபகம்? எங்கே அவன்? அறிமு கப்படுத்த மாட்டாயா?'' என்றான் மீண்டும் அதே புன்னகை.

சஞ்சனாவிற்கு பேச முடியாமல் தொண்டையடைத்தது. நல்ல வேளையாக 'பரத்'தே வந்தான். அறிமுகப்படுத்திக் கொண்டான். கலக லப்பாக பேசினான். தம்பியையும் மிகப்பொருந்தி பேசும் பிரேமையும் கண்கள் விரிய பார்த்தாள் சஞ்சனா.

''கொஞ்சம் கூடுதல் நேரம் வொர்க்கிங் டைம் கொடுங்கள் சார் சஞ்ச னாவுக்கு. முடிந்தால் ஆபீஸிலேயே தங்கி டே-அண்ட்-நைட் வேலை செய் யட்டும்.''- என்று பரத் கண்களில் மின்னல் வெட்ட துடுக்காக சொல்ல,

புருவத்தை உயர்த்தினான் பிரேம். அதே கேள்வியாக கொண்டு மீண் டும் தொடங்கினான் பரத்.

''அவள் இருந்தால் யாரும் என்னை கண்டு கொள்வதேயில்லை. அம் மாவும், அப்பாவும் அவளையே கொஞ்சிக்கொண்டு, வெல்லம், செல் லம், மாணிக்கம்... ஒன்றையும் விட்டு வைக்க மாட்டார்கள். அத னால்...''

சஞ்சனா முகம் சிவந்தது. இவனை விட்டால் இன்னும் நிறைய பேசு வானே.

''பரத் அங்கே பார். உன்னோட கிரிக்கெட் கோச்...''- என்று சஞ்சனா சொன்னது தான் தாமதம்.

''நைஸ் மீட்டிங் யூ''- என்றபடி பறந்து விட்டான் அவன்.

பரத் சென்றவுடன் இருவரும் தனித்து விடப்பட, சஞ்சனா அவனி டம் பேச வார்த்தைகளை தேடினாள். அவளுடைய பிரேம், பேசுவதற்கு



ஓராயிரம் விஷயங்கள் இருந்தன. ஆனால் அவனிடம் பிரதிபலிப்பு இல் லையே. ஏக்கமாக உணர்ந்தாள் சஞ்சனா. ஆனால் தன்னை சமாளித்துக் கொண்டு,

''ஆனந்த் எப்படியிருக்கிறான்? பார்த்து நாட்கள் ஆகி விட்டது''- என்று சாதாரணமாக பேச்சை வளர்த்துவதற்காக சஞ்சனா கேட்டதற்கு முற்றிலுமாக மாறிப்போனான்.

''ஏன் அவனை பார்க்க முடியாமல், பாலும், பழமும் இறங்கவில் லையோ?' வார்த்தைகள் அவனையும் மீறி உஷ்ணமாக இறங்கின.

மாயக்கண்ணன், நரசிம்மவதாரம் எடுத்தது போல நொடியில் மாறிப் போனான். ஏன் இந்த மாற்றம் சஞ்சனாவால் புரிந்து கொள்ள முடிய வில்லை.

அவளுக்கும் அவன் பேச்சின் தோரணையில் கோபம் வந்தது. பதி லுக்கு பதில் கொடுப்பதில், ''ஏன் பார்க்க முடியாமல்? நான் அழைத்தால் நொடியில் வந்து விடப் போகிறான்.''- என்றாள்.

''வருவான், ஓடித்தான் வருவான். அப்படி வந்து விடக் கூடாதென்று தானே, கடல் கடந்து அனுப்பி வைத்திருக்கிறேன்''- உதடு ஏளனமாக வளைய அவன் சொல்ல, சஞ்சனாவிற்கு அதன் அர்த்தம் புரியவில்லை. உதட்டைக் கடித்தாள் அவள்.

அவன் பார்வை அவள் உதட்டில் சில நொடிகள் நிலைத்தது. தன்னை அடக்கியபடி,

''சஞ்சு, உன்னிடம்... என்று அவன் தீவிரமாக பேச எதையோ தொடங்க, நல்ல வேளையாக மீண்டும் பரத் வந்தான். பிரேமிடம் லொட லொடத்தபடி பேசினான்.

பிரேமின் புருவம் நெரிந்திருந்தது. சாப்பாடு பெயருக்கு ஏதோ கொரித்தான். அவன் கிளம்புகையில், ''அவரோடு கார் வரைக்கும் போய் வழியனுப்பி விட்டு வா சஞ்சு''- என்று அருணா அவள் காதில் முணுமு ணுத்து விட்டு சென்றார்.

வசுந்தராவும், அருணாவும், பிரேம் சஞ்சனாவின் ஜோடி பொருத்தத் தைப் பார்த்து தங்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொண்டதை சஞ் சனா அறியவில்லை.

ஏதோ சொல்ல வந்தானே.... என்னவாயிருக்கும்? இன்னும் நோக டிக்க ஏதாவது சொல்லியிருப்பான். நல்ல வேளை பரத் காப்பாற்றி விட் டான்.

அருணாவின் பேச்சை மீற முடியாமல், அவன் கிளம்புகையில் கூட நடந்தாள். விழா ஹாலை விட்டு வெளியே வந்தவர்கள், ஹோட்டலின் ஆள் அரவமற்ற வளைந்து நெளிந்து சென்ற நீண்ட காரிடரில் நடந்தார் கள். அவனுடன் பேச பிடிக்காமல், அலங்கார மஞ்சள் விளக்கு வெளிச் சத்தில் சுவற்றில் மாட்டியிருந்த ஓவியங்களை பார்த்தபடி நடந்தாள் சஞ் சனா.

ஆனால் முற்றிலும் எதிர்பாராத விதமாக சஞ்சனாவின் ஹை-ஹீல்ஸ் செருப்பு ஒரு திருப்பத்தில் சரிய, தடுமாறி கீழே விழப்போன சஞ்சனா, உதவிக்கு நீண்ட அவனின் புஜத்தை தாங்கி பிடித்து சமாளித்து நிமிர்ந் தாள்.

அந்த கண நேர மெய் தீண்டல்களில் சஞ்சனா தடுமாறிப்போனாள். அவனும் தான்.

எதிர்பாராத விதமாக சட்டென்று அணைத்து முத்தமிட்டான் பிரேம். முதலில் திமிறியவள் அவனின் அழுத்தமான அணைப்பில் செயலிழந்துப் போனாள்.

முதலில் சுய நினைவு வந்து விலகியவன் பிரேம். அவளை விலக்கி கைப்பிடியில் அவளை நிறுத்தியவன், அவள் முகத்தை ஆராய்ந்தான். அவன் பார்வையில் சஞ்சனாவின் முகம், காது மடல்கள் வரை சிவந்தது. அவன் கேட்டான். அவளின் இதயம் சுக்கு நூறாக உடைய உடைய கேட்டான்:

''எல்லோருடனும் இப்படித்தான் பழகுவாயா? சஞ்சனா?''

பெண்ணென்று பூமிதனில் பிறந்து விட்டால் மிகப்பிழையிருக்குதடி தங்கமே தங்கம்'- என்று பாரதி சொன்னது தான் எத்தனை உண்மை. ஏன் இவள் இந்த உலகத்தில் பெண்ணாக பிறக்க வேண்டும். அதுவும் கிட்டா பழமான பிரேமை ஏன் காதலிக்க வேண்டும்? மருகி மருகி ஏன் அழ வேண்டும்?

''உன்னை பற்றி இவ்வளவு தெரிந்த பின்பும்; என் தம்பியை நான் உன்னிடம் இருந்து காப்பாற்றிக் கொள்ளவில்லை என்றால், நான் மடையன்''- என்று அவன் முணுமுணுப்பாய் முணுமுணுத்தது அவள் காதில் விழத்தான் செய்தது.

ஆனால் ஏன்?

19

சஞ்சனாவை பொறுத்தவரையில் நாட்கள் எப்படியோ நகர்ந்தன. சில நேரங்களில் சகஜமாக பேசும் பிரேம் பல நேரங்களில் தீயை உமிழ்ந்தான்.

அவன் மனதில் என்ன எண்ணங்கள் ஓடுகிறது என்பது மட்டும் அவளால் படிக்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

அன்று வீட்டில் தன்னுடைய புத்தக அலமாரியை அடுக்கி கொண்டிருக்கையில் ஆனந்த் செல்போன் நம்பரும் கிடைத்தது. அவ்வளவு பதற்ற



''பயங்கரமான ஆளுடா அந்த அரசியல்வாதி...''

''எப்படிச் சொல்றே?''

''பொதுக் கூட்டங்களில் அவர் மேல் வீசிய செருப்புக்களையெல்லாம் சேகரித்து, ஏலம் விட்டுப் பணம் பண்ணிட்டார்!''

எம்.அசோக்ராஜா,
திருச்சி.



மாக கல்யாணத்தைப் பற்றி சஞ்சனாவிடம் பேசி விட்டு, சொல்லாமல், கொள்ளாமல், ஏன் மறைத்தான் என்று சஞ்சனாவின் உள்ளத்தில் சதா அந்த கேள்வி நின்றது.

அந்த கேள்வியோடு மற்றொரு பெரிய கேள்வியும் விஸ்வரூபமெடுத்து நின்றது. ஏன் பிரேம் அப்படி சொன்னான்? என்னிடம் இருந்து ஆனந்தை என்ன விதத்தில் காப்பாற்றப் போகிறான்? ஏன்? எதற்காக? அந்த பதில் தெரியாமல் தானே, நிம்மதியற்று நாட்கள் கழிந்தது.

அவன் வெளிநாடு போய் விட்டான் என்பது மாத்திரம் பிரேமின் பேச்சில் இருந்து புரிந்தது. ஆனாலும், என்ன விவரம் என்று கேட்க சஞ்சனாவையும் மீறி ஆவல் பிறக்க, ஆனந்தின் செல்நம்பரை மெல்ல டெலிபோனில் அழுத்தினாள் சஞ்சனா.

செல்போனில் மணி அடிக்க, உயிர் கொடுத்தான் ஆனந்த்.

''ஆனந்த், சஞ்சு ஹியர். என்னடா என்ன ஆச்சு? சொல்லாமல் கொள்ளாமல் வெளிநாடு ஓடிவிட்டாய்? கல்யாண மேட்டர் என்னவாயிற்று?

அந்த பக்கத்தில் மவுனம் சில நொடிகள் நிலவியது. பிறகு தொண்டையை கனைத்தபடி அவன் பேசிய பேச்சில் நிறைய தயக்கம் இருந்தது.

''என்னோட கல்யாண பேச்சு, தற்சமயம் நின்று விட்டது சஞ்சு''

''பின்னே, அதை சந்தோஷமாகத் தான் சொல்லேன்.''

''அவ்வளவு ஈஸியா என்னால் கல்யாண பேச்சை நிறுத்த முடியவில்லை. உனக்கு விளக்கமாக சொல்ல வேண்டும். அப்போது தான் என் நிலை உனக்கு புரியும்''

அவன் குரலில் இருந்த சங்கடம், சஞ்சனாவால் இனம் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஏதோ வழக்கம் போல, அண்ணனிடம் அதைச் சொல்ல பயம், இதை சொல்ல பயம் என்று ஏதேனும் சொல்வான் என்று சஞ்சனா நினைத்தாள்.

ஆனால் பெரிய இடி போன்ற செய்தியை ஆனந்த் அவளுக்காக வைத்திருந்தான்.

கலகலப்பாக சஞ்சு பேசிய பேச்சுக்கெல்லாம் 'ம்ம்' கொட்டினான். ஏதோ பலத்த சிந்தனையில் அவன் இருப்பது சஞ்சனாவிற்கு புரிந்தது.

''ஏதோ என்னிடம் விளக்கமாக பேசணும் என்று சொல்லி விட்டு, நீ பாட்டுக்கு யோசிச்சிட்டிருந்தா எப்படி? சொல்லு ஆனந்த்'' என்று சஞ்சனா கேட்க

சொன்னான் ஆனந்த்.

கதையாக

அவன் தைரியமாக பெண் வீட்டிற்கு சென்றது பற்றி. மாப்பிள்ளையே வீடு தேடி வந்து விட்டான் என்று எல்லோரும் பரபரப்பானதை பற்றி. இவன் எனக்கு கல்யாணத்தில் இப்போது இண்ட்ரஸ்ட் இல்லை என்று சொன்னதை பற்றி ஏன் என்று விடாமல் கேட்பதில் எனக்கு லவ்வர் இருக்கிறாள். நான் கல்யாணம் செய்தால் அவளை தான் செய்வேன். வீட்டில் இவ்வளவு சீக்கிரம் என்னை கேட்காமல் திருமணம் நிச்சயிப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. இப்போது வீட்டில் நான் சொன்னால் பிரச்சனையாகி விடும். நீங்களாகவே ஏதாவது ப்ளீஸ் நான் சொன்னதாய் எது



வும் சொல்ல வேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டதைப் பற்றி, அவர்கள் சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் பிரம்மித்து நின்றதைப்பற்றி, அப்புறம் அந்த கல்யாண பெண், பரவாயில்லை, உங்கள் நேர்மை எனக்கு பிடிக்கிறது. வீட்டிற்கு பயந்து வேறு ஒருத்தியை மனதில் வைத்து என்னை திருமணம் செய்யாமல் தைரியமாக உண்மை சொன்னதற்கு தாங்க்ஸ் என்று சொன்னதைப் பற்றி

அது தான் நீ நினைத்தது போல் எல்லாம் முடிந்து விட்டதே.

இனி நீ ஜாலியாக என் கிட்டேயே சொல்லி விட்டே அமெரிக்கா போக வேண்டியது தானே''

நானும் நிம்மதியா இருந்திருப்பேனே சஞ்சனா கேட்க.

மீண்டும் உதட்டை கடித்தான் அவன்.

நீ என்னை மன்னிப்பாயா? உன்னையும் நான் இதில் சம்பந்தப்படுத்தி விட்டேன்''

''என்னையா?'' என்று சஞ்சு கேட்ட போதும், அவள், அவனுடைய பேச்சின் தீவிரத்தை உணரவேயில்லை.

''ம்ம்.. பிரச்சனை அங்கேயே நின்றிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அந்த பெண் அப்பா, நேரே வீட்டிற்கு வந்து அப்பா, அண்ணாவிடம் விஷயத்தை போட்டு உடைத்து விட்டார். நான் இன்னொரு பெண்ணை காதலிப்பதை உள்பட. கூடவே 'அட்வைஸ்' அவனுக்கு பிடித்த பெண்ணையே கல்யாணம் பண்ணி வையுங்கள். உங்களிடம் ரொம்ப பயப்படறார் என்று எனக்கு உதவி செய்வது போல நன்றாக மாட்டி விட்டுட்டார்.

சஞ்சனாவிற்கு இதயம் படபடக்கத் தொடங்கியது.

''அண்ணனுக்கு கோபம் வரும் தான். ஆனால் இதுவரை இப்படி ஒரு கோபத்தை நான் பார்த்ததே இல்லை சஞ்சு. காதலிப்பது என்ன குற்றமா? அதுவும் இப்படி பொய் சொல்லி தேவையில்லாமல் மாட்டிக் கொண்டேனே'',

''ஸாரி சஞ்சு, அண்ணன் ''யார்?'' என்று இடி முழக்கம்போல முகம் இறுக கோபமாக கேட்ட கேள்வியில் சர்வமும் மறந்து, உன்னை என் காதலி என்று சொல்லி விட்டேன் சஞ்சு''

மயங்கி விழாத குறை தான் சஞ்சனாவிற்கு ரோலர் கோஸ்டரில் சுத்துவது போல அவள் முன்பு இருந்தது எல்லாம் ஜெட் வேகத்தில் சுற்றியது.

முட்டாள், முட்டாள் என்று ஆனந்தை திட்டுவதற்கு நெஞ்சிலிருந்து வார்த்தைகள் கிளம்ப, ஆனால் உதடு திறந்து வார்த்தைகள் வர மறுத்தன. என்ன காரியம் செய்து விட்டான்? இதனால் அவளுக்கு நேரப்போகும் அவமானம் பற்றி தெரியாத சின்ன குழந்தையா?

படித்து படித்து சொன்னாளே, எக்காரணம் கொண்டும், அவள் பெயரை இதில் இழுத்து விடக் கூடாதென்று, அடி முட்டாள், கோழை.இனி இவனை என்ன திட்டி என்ன பிரயோஜனம்.

பிரேம்?

கடவுளே! என்ன நினைத்திருப்பான்?

ஏற்கனவே அவளைப் பற்றி மிகவும் தாழ்வான அபிப்பிராயம். ஆண்களுக்காக அலையும் பெண் என்று சொல்லாமல் சொல்லியவன்.



ஐய்யோ... என்று நெஞ்சம் அரற்றியது. அவளின் பதினாறு வயது மயக்கத்தையும், அதனால் அவளுக்கு ஏற்பட்ட அவமானத்தையும் ஆனந்த் அறிந்திருந்தால் இந்த நிகழ்வு தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

அவளுக்கு மட்டும் எல்லாம் தப்புத்தப்புமாக ஏன் நடக்கிறது. அதனால் தான் பிரேம் அவளை குதறுகிறான். அவன் அப்போது பேசிய பேச்சுக்கெல்லாம் தெளிவாக புரியாத அர்த்தம். இப்போது தெள்ளத்தெளிவானது.

''படித்து முடித்து விட்டு வந்து திருமணம் செய்துக்கொள்கிறேன்'' என்று நான் சொன்னது தான் கடைசியில் நடந்தது சஞ்சனா என்றான் அவன்.

''உன்னிடம் கூட விளக்கமாக எதுவும் சொல்ல முடியாமல், அடுத்த ப்ளைட்டிலேயே காதலையெல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு படிச்சு முடி என்று என்னை 'பேக்' பண்ணி அனுப்பி விட்டான். இனி இரண்டு வருடம் கழித்து தான் வருவேன். பெரிய மியூசிக் டைரக்டராக அசத்துவேன். அவளுக்கு ஏற்படுத்திய பாதிப்பின் அளவு தெரியாமல், அவனுடைய வருங்காலத்தைப் பற்றி பேசிய ஆனந்தை இரண்டு அடி போட்டால் தான் என்ன என்று அவள் நெஞ்சு பதைபதைத்துப்போனது.

''இதை எப்படி உன்னிடம் சொல்வது என்று பயந்து தான், நான் உன்னிடம் சொல்லாமலே நான் அமெரிக்கா வந்தேன் சஞ்சு''

ஆக மனதில் இருந்த எல்லா விடுகதைக்கும் அர்த்தம் புரிந்து விட்டது. டிரிப்லெட்ஸ் பிறந்த நாள் அன்று அவளை சோதித்து பார்த்திருக்கிறான். தம்பியின் காதலியின் தரத்தை சோதித்துப் பார்த்திருக்கிறான். ஏற்கனவே அவனுடைய தகுதி தட்டில் அவள் தட்டு தாழ்த்திருக்க, அன்றும் தான் அவனுடன் இழைந்தாளே... கடவுளே எல்லாம் இந்த ஆனந்த்... பிரேம் என்ன நினைத்திருப்பான்? மகா மட்டமான பெண் என்று முத்திரையே குத்தியிருப்பான். அது தான் அந்த குதறு குதறுகிறான்.

பிரேமிடம் எப்படி புரிய'வைப்பது?

''உன் பெயரை நான் எடுத்தது தப்பு தான். ஆனால் அந்த சூழ்நிலையில் நான் சொன்ன பொய்யை கண்டுபிடித்து விடுவார்களோ என்ற பயத்தில், என்னை காப்பாற்றிக் கொள்ள உன்னை மாட்டிக் கொடுத்து விட்டேன். கூடிய சீக்கிரம் அண்ணனிடம் கண்டிப்பாக நான் தெளிவுப்படுத்தி விடுவேன். இதை பற்றி இனி மறந்து விடு'' என்று அவன் சமாதானமாக பேச,

அவன் சொன்ன பொய்யின் விபரீதம் புரியாமல் பச்சை குழந்தையாய் பேசும் ஆனந்தை நினைத்து கண்களில் நீர் மடை திறந்த வெள்ளமாய் பாய்ந்தது.

யாரை நோவது,

அவள் விதி இப்படியிருக்க ஆனந்தை குறை கூறி என்ன பயன்?

பிரேமிடம் ஏதேனும் விளக்கம் கூறினால் எடுபடுமா? என்று யோசித்து கை விட்டாள். அடிப்படை நம்பிக்கையே அவளிடம் இல்லாத போது அவள் என்னவென்று சொல்வது.

அவள் உண்டு, அவள் வேலை உண்டு என்று இருக்கத் தொடங்கினாள் சஞ்சனா.

பிரேமும் கூடுமான வரையில் அவளிடம் குற்றம் கண்டுபிடிக்கவில்லை. சகஜமான தொரு உறவுமுறையை உருவாக்க அவன் முயல்வது போல சஞ்சனாவிற்கு தோன்றியது. அது சஞ்சனாவின் ஆசை கொண்ட நெஞ்சின் பிரம்மையாக கூட இருக்கலாம்.

நாட்கள் இப்படியாக... பிரேமிடம் அறிமுகம் நல்ல முறையில் நடந்து இருக்கலாம் என்று மனது சில சமயம் குறைபடுவதுண்டு. இந்த ஆனந்த் இப்படி ஒரு பெரும் குழப்பத்தை உண்டாக்காமல் இருந்திருக்கலாம்? டிரிப்லெட்ஸ் பிறந்த நாள் விழாவில் இவள் அவன் மேல் தடுக்கி விழாமல் இருந்திருக்கலாம். அவளின் சிந்தனைகள் தனிமையில் இதையே சுற்றி ஓட தவித்துப் போனாள் சஞ்சனா.

கரடி, வெம்புலி வாயையும் கட்டலாம். ஒரு சிங்க முதுகின் மேற்சவாரி கொள்ளலாம். கனல் மேல் நடக்கலாம். ஆனால் சிந்தையை அடக்கி, சும்மா இருக்கின்ற திறமை மனிதனுக்கு அதுவும் பெண்ணுக்கு அரிது.

20

இந்த பிரச்சனையையே நினைத்துக் கொண்டு இருக்காமல், அடுத்து வந்த நாட்கள் ''ரோஸ்கார்ட் மோட்டார்ஸ்'' அலுவலக வேலையில் மூழ்கினாள் சஞ்சனா.

காஸ்ட் அக்கவுண்ட் ரவியை ஸ்டாக் டேர்ன் ஓவர் ரிப்போர்ட்டை ரெடி பண்ணச் சொன்னாள். நிதி நிர்வாக மேனேஜரையும், துணை மேனேஜரையும் தன்னுடைய அறைக்கு வரச்சொல்லி, எந்த ஸ்பேர் பார்ட் எவ்வளவு உள்ளது? எது நிறைய மூவ் ஆகிறது. எமர்ஜன்ஸி ஸ்டாக் எது? எந்த ஸ்பேர் பார்ட்டை அதிகமாக ஸ்டாக் வைக்கணும். எது டெட் ஸ்டாக், பஸ்ஷனல் ஸ்டாக் எவ்வளவு ரிபிளேஸ் பண்ண வேண்டுயிருக்கு. எந்த ஸ்பேர் பைல் அப் ஆகிறது என்று கடைக்கெடுத்து இரண்டு நாட்களுக்குள் முழு டிடெய்ல்சும் ரெடி செய்யச் சொன்னாள். இவளும் நான்கைந்து நாட்கள் ப்ராக்டரி சைட்டுக்கு போனாள். குறிப்புகள் எழுதி வைத்தாள் புதிதாக இன்னொரு பட்ஜெட்டை ரெடி செய்தாள். இன்னும் வேலைகள் தொடர்ச்சியாக இருந்த வண்ணம் இருந்தன.

அன்று அலுவலக விஷயமாக பிரேமிடம் முக்கியமான கலந்துரை



''ஏம்மா என் மனைவியிடம் சாவிக் கொத்தை கொடுத்தீங்க...?''

''நான் கொடுக்கலேடா... அவ தான் சல்லிக் கரண்டியால் கொத்து, கொத்துன்னு கொத்தி சாவிக் கொத்தைப் பிடுங்கிட்டா...!''

-ஆர்.சுப்பு, திருத்தங்கல்.



யாடல் இருந்தது. காலையில் இருந்தே அதற்கான டேட்டாஸை எல்லாம் எழுதி படித்து அவனிடம் பகிர்ந்து கொள்ளும் விதமாக தன்னை தயார்படுத்தினாள் சஞ்சனா. அதற்குள் போனில் அவளின் தந்தையின் சிநேகிதர் மகன், இவளுக்கும் சிறுவயது முதல் நண்பன் தான். அவனுடைய ஃபியான்ஸிக்கு வலண்டையின்ஸ் டேக்கு ஏதோ நகை வாங்க வேண்டும். நீ செலக்ட் பண்ணித் தந்தால் நன்றாக இருக்கும். ப்ரியா நீ என்று கேட்டான்.

''இல்லப்பா இன்னைக்கு ஆபீஸில் முக்கியமான வேலையிருக்கு. ஈவினிங் போகலாமே''

''எனக்கு ஈவ்னிங் ஃப்ளைட்.பேக் டூ மும்பை. கொஞ்சம் ஒரு ஒரு மணி நேர பர்மிஷன் கிடைக்காதா?''

''சரி நீ போன் பண்ணு. அதற்குள் என் வேலை முடிந்து விட்டால் உன்னுடன் வருகிறேன். இல்லாவிட்டால், உன்னோட செலக்ஷன் தான். பாவம்டா அந்த பொண்ணு, எதையாவது குண்டக்க மண்டக்கன்னு வாங்கி கொண்டு போய் குடுப்பே'' என்று கிண்டலடித்தாள்.

''அதற்கு தானே உன்னைக் கூப்பிடுகிறேன். அவளுக்கு வேற என்னை பற்றி ரொம்ப நல்ல அபிப்ராயம். நீ செலக்ட் பண்ணுனதை ஐயா ... செலக்ட் பண்ணதாகத்தானே சொல்வேன்'' அப்படியே கவுந்தர மாட்டாள்.''

''டே...ய்... என்று சிரித்தாள் சஞ்சனா.

அலுவலகத்திலும் பொழுது மிக திருப்தியாக கழிந்தது.

''காரணம் பிரேம்.

அவள் சொன்ன சில பாயிண்ட்களில் அவன் கண்களில் பாராட்டுதல் இருந்தது.

புதிதாக அவன் கொரியாவில் இருந்து இறக்குமதி செய்யப் போகிற காரின் ஸ்பேர் பார்ட்ஸ், பேக் டரியின் கோடவுன், கொள்ளளவு, கொள் முதல் என்பது பற்றி நிறைய பேசினான். ஆனால் நாளை அந்த இறக்குமதி வேலை நிமித்தமாக கொரியாவிற்கு ஒரு வார காலம் போக போவது, சஞ்சனாவிற்கு செய்தியாக இருந்தது.

ஆகா... அவனை பாராமல் ஒரு வாரகாலம்... என்று சிதறிய மனதை ஒருமுகப்படுத்தி அவன் பேச்சில் கவனமானாள். அவன் பேச்சில் நிறைய விஷயங்களை குறிப்பு எடுத்துக் கொண்டு ஹைலெட் செய்து வைத்தாள்.

வேலை என்றாகி விட்டால், அவன் முகத்தில் தோன்றும் தீவிரம். ஒன்றிவிடுதல் இவற்றை பார்க்கும் போது, சஞ்சனாவிற்கு பிரமிப்பாக இருக்கும். அது அவனின் வெற்றியின் ரகசியம். ஆனால் சஞ்சனா நிறைய சமயங்களில் தடுமாறி போனாள்.

அவன் பேசிக் கொண்டிருக்கையில், சஞ்சனாவின் மொபைல் 'போன்' மணியடித்தது. பேசிக் கொண்டிருந்தவன் பேச்சை நிறுத்தி விட்டு கண் அசைவால் போனை 'அட்டெண்ட்' பண்ணச் சொன்னான்.

''ஓ... அபிஷேக் டிரை பண்ணறேன். அநேகமாக வேலை முடிந்து விடும். ஓ.கே... அந்த காபி ஷாப்பில் மீட் பண்ணலாம் என்று முடித்தாள்.

ஆனால் அவள் பேச பேச எதிரிலிருந்தவன் கண்களில் சீற்றத்தையும், முக மாற்றத்தையும் சஞ்சனா. கவனிக்கவில்லை, கவனிக்காத காரணத்தால், அவனுடனான மீட்டிங்கும் திருப்திகரமாக முடிந்ததில், சகஜமாக,



அவனிடம் வெளியில் செல்ல வேண்டும். மீட்டிங் முடிந்து விட்டதல்லவா? நான் கிளம்பட்டுமா? என்று அனுமதி கேட்டாள்.

''எவன் எப்போது கூப்பிடுவான் என்று தான் நீ மிகுந்த ஆவலாக இருப்பது தெரிகிறதே. எந்த ஆண்மகன் கூப்பிட்டாலும் ரெடியாக கிளம்பி விடுவாய் போல... இதில் என்னைக் கேட்பானேன். ஆண்கள் என்றால் அலையும் பெண்கள். ச்சே...'' அவன் பேசிய ஒவ்வொரு சொல்லும் அதன் அர்த்தமும், சஞ்சனாவிறகு குமட்டிக் கொண்டு வந்தது. இதை அவள் எதிர்பார்க்கவில்லை. கண்கள் கோபத்தில் சிவந்து போனது. நேரம் கிடைக்கும் போதெல்லாம் இது என்ன அசிங்கமான பேச்சு? அவளின் கோபத்தில் அமர்ந்திருந்த நாற்காலியில் இருந்து 'சட்' என்று எழும்பி, அவளுக்கு முன்பாக இருந்த டம்ளரில் இருந்த தண்ணீரை அவன் முகத்தில் ''சடாரென்று'' மொத்தமாக ஊற்றி விட்டு வேகமாக திரும்பி நடந்தாள்.

தண்ணீர் சரியாக அவன் முகத்தில் பட்டு, வழிந்து சட்டையை நனைக்க, பிரேம் கண்களில் நம்பவே முடியாத அதிர்ச்சி.

திரும்பி ஓட நினைத்தவளின் கைகளை வேகமாக நகர்ந்து எட்டிப்பிடித்தாள் அவன்.

''என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்? திமிர், அத்தனையும் திமிர். செய்த செயலுக்கு மன்னிப்பு கேட்காமல் நீ இந்த இடத்தை விட்டு போகப் போவதில்லை.''

''நீங்கள் பேசிய வார்த்தைகளுக்கு என்னிடம் மன்னிப்பு கேட்டால், நான் என் செயலுக்கு மன்னிப்பு கேட்கிறேன்'' அவன் கைபிடித்த இடத்தில், அதன் அழுத்தத்தில் கை வலித்தது. ஆனால் விரைத்த படி சற்றும் பயப்படாமல் அவன் கண்களைப் பார்த்து அவள் சொல்ல,

''ஜாக்கிரதை சஞ்சனா! என்னை அவமானப்படுத்திய யாரும் சுலபத்தில் காயப்படாமல் போனதில்லை''

''என்னை அவமானப்படுத்திய யாருக்கும் பதிலடி கொடுக்காமல், நானும் போவதில்லை. உங்களிடம் வேலை பார்ப்பதால் நான் உங்கள் அடிமையில்லை. வரம்பு மீறி நீங்கள் பேசுவதை 'கல்' போல கேட்டுக் கொண்டிருப்பதற்கு. நானும் ரத்தமும் உணர்ச்சியும் உள்ள பெண். உணர்ச்சி வேகத்தில் நெஞ்சு விம்ம பேசிய படி அவன் முகம் பார்த்தவளுக்கு மேலே பேச எத்தனித்த வார்த்தைகள் ஒட்டு மொத்தமாக மறந்துப் போனது.

அந்த கண்கள்

பிரேமின் கண்கள்

அவன் பார்வை அவளின் நெஞ்சில் படிந்து பின் கண் வழியே அம்பாக பாய்ந்து தைத்தது.

அவளால் அவன் பாதிக்கப்பட்டது. பெண்ணவளுக்கு புரிந்து போனது. சஞ்சனாவின் இதயம் வெகு வேகமாக இயங்கத் தொடங்கியது. முகம் குங்குமமாக சிவந்தது.

இருவரின் மனதிலும் கொளுந்து விட்டெறிந்த காதல் சரியாக பரிமாறி, புரிந்து கொள்ள முடியாத காரணத்தால் நெஞ்சு வரை தகித்தது. அது தந்த வெப்பம். இருவராலும் தாங்கி கொள்ள முடியாததாயிற்று.



எப்படி நிகழ்ந்ததென்றே தெரியாமல் பிரேமின் அணைப்பில் இருந்தாள் சஞ்சனா. வார்த்தைகள் பறிமாறல் எந்த நிமிடம் நின்றது என்று சொல்ல முடியாது போயிற்று.

சஞ்சனாவை பார்த்த அவன் கண்கள் காதலில் கனிந்திருந்தது. என்னுடையவள் என்ற உணர்வு அவனுள் பிரமாண்டமாய் எழுந்தது. எத்தனை வருட காத்திருப்பு. சரியான படியான பிரதிபலிப்பு அவளிடம் இருக்கிறதா? இல்லையா என்று அவனால் கணித்துச் சொல்ல முடியவில்லை. பிஸினஸில் அக்கு வேறு ஆணிவேறாக, அடுத்த நாள், அடுத்த நிமிடம், அடுத்த நொடி என்ன நடக்கும் என்று சட்டமாக சொல்பவனுக்கு, அவனுடைய நெஞ்சையாளும் பெண்ணவளின் மனதில் இருப்பது புரியவில்லை,

அவனுடைய கட்டுப்பாட்டையும் மீறி அவனின் அணைப்பில் இருந்தவளின் செவ்விதழ்களை அவன் உதடுகள் சிறைபிடித்தன.

அவனுடைய அணைப்பில் கட்டுண்டு கிடந்த சஞ்சனாவிற்கு சுற்றியிருந்த உலகமே மறந்து போனது. அவனும், அவளும் மட்டுமான உலகமே தெரிந்தது. அவளுடைய கைகள் தன்னிச்சையாக உயர்ந்து அவனுடைய கழுத்தில் மாலையாக கோர்த்தது.

அதை உணர்ந்து அவ்னின் அணைப்பு மேலும் இறுகியது. இருவரின் மோனநிலை சில பல நொடிகளோ, நிமிடங்களோ, யுகங்களோ என்று புரியாத வகையில் அவர்களுக்குள் நீடித்தது.

பிரேமின் செல்போன் சத்தம் அவர்களின் மோனநிலையை கலைக்க, தன்னை உணர்ந்த சஞ்சனா 'சட்' என்று விலகினாள். கால்கள் தெம்பிழந்து துவண்டு விழுந்து விடும் போல இருந்தது. அந்த செல்போன் மணியோசை பூஜை வேளை கரடியா? இல்லை அவள் தன் உணர்வு கொள்ள செய்த எச்சரிக்கை மணியா?

என்ன காரியம் செய்து விட்டாள். ஒரு முறை செய்த பிழையால் ஆறு வருடமாக நிம்மதியற்று போனது மறந்து விட்டதா அவளுக்கு? அதுவும் அவளைப் பற்றி துளியும் மரியாதையில்லாதவனிடம்! இன்னும் என்ன நினைப்பான்? அவனெதிரில் மகா கேவலமாக உணர்ந்தாள் சஞ்சனா. முகம் சூடாகி தக்காளி பழம் போல் சிவந்தது.

ஆனால் பிரேமோ, விலகியவளை மீண்டும் அவன் பிடிக்குள் இருத்த, உடைந்த குரலில், ''சஞ்சு'' என்ற படி கைகளை நீட்டினான். ஆனால் அவள் அதற்குள் அவனுக்கு முதுகு காட்டி நின்றாள். அவனுமே எதிர்பாராமல் நடந்த நிகழ்ச்சியில் பிரமித்துச் செயலிழந்து போனான்.

செல்போன் மணி வேறு இடைவிடாமல் அடிக்க, புருவம் சுழித்து, உதடு கடித்த படி, மேஜையில் கிடந்ததை எடுத்து ''ஹலோ'' சொன்னான். பின்பு ''ஓ....ஓ... குட் குட் என்று பேசி முடித்தான்.

அவன் பேச பேச சஞ்சனா மெல்ல அறையை விட்டு நகர்ந்தாள். செல்போனில் பேசினாலும் அவன் கண்கள் இமைக்காமல் அவள் செல்வதையே பார்த்தன.

★★★

21

தலைவலி என்று பர்மிஷனோடு சீக்கிரம் வீடு வந்து சேர்ந்தாள் சஞ்சனா. பீவரிஷ் ஆக இருக்கு, மாத்திரை போட்டு தூங்கப்போறேன். டிஸ்டர்ப் பண்ணாதீங்க என்றபடி செல் போன் ஆப் செய்து 5 மணிக்கெல்லாம் படுக்க சென்றாள். யாரிடமும் பேச பிடிக்கவில்லை அவளுக்கு. தன்னறைக்கு வந்து கதவை தாழிட்டவளுக்கு கண்கள் பொட்டு மூடவில்லை. அதுவரை சிரமப்பட்டு அடக்கி வைத்திருந்த அழுகை குமுறிக் கொண்டு பீறிட்டது.

அவளுடைய மாசற்ற அன்பை அவன் புரிந்துக் கொள்ளப்போவதே இல்லை.

அவளுக்கு அவன் மட்டும் தான்.

ஆனால் அவனுக்கு நந்தா... இவள் நூற்றில் ஒருத்தி!

எனக்கு மட்டும் ஏன் இப்படி நடக்கிறது? வாழ்க்கை முழுமைக்கும் பார்க்கவே கூடாது என்று கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தவள் முன், ஏன் அவனை கண் முன்னே கொண்டு வர வேண்டும். கடவுள் ஏன் இப்படி செய்ய வேண்டும்?

அவளிடம் போலவே அவனும் காதல் கொண்டிருந்தால் இப்படி ஒரு கஷ்டத்திற்கே இடமில்லேயே?

சஞ்சனா வீட்டிற்கு நான்கைந்து முறை போன் செய்து விட்டான் பிரேம்.

தலைவலி, தூங்கப் போய் விட்டார்கள். இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். டிஸ்டர்ப் பண்ண வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். நாளைக்கு போன் செய்யுங்கள் என்ற பதில் தான் அவனுக்கு கிடைத்தது.

நாளை காலை அவன் கொரியாவிற்கு கிளம்புகிறான். அதற்கு முன் அவளிடம் பேச அவன் மனம் துடித்தது.

இடையிடையே பேசிய ஆனந்திடம் இவன் சஞ்சனா பற்றி கேட்ட கேள்விகளுக்கு கிடைத்த பதிலில் ஆனந்த் பொய் பேசி சஞ்சனாவை காதலி என்றது பிரேமிற்கு புரியத்தான் செய்தது.

ஆனால் இன்று அவன் செய்த காரியத்தில் அவனுக்கு உள்ளூர பயங்கர பயம் இருந்தது. உண்மை சஞ்சனாவின் ரெஸ்பான்ஸை அவன் அறிந்துக் கொண்டாலும் உடன் மறைந்தவளிடம் இரு வார்த்தைகள் பேசிட மனம் தவித்தது.

இரவு பொழுதை எப்படியோ கழித்தான்.

அழுது அழுது உறங்கி போன சஞ்சனாவிற்கு விடியற்காலையிலேயே விழிப்பு வந்து விட்டது. கண்ணாடியில் பார்த்த அவள் முகத்தைக் கண்டு பயந்து போனாள். கண்கள் சிவந்து இமைகள் வீங்கி போயிருந்தது.

வீட்டில் யார் முகத்தில் இப்படி விழிப்பது?

''என்ன...? என்னாச்சு? என்று மாறி மாறி கேள்விகள் கேட்பார்களே.

பல் துலக்கி விட்டு குளிர்ந்த நீரால் நன்கு முகம் கழுவினாள். ஆனாலும் ஒன்றும் திருந்திய பாடில்லை. டவலை எடுத்துக் கொண்டு குளிர்ந்த நீரால் தலைக்கு குளித்து பார்த்தாள். கொஞ்சம் பரவாயில்லை.



இனி மேல் நடந்தவற்றை நினைக்க கூடாது என்று மனதில் உறுதி எடுத்துக் கொண்டாள்.

காதல் அவள் சொல்லி கேட்குமா?

என்ன?

சஞ்சுவிற்கு அது புரியவில்லை.

அவனிடம் கொஞ்சம் ஒதுங்கியிருக்க வேண்டும். வேலை பற்றிய பேச்சை தவிர வேறு எதுவும் அவனிடம் பேசக் கூடாது.

பிரேம் வெளிநாடு போய் திரும்பும் இந்த நாட்களுக்குள் தன்னை நிறைய மாற்றிக்கொள்ள வேண்டும் என்று மனதுள் கணக்கிட்டு கொண்டாள். நெருப்பு என்று தெரிந்த பின்னும், அது அவளை உருத்தெரியாமல் அழித்து விடும் என்று புரிந்த பின்னும், உஷாராக இருக்கவில்லை என்றால் இன்னும் ''அவமானம் தான் மிஞ்சும். அவள் பொசுங்கி போய் விடுவாள்.

முகத்தில் கடுமையை பூசி நெஞ்சின் இறக்கத்தை மறைக்க வேண்டும் என்று மனதில் என்னென்னவோ எண்ணங்கள்.

சூனியமான நினைவுகளின் தாக்கம் சின்னப்பெருமூச்சாக அவளிடமிருந்து வெளிப்பட்டது.

ஈரத்தலையை துவட்டியபடி ஹாலுக்கு வந்தவள் போன் மணி அடிக்க, யார் இந்த அதிகாலை நேரத்தில் என்று எண்ணியபடி ரீஸிவரைக் கையில் எடுத்து ''ஹலோ'' சொன்னாள். ஆனால் எதிர்புறத்தில் ஒலித்த குரல் இன்னும் ஒரு வாரத்திற்கு அவள் கேட்கவோ போவதில்லை என்று எண்ணிய பிரேமின் குரல்.

அவனின் பிசிறற்ற 'ஹலோ' வில் அவள் கண்கள் குளமாயின.

மீண்டும் அவன்.

''ஹலோ சஞ்சனா, பிரேம் ஹியர்'' என்ற வார்த்தைகளில் சஞ்சனாவிற்கு தொண்டையடைத்தது.

பதில் ஒன்றும் பேச வாய் எழும்பவில்லை. எதற்காக இந்த அதிகாலையில் அழைக்கிறான்?

ஏன்?

என்று பல கேள்விகள் அவளுள் கிளம்பின.






''சஞ்சு நான் ஏர்போர்ட்டில் இருந்து 'கால்' பண்ணறேன்''-என்று எதிர்புறத்திலிருந்து பதில் வராததால் வேக வேகமாக பேசினான் பிரேம்.

''அதனால்...'' என்று அவளும் மேலே பேச வார்த்தைகளைத் தேடினாள். ஆனால் மனது அவன் போன் செய்வதற்கான காரணங்களை வேகமாக ஆராய்ந்தது. ஆனால் தொடர்ந்து அவன்பேச, சஞ்சனாவிற்குள் அவன் எதை பற்றி பேசப் போகிறான் என்று சின்ன அனுமானம் இருந்தது. அதனால் அவள் முகம் சிவந்து போனது.

''நேற்று உன்னிடம் பேச நிறைய முறை டிரை பண்ணினேன். முடியவில்லை. உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும். சஞ்சனா...'' என்று அவன் தெளிவான உச்சரிப்பில் தொடங்க

''அந்த நேற்றில், இவள் புத்தி பேதலித்தது, செய்த காரியத்தை பற்றி கமெண்ட் அடிக்க போகிறானா? அவள் உள்ளம் குமைந்தது.

சொல்லுவான், சொல்லுவான். இனிநீ என் தம்பியை அடைய முடியாது என்று சொல்லுவான் அதை உறுதிபடுத்த தானே இந்த நாடகம். அது புரியாமல் அவள்...

''எனக்கு, உங்களிடம் பேசவும் கேட்கவும் ஒன்றுமில்லை' என்று கொஞ்சமும் இளகாத கடினமான குரலில் அவள் சொல்ல

எதிர்முனையில் கனத்த நிசப்தம் நிலவியது. அவளுடைய உதாசீனமான பதிலில் பொங்கிய கோபத்தை அடக்கிய பிரேம்.

பிளைட் கிளம்ப தயாராகிறது சஞ்சனா. கொரியா போய்விட்டு திரும்பியவுடன் நீ...

''நீங்க எங்கேயும் போங்கள், திரும்பி வராமல் அந்த நாட்டிலேயே இருந்துவிட்டால் எனக்கு இன்னும் சந்தோஷம். எனக்கு உங்களை பார்க்கவே வேண்டாம். இந்த ஜென்மத்தில் மட்டுமில்லை, இனி எந்த ஜென்மத்திலும்''- வெகு வேகமாக பேசியவளின் வார்த்தைகள் கடுமையாக இருந்தன. ஆனால் அதற்கு மறுபக்கத்திலிருந்து பதில் தந்தான் அவன். அந்த பதில், அந்த சொற்கள் அவள் நெஞ்சை கிழித்தன. ''ஆனால் நேற்று என் அருகாமை அப்படி ஒன்றும் உனக்கு கசந்ததாக தெரியவில்லை. என்னிடமிருந்து உன்னை மறைக்கிறாயா? இல்லை உன்னிடம் இருந்தே உன்னை மறைக்கிறாயா? முட்டாள்''- என்றவன் எதிர்முனையில் சப்தமில்லாததால் பட்டென்று போனை வைத்தான்.

22

இவ்வளவு நேர்ந்த பிறகு, இனிமேல் அவனை நேருக்கு நேர் பார்க்க அவளால் முடியுமா?

முடியாதே.

இனி வேலைக்கு போவதில் அர்த்தமில்லை என்று முனுக் முனுக் என்று வலித்த நெஞ்சோடு முடிவு செய்தாள் சஞ்சனா.

அடுத்து வந்த இரண்டு தினங்கள் ஆபீஸ் சென்று, அவளுக்கென்று, இடப்பட்டிருந்த வேலைகள் செவ்வனே செய்து முடித்து வைத்தாள். அதன் பிறகு அவள் 'ரோஸ் காட்' க்குச் செல்லவில்லை.



வீட்டில் பெற்றவர்களுக்கு என்ன பதிலை சொல்வதென்றும் புரியவில்லை. ஏற்கனவே தாயாரின் பார்வை மாறியிருந்தது, அவளுக்கு புரிந்தது. இப்படி மிகப்பெரிய நிறுவனத்தில் கிடைத்த வேலையை வேண்டாம் என்று சொன்னால், காரண காரியம் கேட்க மாட்டார்களா? வேலையிலிருந்து நின்று விட்டாயென்றால், இனி கல்யாணம் பற்றி பேசலாமா? என்று கேட்க மாட்டார்களா? என்ன சொல்லி மறுப்பது? ஆனால் சரியாக ஒருவாரம் கழித்து வந்தவன், சஞ்சனாவை ஆபீசுக்கு உடனே வருமாறு அழைத்தான்.

அவன் குரலில் இருந்த அன்னியத்தில், சஞ்சனாவும் வேலை விஷயமாக ஏதோ கூப்பிடுகிறான், ஏதேனும் தவறு செய்திருந்தால், தெளிவுபடுத்திவிட்டு வரவேண்டுமாயிருக்கும் என்ற நினைப்புடன் போனாள்.

அங்கே அவன் அவளை நிமிர்ந்து கூட பார்க்கவில்லை.

மிகப்பெரிய எக்ஸ்போர்ட் ஆர்டரை கொண்டு வந்திருந்தான். கொரியன் கார் கம்பெனியுடன் கோலாபரேஷன் என்று புது பிஸினஸ் ஒப்பந்தம். வேலைகள் நிறைய இருந்தன. அதுவும் நிதி நிர்வாகத்தில் ஏகப்பட்ட வேலைகள் சிறிது நேரத்தில் சஞ்சனா,

''நான் இனி இங்கே வேலைக்கு வரவில்லை. என்னிடம் இருந்த அத்தனை டாக்குமெண்ட்ஸ், அகௌண்ட்ஸ், பேலன்ஸ் ஷீட், பட்ஜெட் பிளானிங் எல்லாம் ராஜ் கிட்டே ஒப்படைத்து விட்டேன்...''

சஞ்சனாவை மேலே ஒன்றும் பேச வேண்டாம் என்று கைகளை உயர்த்தி நிறுத்தச் சொன்னான்.

பின் தொண்டையை கனைத்தபடி

''இனி அன்று போல் எதுவும் நேராமல் பார்த்துக் கொள்கிறேன்'' என்று மெல்ல சொன்னான். அவளின் முகத்தில் சிவப்பு ஏறுவதைக் கண்டவுடன், ''உன் படிப்பிற்கு தீனி போடும் வகையில் நிறைய வேலைகள் இருக்கின்றன சஞ்சனா. இனி அதை கவனிப்போம்''- என்றான்.

அதிலும் அவள் முகம் தெளிவடையாததைக் கண்டு, ''இனி மீண்டும் இண்டர்யூ வைத்து ஆள் எடுப்பதற்கு நேரமில்லை சஞ்சனா. அத்தோட வேலைக்கு, உன் சம்மதத்துடன் கூடிய இரண்டு வருட பாண்ட்' என்னிடம் இருக்கிறது''- என்று முடித்து விட்டு, அவள் மேலே எதுவும் பேச அனுமதிக்காமல் சென்று விட்டான்.

அவளுடைய வேலையின் தகுதியை எண்ணி அழைக்கிறான். அந்த சமயத்தில் சஞ்சனாவால் மறுத்து எதுவும் பேசமுடியாமல் போனது.

வேறு எதுவும் யோசிக்க முடியாமல் நாட்கள் பறந்தன.

இரண்டு வார காலம் சஞ்சனாவிற்கு எக்கச்சக்க வேலைகள் இருந்தன. இரண்டு வார காலத்தில் மொத்தமே இரண்டு நாட்கள் தான் அவளால் அவனைக் காணவும் முடிந்தது. அவளுக்கு கீழே கணக்கு வழக்குகளில் ஈடுபட்டிருந்தவர்களிடம் நிறைய வேலை கொடுத்தாள். அன்று அவன் அனுமதியுடன் அவன் அறைக்குள் பேலன்ஸ் ஷீட்டுடன் நுழைந்தாள்.

உள்ளே போனாள். நந்தா இருந்தாள்.

உள்ளுக்குள்ளே ஆச்சரியமாகி போனது சஞ்சனாவிற்கு. இதுவரை அவள்

ஆபீஸ் வரை வந்ததில்லை.

முன்பே அறிமுகம் இருந்ததால் ஒரு அறிமுகச் சிரிப்பொன்றை அவளை நோக்கி உதிர்த்தாள் சஞ்சனா.

''வருகிறாயா சஞ்சனா? இன்று ஈவினிங் என்னோட பேஷன் ஷோ இருக்கிறது. பிரேம்'மை அழைக்க வந்தேன். பேஷன் மட்டுமில்லை. நிறைய விஷயங்கள் இருக்கிறது அங்கே. வருகிறாயா?'' மிகவும் சிநேகமாக புன் சிரிப்புடன் கேட்டாள் நந்தா.

பிரேம் அவள் பக்கம் இருக்கும் பொழுது, புன் சிரிப்புக்கும் சிநேகத்திற்கும் என்ன குறை என்று பழித்தாள், சஞ்சனா.

வரமாட்டேன் என்ற சொல்ல முடியும். வருவது போல் தலையை ஆட்டினாள் சஞ்சனா. இவளுக்கு தனியாக வேறு பேஷன்ஷோ நடக்கிறதா? தினம் தினம் இவள் அணியும் உடையும் நடையுமே ஒர பேஷன்ஷோ தானே.

''சரி இனி மேலும், நான் இங்கேயே நின்றால் கழுத்தை பிடித்து வெளியே தள்ளி விடுவார் பிரேம்'' என்று கண் சிமிட்டி சிரித்தவள், அவன் தோள்பட்டையில் கை வைத்து எக்கி அவன் கன்னத்தில் இதழ் பதித்து விட்டு ஒயிலாக நடந்து சென்றாள்.

என்ன அழகு. பிரேமை குறை சொல்லியும் பயனில்லை. இத்தனை அழகுக்கு மயங்காதவன் ஆண்மகனாக இருக்க முடியுமா?

கொஞ்ச நேரம் பிரேமிடம் பைனான்ஸ் பற்றிய டிஸ்கஷன் நடத்தினாள் சஞ்சனா. மிக ஜாக்கிரதையாக தன் கவனத்தை சிதறவிடாமல் தன் வேலையில் கவனமாக இருந்தாள் சஞ்சனா.

கொஞ்சம் கண்கள் உயர்த்தி பிரேமின் கண்களை கவனித்திருந்தால், சஞ்சனாவிற்கு உண்மையில் எல்லாம் மறந்திருக்கும். ஏனெனில் அவனின் கவனம் அவள் பேச்சில் இல்லை. அவளிடம் இருந்தது.

23

சஞ்சனாவிற்கு பேஷன்ஷோ செல்ல அவ்வளவாக விருப்பமில்லை. இருந்தாலும் இந்த நந்தா என்ன தான் லீலைகள் செய்கிறாள் பார்போமே என்ற குறுகுறுப்பில் கிளம்பினாள்.

பிரேம் முதல் வரிசையில் அமர்ந்திருந்தான். அவள் கூப்பிட்டால் உடனே போய் விடுவான் போல. ஆனாலும் சஞ்சனாவிற்கு நன்கு பொழுது போனது. ஆடை அலங்காரங்களில் பிரியமுள்ள சஞ்சனாவிற்கு, மாடல் பெண்கள் விதவிதமாக அணிந்து வந்து அணிவகுப்பு சுவாரசியமாக இருந்தது. நந்தாவை



''நான் என் மனைவியை சினிமாவுக்கு கூட்டிட்டுப் போக மாட்டேன்... நீ...?''

''நீயே சம்மதிச்சா... நான் கூட்டிட்டுப் போறேன்...!''

-ஆர்.சுப்பு, திருத்தங்கல்



பார்த்தால் பொறாமையாக இருந்தது. மாடலிங் ஷோ முடிந்தவுடன் கிளம்பிய சஞ்சனா, சரி வந்ததற்கு, நந்தாவிடம் சொல்லிக் கொண்டு கிளம்பலாம் என்று, மேடையில் இருந்து இறங்கி நடந்து வந்தவளிடம், ''மிகவும் நன்றாக இருந்தது நந்தா, நேரம் போனதே தெரியவில்லை''- நாகரீகம் கருதி மனதில் நினைத்ததைச் சொன்னாள் சஞ்சனா.

''ஓ... தேங்க்யூ சஞ்சனா. பிரேமுக்கு கூட என்னை இந்த மாதிரி விதவிதமான மாடலிங் ட்ரெஸில் பார்க்க வெகு ஆசை. அதனால் தான் முதல் வரிசையில் ஓடி வந்து அமர்ந்துவிட்டான் பார்த்தாயா? கண்களை சிமிட்டினாள் நந்தா.

வேண்டுமென்றே குறிப்புகள் காட்டி பேசிய நந்தாவிற்கு பதிலடி கொடுக்க வேண்டும் போல சஞ்சனாவிற்கு இருந்தது.

''பிரேம் அம்மாவும் வந்திருக்கிறார்கள் சஞ்சனா. வா உனக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன். நான் என்றால் அவர்களுக்கு ரொம்ப பிடிக்கும். எப்பொழுது வீட்டிற்கு வலதுகால் எடுத்து வைத்து வருவேன் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். ''ஓ ஹோ விஷயம் அப்படி போகிறதா? அது தான் அவள் முகத்தில் இந்த சந்தோஷம். அப்படி என்றால் கூடிய சீக்கிரம் பிரேம், நந்தா கல்யாணம் நடக்கும். சில வருடங்களாக சஞ்சனாவிடம் மறைந்து போயிருந்த 'வால்தனம்' கண்களில் மின்னியது.

நந்தாவை கொஞ்சம் குழப்பிவிட்டு திணறடித்தால் என்ன? அட்லீஸ்ட் சிலமணி நேரமாவது?

அது தான் பிரேமின் காதலை பெற்று, சந்தோஷமாக கல்யாணமாகி செட்டிலாக போகிற பெரிய வரத்தை கடவுளிடம் இருந்து பெற்று வந்திருக்கிறாளே. கொஞ்சம் அவனை அலைக்கழித்தால் என்ன? உண்மையில் நந்தா கொடுத்த செய்தியில் சஞ்சனாவின் நெஞ்சம் நொறுங்கிப் போயிருந்தது. அது தந்த வலியை மறைக்க, அவள்,

''ஓ, பிரேம், நானல்லவா வீட்டிற்குள் வலது கால் எடுத்து வைத்து அவர்கள் வீட்டிற்குள் நுழைய வேண்டும் என்று காத்திருக்கிறான். பிரேமின் அம்மாவிற்கு உங்களை பிடிக்கும். ஆனால் பிரேமிற்கு என்னையல்லவா பிடிக்கும். பயங்கரமான டிவிஸ்ட் இல்லை.

கொஞ்சம் யோசித்து பார்த்து முடிவெடுங்கள். பாவம் நீங்கள். நந்தா நிறைய எதிர்பார்த்து ஏமாந்து போக...

சஞ்சனாவின் பேச்சு பாதியில் நின்றது.

பிரேம் அவளின் இடதுபுறம் நின்றிருந்தான். பக்கத்திலேயே அவன் தாய்.

ஐய்யோ, இவன் எப்பொழுது வந்தான்?

அவன் முகத்தில் இருந்த நம்பவே முடியாத பாவனையில், சஞ்சனா பேசிய அனைத்தையும் கேட்டுவிட்டான் என்று புரிந்தது.

சஞ்சனாவின் இதயம் வெளியே குதித்துவிடும் போல துடித்தது.

இப்படியும் ஒரு பெண் இல்லாததையும் பொல்லாததையும் சொல்வாளா என்ற மாதிரியான பார்வை. அடி பாவி, என் வாழ்க்கையே பாழடித்து விட்டாயே என்பது போல பார்வை. பதிலுக்கு பதில் என்று அவளை ஏதாவது செய்வானோ?

போதாதற்கு நந்தா எதிர்பாராத விதமாக, சினிமா ஸ்டைலில்,



''ஐ ஹேட் யூ பிரேம், ஐ ஹேட் யூ''- என்று கூவியபடி கண்களை கசக்கியபடி ஓட, பிரேம் சஞ்சனாவை தீர்க்கமாக ஒரு பார்வை பார்த்து விட்டு, நந்தாவை பின் தொடர்ந்தான்.

சத்யா சஞ்சனாவிடம் இரண்டு வார்த்தை பேச இரண்டெட்டு எடுத்து வைக்க, அதே சமயம் நான்கைந்து மாடல்கள் வந்து அவரை சூழ,

சஞ்சனா, பிரேமின் அம்மாவிடம் இருந்து திட்டு கிடைக்காமல் காப்பாற்றிய அந்த பெண்களுக்கு மனதிற்குள் நன்றி சொல்லி உடன் அங்கிருந்து மறைந்தாள்.

ஆனால் சத்தியாவின் கண்கள் அவளையே பின் தொடர்ந்தது. கண்களில் கேள்விகளோடு, யோசனையோடு

24

மறுநாள் காலை ஒன்பது மணிக்கு வீட்டில் காலிங்பெல் சப்தம் கேட்க, கதவை திறந்தாள் சஞ்சனா. திறந்த சஞ்சனா பிரேமை கண்டதும் நம்ப முடியாமல் இது கண்களின் சித்து விளையாட்டா? என்று கண்களை தட்டி விழித்தாள். அவனே தான்? ஆனால் ஏன்? மூளை வேலை செய்ய மறுத்தது.

''சஞ்சு யார்?''- என்றபடி பிராபகரும் அவர் பின்னாலேயே வசுந்தராவும் வர, சஞ்சனாவால் பேசவே முடியாத பிரமிப்பு. வாசலை பார்த்த வசுந்தரா, ''ஓ சஞ்சுவோட பாஸ்'ங்க. உள்ளே வாங்க? நீங்களே ஏன்? ''வாங்க வாங்க''- என்று பதட்டத்தில் வசுந்தராவிற்கு பேச்சு கோர்வையாக வரவில்லை.

உள்ளே வந்த வண்ணம் பிரேமின் கண்கள் சஞ்சனாவை விட்டு விலகினால் தானே!

அந்த பார்வையில், பிரபாகருக்கும், வசுந்தராவிற்கும் குறிப்பு இருந்தது.

சோபாவில் அவளை அமர வைத்து நலம் விசாரித்தார் பிரபாகர். சஞ்சனாவிற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அவன் ஏன் வந்திருக்கிறான் என்று சின்ன க்ளூ கூட அவளால் கண்டு பிடிக்க முடியாமல் குழம்பி நின்றாள்.

''சஞ்சனா உங்களிடம் சொல்ல கூச்சப்பட்டாள். அவளுக்காக, அதாவது நான்... எனக்கு சஞ்சனாவை ரொம்ப பிடிக்கும் என்றான் பிரேம்.

அதற்கு மேல் சஞ்சனாவிற்கு கேட்கவில்லை. நேற்று அவன் நந்தாவிடம் பேசிய வார்த்தைகள். அடக்கடவுளே.

மெல்ல உள்ளே நழுவினாள் சஞ்சனா. குளிப்பதற்காக பாத்ரூம் போனவள் வெளியே வரவேயில்லை.

அவன் சென்றவுடன் ஹாலுக்குள் வந்த சஞ்சனா பெற்றோரின் பூரிப்பான முகத்தைக் கண்டு கண்களை கேள்வியாக்கினாள்.

''அவர் உன்னை மணக்க கேட்டார் சஞ்சு'' நொடியில் முகமெங்கும் வியர்த்தது சஞ்சனாவிற்கு.

அய்யோ பொய். சதா வெறுப்பை உமிழும் அவன் அவளை மணக்க



கேட்பதாவது.... நம்பவே முடியாதே. ஆகா... யோசிக்காமலே புரிந்து விட்டது. பழிவாங்கல்.

அழுது கொண்டே ஓடின, நந்தா, பிரேமை நம்ப மறுத்திருப்பாளோ? தன்னுடைய காதலை முறித்து கொண்டிருப்பாளோ? திருமண பேச்சையும் நிறுத்தியிருப்பாளோ?

எந்த அளவுக்கு நந்தாவை நேசித்திருந்தால், இவளை பழிவாங்க இந்த அளவுக்கு இறங்கியிருப்பான்.

நேற்று அவள் நந்தாவிடம் பேசிய பேச்சின் வீரியம் அவளுக்கு இப்போது தான் புரிந்தது. இருந்தாலும் அன்று அவளுக்கு வாய் கொஞ்சம் கூடுதல் தான்.

தாய் தந்தையரிடம் உடனே விளக்கிச் சொல்ல, ''அம்மா இதெல்லாம் சும்மா... பொய்...''- என்று அவள் சொன்ன வார்த்தைகள், அவர் அவளின் வாயில் திணித்த சர்க்கரையிலும், கன்னத்தில் மாறி மாறிக்கிடைத்த முத்தத்திலும் உருவமிழந்து போயின.

கொஞ்சம் சமாளித்துக் கொண்டு பேச தொடங்குவதற்குள், போனில், வசுந்தரா விஷயத்தை நண்பர்கள், உறவினர்கள், லேடீஸ் கிளப் பிரண்ட்ஸ் என்று எல்லோரிடமும் பகிர்ந்து பெருமிதமாக பூரிப்பாக அமர. சஞ்சனாவிற்கு வயிற்றில் புளியை கரைத்தது.

பிரேம் பெண் கேட்டது வசுந்தராவிற்கு தலை கொள்ளாத பெருமை. ஊரெல்லாம் விஷயத்தை தமுக்கு அடித்து சொல்லாத குறையாக ஒலிபரப்பியாயிற்று.

ஒரு வழியாக தாயிடம், பிரேம் அவளை கிண்டல் செய்கிறான், அவனுடைய திருமணத்தை நிறுத்தியதற்கு பழிவாங்குகிறான் என்று எவ்வளவோ, விளக்கமாக எடுத்து சொல்லியாகிவிட்டது. ஆனால் வசுந்தரா, கேட்கும் நிலையில் இல்லை.

''உனக்கு தான் திருமணத்தில் ஒரு போதும் ஈடுபாடு கிடையாதே, வேண்டும் என்றே நீ இட்டுகட்டி சொல்லும் கதையை நான் நம்பத்தயாரில்லை''

''இல்லையம்மா... நிஜ...''

''ச்சு, சும்மா இரு சஞ்சு, சின்ன வயசிலிருந்து நாங்க, எது செய்தாலும், உன் நல்லதற்கு தான் செய்கிறோம். உன் வாழ்க்கை நல்லா இருக்கணும் என்று உன்னை விட எங்களுக்கு நன்றாக தெரியும்''

ஒரு ராஜகுமாரனே வந்து மகளை மணம் செய்து கொள்ள முன் வந்தால், எந்த தாய் மயங்க மாட்டாள்.

''அம்மா பிரேம்'க்கு பெண் சிநேகிதிகள் அதிகம் என்பதை கண்கூடாக பார்த்து என்னை ஜாக்கிரதையாக இருக்கச் சொன்னதும் நீங்கள் தான் மறந்து விட்டீர்களா?''

''எல்லாம் வெறும் சிநேகிதம் தான். நான் நன்றாக விசாரித்துப் பார்த்து விட்டேன். இல்லாவிட்டால் அந்த மாதிரி பட்டவனிடம் உன்னை நானும், அப்பாவும் தொடர்ந்து வேலைக்கு அனுப்பியிருப்போம் என்றா நினைத்தாய்?

வசுந்தரா அதன் பிறகு சஞ்சனாவின் பேச்சை கேட்கவேயில்லை.

சஞ்சனாவின் இதயம் தாயின் முடிவை அறிந்த பின்பு, டமார், டமார் என்று வெளியே குதித்துவிடும் போல் அடித்தது.

கடவுளே!

கடைசி நிமிடத்தில் காலைவாரிவிட போகிறான்.

அவனை அவமானப்படுத்தியதிற்கு, குடும்பமேயல்லவா அவமானப் பட போகிறது.

வசுந்தராவின் சந்தோஷத்தையும், பெருமையையும் கண்டு சஞ்சனாவிற்கு எரிச்சலாக இருந்தது.

அடுத்த மாதம் கல்யாண மாதம், மாத தொடக்கத்திலேயே திருமணம் வைத்துவிடலாம் என்று வீட்டில் பேசி முடிவெடுத்தார்கள்.

மேலே ஏதாவது பேசினால் வாயில் பிளாஸ்டர் போட்டு மூடிவிடுவேன் என்று மிரட்டல் தான் கிடைத்தது.

தந்தையோ, எல்லாம் சரியாப் போகும், நேற்று நானே போய் அவளுடைய பெற்றோரிடம் பேசிவிட்டு வந்தேன். நல்ல பாரம்பரியமான குடும்பம். நீ எப்பொழுது வீட்டிற்கு மருமகளாக வருவாய் என்று ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

காது கொடுத்து கேட்க தயாராகயிருந்த தந்தையிடம், முழு கதையையும் சொல்லி விடலாம் என்று இவள், நந்தாவும் பிரேமும் இருந்த நெருக்கம் பற்றியும், இவள் சும்மா விளையாட்டிற்காக நந்தாவிடம் ஏதோ கூற அதை பிரேம் கேட்டு விட்டான். அதனால் கோபத்தில் பழி வாங்குகிறான். இது நிஜம் அல்ல என்று எடுத்துச் சொன்னாள்.

இல்லாததையும், பொல்லாததையும் நினைக்காதே. அவன் நாடகமாடுகிறான் என்றால், அவர்கள் குடும்பமே நாடகமாடுமா?

கல்யாண வேலை எல்லாம் தொடங்கியாகி விட்டது.

நீ ஆபீஸ் போகவேண்டாம் என்று மாப்பிள்ளை சொல்லிவிட்டார்.

மாப்பிள்ளை.

பிரேம் அவளின் மாப்பிள்ளை. அவள் அடக்கியும், கேளாமல் கண்களில் நீர் கோர்த்தது.

கடைசி முயற்சியாக சித்தியை பிடித்து, நடந்த விஷயத்தை, பிரேம்-நந்தா விஷயத்தை சொன்னாள் சஞ்சனா. ''ஸோ, யூ ஆர் இன் லவ் வித்



''வில்லன் நடிகர்னு தெரியாமலேயே கல்யாணம் பண்ணிக்கிட்டேன்''

''என்னடி ஆச்சு... ஏன் இப்படி சலிச்சுக்கிறே?''

''பின்னே என்னடி - தினம் ஒரு ஜாக்கெட்டை கிழிச்சிடுறார்டி - எனக்கு ஜாக்கெட் வாங்கியே கட்டுப்படியாகலைடி!''

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி.



ஹிம்'' என்று ஒற்றை புருவம் தூக்கி அருணா கேட்க, இவ்வளவு நேரம், அவனை வெறுக்கறேன், நாடகமாடுகிறான் என்று இவள் கதையாக சொல்லிக் கொண்டிருக்க, சித்தி அவளின் உள் மனதை ஒன்றாக எடை போட்டு விட்டார்.

வேறுவழி ஒன்றும் புரியாமல் இனி சண்டைகாரன் காலில்' விழ வேண்டியது தான் என்று முடிவோடு, அவள் கனத்த இதயத்தோடு பிரேமிற்கு போன் போட்டாள். பேசினாள்.

''ப்ளீஸ், எத்தனை முறை வேண்டுமானாலும் ஸாரி கேட்டுக் கொள்கிறேன். அன்று நான் நந்தாவிடம் பேசியே இருக்க கூடாது. தவறு தான்.

அதற்காக நீங்கள் செய்வது கொஞ்சமும் சரியில்லை. நீங்கள் விளையாட்டாய் சொன்னதை எல்லோரும் நம்பிக்கொண்டு கல்யாண வேலையில் இறங்குகிறார்கள். அப்படி ஒரு கல்யாணம் நடக்கப்போவதில்லை என்று வீட்டில் சொல்லி விடுங்கள்.

மறுமுனையில் கனத்த நிசப்தம் நிலவியது. அவனை கல்யாணம் செய்வது அவளுக்கு இவ்வளவு கஷ்டமாக இருக்கும் என்று அவன் நினைக்கவில்லை. தொண்டையை செருமி,

'உன் அப்பா அம்மாவிடம் நீ எதையும் சரியாக விளக்காததால், இந்த விஷயம் லேடீஸ் கிளப்பிலிருந்து, அது வழியே ஆபீஸ், எங்கள் உறவினர் நண்பர்கள் வரைக்கும் பரவியாகி விட்டது. உன் பெற்றோர் வீடு வந்து என் அப்பா அம்மாவிடமும் பேசி விட்டார்கள். இனி எதுவும் என் கையில் இல்லை. நடப்பது நடக்கட்டும்.' என்று சொல்லி சட்டென்று போனை வைத்து விட்டான்.

இதற்கென்ன அர்த்தம்? எல்லாம் இவள் மாட்டி வைத்த இக்கட்டினால் வந்த வினை என்று கரித்துக் கொட்டுகிறானா? அதன் பிறகு அவள் பிரேமை சந்திக்கவில்லை.

கல்யாண வேலைகள் எல்லாம் தாம்தூம் என்று நடந்தன. பிரேமின் வீட்டில் இருந்து, அதற்குள் நான்கு முறை அவன் பெற்றோர்கள் வந்து போனார்கள். மருமகளை பார்க்க, கூரை பட்டு வாங்க கூட வா என்று, போவாளா என்ன சஞ்சனா? நாடகத்தை நடத்துபவனே போகட்டும்.

மகள் இடக்குமடக்காக எதையாவது பேசி தொலைக்கப்போகிறாள் என்று அவர்கள் வரும் போது சஞ்சனாவின் அருகிலேயே இருந்தார் வசுந்தரா.

ஆனந்த் போனில் குதியாட்டம் போட்டான். 'எனக்கு எப்பவுமே டவுட் இருந்தது சஞ்சனா. உங்களுக்குள் ஏதோ விஷயம் இருக்குன்னு, .....என் அம்மாவுக்கு கூட சந்தேகம். அன்று ஒரு நாள் நீ வீட்டுக்கு வந்து போனதில் இருந்து நிறைய உன்னைப்பற்றி விசாரித்தார்கள்.'- ஏதேதோ பேசினான் அவன். சஞ்சனாவிற்கு எல்லாம் கனவு போலவே இருந்தது. நம்பவே முடியவில்லை.

**25**

கப்பலில் ஆறு மாத காலமாக உலகம் சுற்றிய பட்டம்மா சரியாக சஞ்சனாவின் கல்யாணத்திற்கு இரண்டு நாள் முன்பு சென்னை வந்திறங்கினார். சஞ்சனாவிற்கு திருமணம் என்ற அளவில் மட்டும் அவருக்கு செய்தி போயிருந்தது.

ஹார்பருக்கு பிரபாகர் குடும்பமாக வந்து பட்டம்



மாவை வரவேற்று வீட்டிற்கு அழைத்துச் செல்ல வந்திருந்தார். பட்டம்மா சந்தோஷ ஆர்ப்பரிப்புடன் எல்லோரையும் அணைத்துக் கொண்டார். சஞ்சனாவிற்கு கூடுதல் அணைப்பு முத்தங்களுடன்.

பட்டம்மாவிற்கு மட்டும் நாளுக்கு நாள் வயது குறைகிறதோ என்று சஞ்சனாவிற்கு சந்தேகமாக இருந்தது. ஆறு மாதம் முன்பு கப்பலில் ஏறும் போது பார்த்தது. அப்பொழுதுக்கு இன்று பார்க்கையில் இன்னும் இளமை. பட்டம்மா எப்பொழுதும் சஞ்சனாவின் விரிந்த கண்களில் சங்கதியை பிடித்து விடுவார்.

''கப்பலிலேயே பியூட்டி பார்லர், ஜிம், ஸ்விம்மிங்ஃபூல் எல்லாம் இருக்கிறது சஞ்சு. நான் பாதி நேரம் பொழுது போகாமல் ப்யூட்டி பார்லரில் தான் நேரம் கழித்தேன்'- என்று கண் சிமிட்டினார்.

பரத்தை பார்த்தவருக்குத்தான் வெகு ஆச்சர்யம். 'நான் போகும் போது சின்ன பையனாக குட்டியோண்டு இருந்தான். இந்த ஆறு மாதத்தில் என்னடா உன் அப்பா ஹைட்டுக்கு வளர்ந்து விட்டாய்? ஐயோ மீசை வேறு முளைக்குது என்று அவள் தோளில் கை போட்டு ஆச்சரியப்பட்டார்.

பாரீஸ்லே உனக்கு வாங்கின டிரஸ்ஸை என்ன பண்ணறதுடா? கையும், காலும் உள்ளேயே போகாது...- என்று கிண்டலடித்தார்.

'கல்யாண வேலை எல்லாம் எப்படி போயிட்டிருக்கு பிரபா? என்று பிரபாகரிடம் கேட்டவர், 'வசு போன தடவை பார்த்ததற்கு இன்னும் வெயிட் போட்டிருக்கே, நான் சொல்லித்தந்த எக்ஸர்சைஸை பண்ணவில்லை?'- என்று கேள்வி கேட்டார்.

வீட்டிற்கு வந்த பிறகும் அவர் ஒ ோ அரட்டை தான். பாரிஸ், இத்தாலி, ஜெர்மனி என்று பார்த்த இடங்களைப்பற்றி சொல்ல நிறைய கதை அவருக்கிருந்தது. அமெரிக்காவில் மகனை, குடும்பத்தோடு பார்த்து விட்டு வந்த சந்தோஷம் தான் எல்லாவற்றை விட மிகுந்திருந்தது.

அடுத்து பலூன்லே உலகம் சுத்தலாம்'ன்னு நானும், இன்னொரு ப்ரண்ட்டும் ப்ளான் போட்டிருக்கோம் என்று அவர் சொல்ல, வசுந்தரா வாய் பிளந்தார்.

சஞ்சனாவிற்கு உதடு சின்ன சிரிப்பாக விரிந்தது. பட்டம்மா ஒன்றையும் விட்டு வைக்க மாட்டார். அவரின் வயது சாதிப்பதற்கு, தடை என்று நினைப்பதுமில்லை. போ வருஷம் இமயமலைக்கு, முப்பது நாள் 'டிரெக்கிங்' வேறு போய் சாதனை படைத்து விட்டு வந்தார். சுறுசுறுப்புக்கு பட்டம்மா தான் சரியான உதாரணமாக இருக்க முடியும் என்பது சஞ்சனாவின் கருத்து.

''சஞ்சு கல்யாணத்திற்கு எனக்கும் ஷாப்பிங் போக வேண்டும். அவளுக்கும் கிப்ட் வாங்க வேண்டும்'' என்று பிரபாகரிடம் சொல்லிக் கொண்டு சஞ்சுவையும் கூட கூப்பிட்டுக் கொண்டு, ஸ்பென்சர் பிளாசா, தி.நகரில் என்று சுற்றி ஷாப்பிங் முடித்தார். ஷாப்பிங் எல்லாம் முடிந்தவுடன்,

''என்னோட வாயேஜ் வந்த வெளிநாட்டு ப்ரண்ட்ஸ் பக்கத்தில் இருக்கிற நட்சத்திர ஹோட்டலில் தான் தங்கியிருக்காங்க சஞ்சு. நம்ம ஊர் புகழ்



சந்தன சிலைகள் கிப்ட்டாக வாங்கியது அவர்களுக்கு கொடுக்கத்தான் அவங்களை பார்த்துட்டு, உன்னையும் அறிமுகம் செய்து வைக்கிறேன்.

உன்னை பற்றி நிறைய பேசி பேசி உன்னை பார்க்கணும் என்று அவர்களுக்கு ஆசை அதிகம்''- என்று அந்த பெரிய நட்சத்திர ஹோட்டலுக்குள் சஞ்சனாவை அழைத்துச் சென்றார் பட்டம்மா.

''ப்யூட்டிஃபூல் லொகேஷன், ப்யூட்டிஃபுல் ஹோட்டல்''- என்று ஹோட்டலுக்குள் நுழைந்தவர் ரிசப்ஷனில் அவரின் ப்ரண்ட்ஸ் பெயர் சொல்லி எந்த ரூம், இருக்கிறார்களா? என்று தனக்கு வேண்டிய விஷயங்களைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

'வா சஞ்சு. ரூமில் இருக்கிறார்களாம். எயிட்த் ஃப்ளோர்' என்று லிப்ஃட்க்காக அந்த பிரம்மாண்டமான ஹோட்டலில் எதிர்புறமாக நடந்தவர், கண்கள், அந்த அழகான வரவேற்பு ஹாலில் அமர்ந்திருந்தவனைக் கண்டதும் 'சஞ்சு, அது... பிரேம் தானே', என்று ஆர்வமுடன் சிறிது சத்தம் போட்டு கேட்க, வெளி நாட்டிலிருந்து வந்து அந்த ஹோட்டலில் தங்கியிருக்கும் நண்பனுக்காக காத்திருந்த பிரேமிற்கும், பட்டம்மாவின் குரல் கேட்டது. சடாரென்று திரும்பி பார்த்தான்.

'நைஸ் மீட்டிங் யூ பிரேம்'- என்றபடி வேக வேகமாக நடந்து வந்து, எழுந்து நின்ற அவனுடைய கைகளை குலுக்கினார் அவர்.

ஐயோ பட்டம்மாவிடம் பிரேம் பற்றி ஒன்றும் சொல்லாதது சஞ்சுவிற்கு அப்பொழுது தான் இடித்தது. பெரிய பணக்காரராமே உன் அவர், எப்படியிருப்பார்? தினம் போன் பேசுவானா? வெளியே எங்காவது போனீர்களா? என்று பட்டம்மா தொண தொண என்று கேட்டுக் கொண்டு தான் இருந்தார்.

சஞ்சனா தான் இருந்த மன நிலையில் அவரிடம் ஒன்றும் பகிர்ந்துக் கொள்ளாமல் மௌனித்திருந்தாள். பிரேம் அவளை ஆசைக்கொண்டா மணக்கிறான்? இந்த இக்கட்டில் அவனை விழ வைத்தவள். அவன் அல்லவா? அவனின் வாய் துடுக்கல்லவா? என்பது சஞ்சனாவின் எண்ணம்.

'பிரேம் எப்படியிருக்கீங்க? நல்ல விஷயம் நடக்கும் போது தான் மீட் பண்ணறோம்....சஞ்சனாவிற்கு திருமணம் நிச்சயித்து விட்டார்கள் தெரியுமா? சஞ்சு கல்யாண கார்டு வைச்சிருக்கியா? எடு எடு, அதோடு உன்னிடம் பிரேம் பற்றியும் ஒரு விஷயம் சொல்ல போகிறேனாக்கும்''- என்று பிரேமை பார்த்து கண்கள் சிமிட்டி சொன்னார்.

பிரேமும், சஞ்சனாவும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி அசையாமல் நிற்க,

'சஞ்சு கல்யாண கார்டு...'- என்று கைகளை அவள் புறமாக நீட்டியவர், சஞ்சனாவின் பார்வையையும், பிரேமின் பார்வையையும் அப்பொழுது தான் கவனித்தார். இருவரையும் மாறி மாறி பார்த்தவர் கண்களில் நம்பவே முடியாத அதிர்ச்சியிருந்தது.

அப்படியும் இருக்குமோ? என்று தனக்குள் சிந்தித்தவர், பையிலிருந்த கல்யாண கார்டை உடனே எடுத்து பார்த்தார். அதில் பிரேமின் பெயரைக் கண்டதும் அவரால் அடக்கி கொள்ள முடியவில்லை.

இது அவர் முற்றிலும் எதிர்பாராதது உணர்ச்சிவசத்தால், கண்ணீர்

பொங்கியது. கன்னத்தில் வழிந்த கண்ணீரை சுண்டியவர், பேசிய வார்த்தைகளில் குதூகலம் கொப்பளித்தது.

''ஆகா, இதுவல்லவா கடவுள் அற்புதம்.. ரொம்ப சந்தோஷமாயிருந்தது பிரேம்.''- என்று அவர் சொல்ல, அவனும், பட்டம்மாவும் அறிந்த ரகசியம்....! காட், பட்டம்மா எதையாவது சொல்லி விடுவாரோ, என்று பதட்டமடைந்தான் பிரேம்.

'உண்மையான காதல் எத்தனை வருஷம் காத்திருந்தாலும் ஜெயிக்கும் என்று நான் அன்று சொன்னது சரி தானே பிரேம்.''

இந்த விளையாட்டு எங்கே போய் முடியப்போகிறதோ என்று கவலையில் நின்றிருந்த சஞ்சனா, பட்டம்மாவின் பேச்சில் காதுகளை மிக கூர்மையாக்கினாள்

'ஷ் ஷ்... பட்டம்மா. ப்ளீஸ், இது... பிறகு பேசலாம்... ப்ளீஸ்'- முகம் சிவக்க சஞ்சனாவை ஒரு கண் பார்த்து விட்டு முணுமுணுப்பாக பிரேம் கெஞ்சியது அவருக்கு இருந்த சந்தோஷத்தில் முக்கியமான விஷயமாகவே தெரியவில்லை. அவரின் சந்தோஷம் உச்சியில் இருந்தது.

'பதினெட்டு வயது ஆகும் முன்பே சஞ்சனாவை கல்யாணம் செய்து கொள்வாயா? என்று கேட்டீர்களே, அப்போதே செய்து வைத்திருந்தால், இன்று நீங்கள் பெரிய குடும்பஸ்தன் தெரியுமா? இவ்வளவு நாள் பேச்சுலர் லைஃப் என்ஜாய் பண்ணியதற்கு எனக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்'' என்றவள் பிரமித்து நின்றிருந்த சஞ்சனாவை பிரேம் அருகில் நிறுத்தி 'ஷோ க்யூட் ஃபேர், என்னை அழகான ஜோடி' என்று சந்தோஷத்தில் மீண்டும் மீண்டும் கூற, சஞ்சனாவிற்கு தெளிவாக ஒன்றும் புரியவில்லை. ஆனால் ஏதோ புரிந்தது போலவும் இருக்க, கண்களில் மின்னல் வெட்டியது.

'பட்டம்மா, என்ன... சொல்றீங்க. ப்ளீஸ் கொஞ்சம் புரியற மாதிரி சொல்லுங்களேன்'

பட்டம்மாவிற்கு அதிலும் சிரிப்பு,

'பிரேம் உன்னிடம் இன்னும் சொல்லவில்லையா? அன்று நீ அவரோட நியூ இயர்....

'பட்டம்மா... நோ... நாட் நௌவ்...'- என்று பிரேம் இடை புகுந்து வேகமாக சொல்ல, அவனின் முகச்சிவப்பில் சஞ்சனாவிற்கு மிகுந்த ஆர்வமுண்டாயிற்று.

எதை மறைக்க முயல்கிறான்?

பட்டம்மாவை நிறுத்த யாராலும் முடியவில்லை. 'பார்ட்டி முடிந்தவுடன் நைட், நீ வீட்டுக்கு போயிட்டிருந்த போது என்னை கல்யாணம் செய்து கொள்வாயா சஞ்சு என்று பிரேம் ரோட்டில் கத்திக் கொண்டிருந்தன.'

'நான் ஒன்றும் கத்தவில்லை'- அதிகப்படியாக இட்டுக்கட்டி சொல்லிய பட்டம்மாவிடம் மறுப்பாக முணுமுணுத்தான். இப்படியா போட்டுடைப்பது. அவன் முணுமுணுத்தது சஞ்சனாவிற்கு கேட்டது. ஒரு கணம் நின்று பின் வேகமாக துடித்தது. அந்த துடிப்போடு ''பிரேம் அப்படி கத்தி சொல்லவில்லை என்றால், விஷயத்தை சொன்னீர்கள் தானே. நிஜம் தானா?... பட்டம்மா சொல்வது நிஜம் தானா..., உங்களுக்கு என்னை



பிடிக்குமா? இப்போதும் பிடிக்குமா? மூச்சு வாங்க கேட்டாள் சஞ்சனா.

அவளுக்கு அறிய வேண்டியிருந்தது. சர்வ நிச்சயமாக அறிய வேண்டியிருந்தது.

சஞ்சனாவின் கேள்வியில் பட்டம்மா நெற்றியை சுருக்கி புரியாமல் பிரேமை பார்த்தார். உதட்டை கடித்தான் பிரேம். விரல்களால் முடியை கோதினான். கடவுளே... பிரேம்...., பிரேம் கூச்சப்படுகிறான். முகம் செக்கச் சிவந்து கிடக்கிறது. அவள் காண்பதென்ன கனவா...?

மெல்ல சஞ்சனாவின் கண்களை சந்தித்த பிரேம், ஒரு முடிவோடு, 'உன் மேல் காதல் இல்லாமலா, கண்ணாம்பூச்சி விளையாட்டு போல், கல்யாணம் வரை உன்னைக் கொண்டு வந்திருக்கிறேன்?' அவளின் கேள்விக்கு அவன் தந்த பதிலில் சஞ்சனா திக்குமுக்காடிப்போனாள்.

'ஓ... பிரேம்... பிரேம்...'என்று உணர்ச்சிவசத்தால் மாறிய குரலில் அவனை நெருங்க, கைகள் உயர்ந்து தன்னிச்சையாக அவன் கழுத்தில் கோர்க்க, பிரேமின் அணைப்பில் இருவருக்கும் இடையே காற்று கூட புக முடியாத அளவிற்கு நெருக்கம் உண்டாயிற்று.

'டூ யூ ஸ்டில் லவ் மீ சஞ்சு. ப்ளீஸ் டெல் மீ தட் யூ லவ் மி''- என்று அவள் காதுகளில் அவன் வார்த்தைகள் உராய்ந்ததில் சஞ்சனா மெய்சிலிர்த்தாள். அந்த சிலிர்ப்புடன் தலையை அசைத்து பதிலும் தந்தாள். தங்களுக்குள் சுற்றுப்புறம் மறந்து அவர்கள் மூழ்க,

'ஹய்யோ..., இது பொது இடம்ப்பா. டிக்கட் கொடுத்து காசு கலெக்ட் பண்ணினா சூப்பர் கலக்ஷன் கிடைக்கும்... வெரி இண்ட்ரஸ்டிங் என்று பட்டம்மாவின் குறும்பான குரல் கேட்ட சஞ்சனா வெட்கத்துடன் விலக, ஆனால் அவன் அவளை எங்கே விட்டான்.

'பட்டம்மா... நானும், சஞ்சுவும்... உங்களுக்கு ஆட்சேபனையில்லையென்றால்... ப்ளீஸ்... என்று பிரேம் சஞ்சுவை அவனுடன் அழைத்துச் சொல்ல கேட்க, அவர்கள் இருவரின் நெருக்கத்தை கண்டு, பட்டம்மா கண்கள் நடனமாடியது.

'ஆஹா.... கல்யாணம் நாளைக்கு தான். இதெற்கெல்லாம் நாள் நட்சத்திரம் பார்க்க வேண்டும், முக்கியமாக காத்திருக்க வேண்டும் பிரேம்... இன்னும் ஒரு நாள்.... இனி விட்டால் டேன்ஜரஸ், சஞ்சு ஓடிவா என்று அவள் கையை பிடித்து இவர் இழுக்க, அவளை விடாமல் முகமெல்லாம் சிரிப்பாக பிரேம் அணைக்க, அவளும் கூட இழைய கண் கொள்ளா காட்சி அது.



''நூறு வயசான எங்க தாத்தா தலையில் ஒரு வெள்ளை முடியைக் கூட பார்க்க முடியாது...!''

''அப்படியா... ஆச்சரியமா இருக்கே...''

''ஆமா... வழுக்கைத் தலையாச்சே...''

-ஆர்.சுப்பு, திருத்தங்கல்.



26

கல்யாண தினத்தன்று, வசுந்தரா மயக்கம் போடாத குறை தான். பிரேம், பிரேம் என்று எதற்கெடுத்தாலும் பெண் உருகி நின்ற கோலமும், சஞ்சு என்று அவன் கொஞ்சிக் கொண்டிருந்த அழகும், எத்தனையோ வருடங்களாக, உயிராய் பழகியிருந்த ஜோடியை போலல்வா இருந்தார்கள்.

நேற்று வரை என் பெண்ணுக்கு இந்த திருமணத்தில் இஷ்டமேயில்லை என்று இவர் சொன்னால், இவரை பைத்தியம் என்று தான் சொல்வார்கள். எப்படி இந்த மாயஜாலம்...? அன்று அவரால் நம்பவே முடியவில்லை. பிரபாகருக்கும் கூடத்தான்.

இரவின் தனிமையில் மணமக்களுக்கு பேச நிறைய விஷயங்கள் இருந்தது. 'என்னால் நம்பவே முடியவில்லை பிரேம். அப்பொழுதே என்னிடம் நிஜமாகவே 'அப்படிக் கேட்டீர்களா?'- அவன் நெஞ்சில் சுகமாக தலையை சாய்த்தபடி கேட்டாள் சஞ்சனா. அவள் எதை கேட்கிறாள் என்று புரிந்ததால்,

'ம்..ம், என்னால் வேறு என்ன செய்ய முடியும் சஞ்சு, அழகு பிம்பமாய் அடிக்கடி என் முன்னே வருகிறாய், வசியம் செய்கிறாய், கடைசியில் என் கன்னத்தில் வேறு முத்தமிடுகிறாய், இருந்தாலும் உனக்கு அந்த வயதில் நிறைய தைரியம் தான்'- அந்த நாளை நினைத்து சத்தமில்லாமல் குலுங்கி சிரித்தான் பிரேம்.

இப்படி எல்லாம் சிரிப்பானா? கண்கள் விரிந்தது சஞ்சனாவிற்கு.

'பட்டம்மா தான் இடையில் புகுந்து என்னை குழப்பி விட்டார்கள். நீ சின்ன பெண் அது... இது.. என்று. ஆனால் யோசித்துப் பார்த்தால் அது சரி என்று தான் எனக்கு தோன்றியது.

அந்த வயதில் காதல், உருவக்கவர்ச்சியில் தோன்றுவது சஞ்சு, அந்த மயக்கம் தீர்ந்தவுடன் உடைந்து போக கூடியது. அப்படி உடைந்தால் தாங்கும் மனநிலை எனக்கு இல்லை.

காத்திருந்தேன். உன்னை மீண்டும் பார்க்கும் வரை, அன்று உன்னை இண்டர்வியூவில் பார்க்கும் வரை உனக்காக காத்திருந்தேன் சஞ்சனா. நீ என் வாழ்வில் நிச்சயம் வருவாய் என்ற நம்பிக்கையில் காத்திருந்தேன்.'

'வந்தாய் நீ. அதன் பிறகு ஒரு நொடி காத்திருப்பது கூட பல யுகமாய் இருந்தது என்பது தெரியுமா? உனக்கு!'

'என்னைக்கண்டு நீ வேலையில் சேராதது குறித்து எனக்கு வருத்தம் இருந்தது. மீண்டும் உன்னை தந்திரமாக பேசி உன்னை வேலையில் அமர்த்த நான் பட்ட கஷ்டம். ஆனால் என்னைக்கண்டு நீ தூர தூர விலகிப்போவதைப் பார்த்ததும், என்னால் உன் மனதை கணிக்க முடியவில்லை சஞ்சனா.

உன் மனதில் இத்தனை வருடங்களுக்கு பிறகும், நான் இருக்கிறேனா? இல்லையா? என்று சரி வர தெரியாத பட்சத்தில் என் மனதை உனக்கு காட்ட எனக்கு எவ்வளவு பயம் இருந்தது தெரியுமா?

போதாதற்கு இந்த ஆனந்த். உன் துப்பட்டாவை பற்றிக்கொண்டு, உன்னையே சுற்றிக்கொண்டு வீட்டிலும் சஞ்சு, சஞ்சு என்று உன்னைப் பற்றி பேசிக்கொண்டு, எனக்கு அவன் மேல் பொறாமையாக கூட இருந்தது.



உனக்காக நான் இங்கே காத்திருக்க, நீயானால், என் நினைப்புடன் இருந்தது போல் எனக்கு தெரியவில்லை. பட்டம்மா சொன்னது போல் அது பருவத்தின் வெறும் உடற்கவர்ச்சி மட்டும் தான் என்று நிரூபிப்பது போல, நீ ஆனநத்தை நேசிக்கிறாய் என்ற விஷயம், என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

அதனாலேயே அவனை உடனே உன் வழியில் இருந்து அப்புறப்படுத்த வேகவேகமாக அவனது திருமண பேச்சை கொண்டு வந்தேன்'- முகம் அவமானத்தில் லேசாக சிவக்க அவன் சொல்ல, சஞ்சனா அவனிடமிருந்து விலகி அன்னாந்து அவன் முகம் பார்த்தாள்.

'ஆனாலும் பிரேம், அவனுடைய விருப்பம் கேட்காமல், அதற்கு மதிப்பளிக்காமல், அவனுக்கு திருமணம் பேசியது ரொம்ப தப்பு. எனக்கு அதில் உடன்பாடில்லை.

'தவறு தான். ஆனாலும் உனக்கு ஆனந்த் பற்றி சரியாக தெரியாது. நிலையான மனமும் அவனுக்கு கிடையாது. இப்பொழுது அமெரிக்காவில் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்று தெரியுமா?

'என்ன?' என்று கேட்டு விட்டு மீண்டும் அவன் அருகில் ஒட்டி அமர்ந்தாள் சஞ்சனா. அவள் நெற்றியில் முத்தமிட்டு பின் தோளோடு தோளாக அணைத்துக்கொண்டு தொடர்ந்தான் பிரேம்.

'நான் அவனுக்கு கல்யாணம் பேசியிருந்த நிஷாவை அவள் வீட்டில் பார்த்ததில் இருந்து, நீங்கள் காதலிக்கும் பெண்ணையே நீங்கள் மணந்துக் கொள்ளுங்கள் என்று கண்களில் நீருடன் அவள் சொன்னதிலிருந்து, இவனுக்கு அவள் மேல் மிகவும் இணக்கம். அது மெதுவாக காதலாகவே உருவெடுத்து, இப்பொழுது இருவரும் கம்ப்யூட்டரில் சாட்டிங் போனில் பேச்சு. அவள் அப்பா மீண்டும் ஓடி வந்து என்னிடம் முறையிட்டார்.

அங்கே அவன் இப்போது மியூசிக் காலேஜும் ஒழுங்காக போவது கிடையாது. எனக்கு பயந்து அங்கிருந்து கொண்டே, இங்கே காதல். என்னிடம் எப்படி சொல்வது என்று பயம். ஆனந்தை பொறுத்தவரையில் அவனைக் கொஞ்சம் நம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

இன்னும் அவனுக்கு அந்த வயதிற்குரிய மெச்சூரிட்டி வரவில்லை சஞ்சனா. எது சரி, எது தவறு என்று நிறைய குழப்பம் உண்டு. உண்மையில் கல்யாணம் செய்து வைத்து விட்டால் வாழ்க்கையின் அர்த்தம் புரிந்து கொஞ்சம் பொறுப்புள்ளவனாக மாறி விடுவான்.

சஞ்சனாவிற்கும் பிரேம் பேசியது அர்த்தம் உள்ளதாக தெரிந்தது. ஆனந்தை அந்த மிலிட்டரி கட்டுக்கோப்பில் வைக்கவில்லை என்றால், சிகரெட், மது, குட்டி என்று கண்டிப்பாக திசை திரும்பியிருப்பான். அண்ணனின் மேல் உள்ள பயத்திலேயே அவன் காலேஜ் படித்து முடித்தது அவளுக்கும் தெரிந்த விஷயம் தானே.

சஞ்சனாவின் முகம் லேசாக சோர்ந்தது.

'அடிக்கடி ஆண்களுக்காக அலைகிறேன் என்று நீங்கள் சொல்லும் போது எனக்கு எப்படி இருக்கும் தெரியுமா?'

'நீ அந்த நியூ இயர் கொண்டாட்டத்தில் ஆண்களுடன் சேர்ந்து ஆடிய ஆட்டத்தில் எனக்கு எப்படி இருந்திருக்கும் என்று நினைக்கிறாய்?'

'அது உங்கள் பொறாமையை தூண்ட தோழியர் சொல்லிக் கொடுத்த வித்தை. அது வொர்க் அவுட் ஆகியிருக்கிறதே. என் ப்ரண்ட்ஸ்களும் ஞானி தான் போல.' என்று கலகலவென்று சிரித்தாள் சஞ்சனா,

தொடர்ந்து 'அதன் பிறகும் நிறைய தடவை என் மனம் நோக அதே போல் பேசியிருக்கிறீர்கள்.'

'உன் மனது தெளிவாக தெரியாததில் வந்த கோபம், பொறாமை, இயலாமை எல்லாம் சேர்ந்து என்னை ஒரு வழி பண்ணி விட்டது. சாரி சஞ்சனா.'- என்று வருத்தப்பட்டவன்,

'உன் மனதில் அன்றும், இன்றும், என்றும் நான் தான் என்று தெரிந்த பின், நான் கொண்ட பொறாமைக்கு அர்த்தமேயில்லாமல் போன பிறகு என் மனம் எவ்வளவு லேசாக இருக்கிறது தெரியுமா?'

'அப்போ நந்தா?'

'அவள் நல்ல சிநேகிதி. நான் உன்னை நேசிப்பதை முதல் நாள் உன் மேல், நான் பதித்த முதல் பார்வையிலேயே கண்டு கொண்டவள், நீ விலகிப் போவதை கண்டு, எனக்கு உதவுவதாக உன் பொறாமையை தூண்ட அவள் அன்று உன்னிடம் பேச, நீ கொடுத்த பதிலடி...', வாய் விட்டு சிரித்தான் பிரேம்.

'உன் ஆழ்ந்த காதலின் ரெஸ்பான்ஸ் அவளிடம் சரியாக இல்லை என்று நீ உளறிகிட்டு இரு. ஆனால் சஞ்சு ஊரெல்லாம் தன் காதலை சொல்லிக்கொண்டு திரிகிறாள்.'- என்று நந்தா அன்று என்னிடம் சொல்லி வயிற்றை பிடித்துக் கொண்டு சிரித்த சிரிப்பு.

'அன்று நந்தாவிடம் சொன்னதை, இன்னொரு முறை சொல்லேன்...' கண்கள் குறுகுறுக்க ஆவலாக பிரேம் கேட்க,

'ஆனால் அன்று... அத்தையும் அல்லவா, அவள் மாடலிங் பார்க்க வந்திருக்கிறார்கள். ஒரு வேளை நந்தா மேல் அவர்களுக்கு இஷ்டமோ?''

''நந்தா மேல் மட்டுமில்லை. அன்று அங்கு வந்திருந்த எல்லா மாடல்கள் மேலும் அம்மாவுக்கு இஷ்டம் தான். அதனால் எல்லோரையும் என்னால் திருமணம் புரிய முடியுமா?'- கண்களில் சிரிப்புடன் அவன் சொல்ல,

புரியாமல் சஞ்சனா முறைக்க,

'அந்த பேஷன் ஷோவில் காஸ்டியூம் டிசைனர் அம்மா தான். மாடல் கோ ஆர்டினேட்டரும் அம்மா தான். அது அவர்கள் ஃபீல்டு சஞ்சு.'

மீண்டும் ஏதோ கேள்வி கேட்க, சஞ்சு வாயை திறக்க, அவன் செய்கையால் தடுத்தான்.

'இன்று முழுவதும் கேள்வி, பதிலில் என்னை ஒட்டி விடலாம் என்று நினைத்தாயா சஞ்சு... ஆனால் நான் அதற்கு ரெடியில்லை சஞ்சு.'- கண்களில் மையலுடன், நெஞ்சு நிறைய காதலுடன் அவன் அவளை பார்க்க, சஞ்சனாவின் இதயம் வேகமாக துடிக்க பிரேமின் கைகளும், உதடுகளும் எல்லையை மீறத் தொடங்கின.

சஞ்சனாவின் முகம் ரோஜாப்பூவாக விரிந்து சிவந்து போயிற்று. அங்கே காத்திருந்த காதல் ஜெயித்தது.

**(முற்றும்)**